


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகில்வண்ணனின்

# இராசாத்தி

கலாபூசணம்

**வே. சண்முகநாதன்**

பிரசுரம்

நெசவு நிலைய வீதி,
பாண்டிருப்பு-01.
கல்முனை.
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசாத்தி

## Rasaththi (Novel)

Author's 17th publication

© 2017, Author.

**Author:**

**Mukilvannan**

Kalabhushanam V. Shanmuganathan

**ISBN:** 978 - 955 - 38729 - 0 - 6

| | |
|---|---|
| **ஆசிரியர் :** | **முகில்வண்ணன்**<br>கலாபூசணம் வே. சண்முகநாதன் |
| **முதல் பதிப்பு :** | 2017 டிசம்பர் (2048 மார்கழி) |
| **அழுதல ISBN :** | 978-955-38729-0-6 |
| **முன்னட்டை, கணினி நெறியாள்கை :** | சு. உமாச்சந்திரன் |
| **அச்சகம் :** | A.J. பிறிண்ட்ஸ். தெஹிவல.<br>இலங்கை. |
| **பக்கங்கள் :** | viii + 121 |
| **விலை :** | ரூபா. 300.00 |
| **வெளியீடு :** | கண்மணி பிரசுரம்.<br>கல்முனை. இலங்கை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை..

எழுத்தாளர் முகில்வண்ணன் அவர்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக எழுதி வருகின்றார். அண்மைக் காலங்களிலும் இவரது ஆக்கங்கள் தேசிய பத்திரிக்கைகளில் பிரசுரமாவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இவரிடமுள்ள ஆக்கங்களை நூலாக்கம் செய்தாலே பல புத்தகங்களை உருவாக்க முடியும். இருந்த போதும் தொடர்ந்து எழுதி வரும் இவர், தற்போது எழுதுவதை குறைத்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

90ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேசிய பத்திரிக்கையில் தொடராக வெளிவந்த, 'இராசாத்தி உன்னைக் காணாத நெஞ்சு' எனும் தொடர்கதையையே தற்போது அவர், 'இராசாத்தி' எனும் பெயரில் தனது 17 ஆவது புத்தகமாக வெளியிடுகின்றார். இம்முயற்சியில் நாமும் அவருடன் கைகோர்த்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

1981ஆம் 82ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடைபெற்றதாக அவருடைய கதைக்கள காலப்பகுதி காணப்படுகின்றது. அன்றைய கள நிலைமைகளை இப்போது 50 வயதைக் கடந்துள்ளவர்களின் மனக்கண் முன்னே இந்நாவல் கொண்டு வரும் என்பது திண்ணம்.

அன்றைய இளைஞர், யுவதிகளின் காதல் கதைகளை மீட்டிப் பார்க்கக் கூடியதாகவும் இன்றைய இளைஞர்களுக்கு அக்காதல் அனுபவங்களை உணர்த்தக் கூடியதாகவும் அமையும் என்பதனால் இந்நாவலை வெளியிடுவதில் பெருமகிழ்வுறு கின்றோம்.

உமா சந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனதுரை..

நான் எழுதிய நாவல்களில் இதுவும் ஒன்று. இந்நாவல் *'வீரகேசரி'*யில் தொடராக வெளிவந்தது. அப்போது இதற்குக் கொடுக்கப்பட்டிருந்த தலைப்பு, 'இராசாத்தி உன்னைக் காணாத நெஞ்சு' என்று இருந்தது. இதனையே இப்போது சுருக்கி 'இராசாத்தி' என்று வைத்திருக்கிறேன்.

இந்நாவல், இயக்கப் பிரச்சினை நடந்த காலத்தில் நடைபெற்றதாக எழுதியிருந்தேன். இது வெளிவந்த போது, சில பகுதிகளை பிரச்சினைக்குரிய பகுதிகள் என்று பத்திரிக்கை ஆசிரியர் நீக்கி இருந்தார். இப்போது நானும் அவற்றை விட்டு வைத்திருக்கிறேன்.

பல நாவல்கள் எழுதி இருக்கிறேன். அவற்றில் பல நூலாக்கம் செய்யப்பட்டு வெளி வந்திருக்கின்றன. இன்னும் வெளிவராத நாவல்கள் பல இருக்கின்றன. அவற்றை நூலாக்கம் செய்யும் பணியில் இறங்கி இருக்கிறேன். அவற்றில் ஒன்றுதான் இப்போது உங்கள் கரத்தில் தவழும் இந்நூல்.

இந்நூல் கற்பனைக் கதைதான் என்றாலும் இதில் பல உண்மைச் சம்பவங்களும் சேர்க்கப்பட்டு இருக்கின்றன. இதனால் இக்கதை வெளிவந்த போது, நல்ல பாராட்டைப் பெற்று இருந்தது. இப்போது எழுதுவதை நிறுத்தி விட்டு, எழுதியவற்றை நூலாக்கம் செய்யும் பணியில் இறங்கி இருக்கிறேன். இந்த வரிசையில் இன்னும் சில நூலாக்கம் பெறலாம்.

நான் பெரும் சிரமப்பட்டு எழுதி பத்திரிக்கையில் வெளி வந்த பின்னர் அவற்றை பெரும் சிரமத்துக்கு மத்தியில் நூலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடுகிறேன். இவற்றிற்கு ஆதரவு தந்து உதவ வேண்டியது வாசகர்களின் கடனாம்.

இவற்றில் ஏதும் பிழைகள் இருந்தால் சுட்டிக் காட்டுங்கள் திருத்திக் கொள்கின்றேன். அதுமட்டுமல்ல, இதற்கு நீங்கள் தரும் ஆதரவு தான் ஏனைய நூல்களையும் வெளியிடுவதற்கு எனக்கு உந்து சக்தியாக இருக்கும்.

இக்கதையை தொடராக வெளியிட்ட வீரகேசரி பத்திரிக்கைக்கும் அதன் ஆசிரியருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூலை விலை கொடுத்து வாங்கிப் படிக்கும் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எனது இனிய வாழ்த்துக்கள் உரித்தாகுக. அன்புடன்,

**முகில்வண்ணன்**
**"வித்தகர்"**
**"கலாபூசணம்"**
**வே.சண்முகநாதன்**

**"இலக்கிய பவன்"**
நெசவு நிலைய வீதி,
பாண்டிருப்பு 01.
கல்முனை. இலங்கை.

தொலைபேசி: +94 67 2229948
கை. பேசி: +94 77 6078786

மின்னஞ்சல்: *info@shanmukil.com*
*shanmukil@yahoo.com*

இணையத்தளம்: *www.shanmukil.com*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

நாடறிந்த எழுத்தாளர் கலாபூசணம் வித்தகர் என்றெல்லாம் பேசப்படும் 'முகில்வண்ணன்' எனும் புனைபெயருடன் கடந்த 57 வருடங்களாக ஈழத்து இலக்கியவானில் உலாவரும் திரு.வே. சண்முகநாதன் எழுதிய 17ஆவது நூலான 'இராசாத்தி' என்ற நாவல் ஜனரஞ்சகமானது.

'முகில்வண்ணன்' தமிழ் வாசகரிடையே இடையீடின்றி நித்தமும் வாழ்ந்து கொண்டிருக்கும் பெயராகும். ஈழத்து வட்டாரச் சொல் தேடுவோருக்கும் மண்ணோடு குழைந்த பழமொழிகள் தேடுவோருக்கும் ஊற்றுக்கண்ணான இலக்கியம் படைத்த பெயராகும்.

வெள்ளுடையான், வெண்உள்ளம் கொண்டவன் முகில்வண்ணன். தனிசிறந்த ஓர் ஆன்மீகவாதியாக நல்ல சமூக சேவையாளனாக கல்முனை வாழ் தமிழ் மக்களின் இலக்கியக் காவலனாக திகழ்ந்து பரிணமித்து வருகின்றார்.

பொறியிலாளரான முகில்வண்ணனின் 130 பக்கங்களைக் கொண்ட மிகவும் கனதியான இந்த நாவல்; கல்முனை கண்மணிப் பிரசுரமாக வெளிவந்துள்ளது.

எழுத்தாளர் முகில்வண்ணன் பஞ்சபாண்டவர் புகழ்பாடும் வரலாற்று நாயகி திரௌபதை குடிகொண்டிருக்கின்ற கல்முனை பாண்டிருப்பிலே பிறந்து நாடறிந்த எழுத்தாளராக தடம் பதித்தவர்.

இவர்திறன் கண்டு பொறாமைப்பட்ட எழுத்தாளர்கள் உள்ளனர். அவர்கள் தினமும் தன்னைப் பற்றிப் பீற்றிக் கொண்டு வருகின்ற அதேவேளை முகில்வண்ணனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாக சலனமற்று ஆழமான இலக்கிய நதியாக ஓடிக் கொண்டிருக்கிறார்.

எழுத்துலகில் 50 ஆண்டுகளுக்கு மேலான சாதனையுடன் வலம் வருவதென்பது சாமானியமானதொன்றல்ல. அப்படிப்பட்ட முகில்வண்ணன், 57 வருடங்களாக எழுதிவரும் ஒரு மும்மொழி வல்லுனர். 3 மொழிகளிலும் படைப்புகளைப் படைத்து விருதுகளும் பட்டங்களும் பெற்றுள்ளார். அவரது படைப்புகள் விருதுகளைப் பெற்றிருக்கின்றன. பரிசுகளைப் பெற்றிருக்கின்றன. பட்டங்களைப் பெறவைத்திருக்கின்றன.

*'தான்அறிந்த நல்லவற்றை பிறருக்கும் தெரியப்படுத்த வேண்டும். இல்லையேல் முன் ஏழு பிறவிக்கும் பின் ஏழு பிறவிக்கும் பாவங்கள் சூழும்'* என மகாபாரதம் கூறிநிற்கிறது. அதற்கு முன்னுதாரணம் இவர்.

இவரொரு பல்பரிமாண ஆளுமை பொருந்திய எழுத்தாளர். அதாவது அவரொரு கவிஞராக, நாவலாசிரியனாக, சிறுகதை எழுத்தாளனாக, சிறுவர் இலக்கியப் படைப்பாளியாக, வரலாற்றாசிரியராக 1970களிலிருந்து எழுதிக்குவித்து வருகிறார். ஆனால் அமைதியாக, ஆழமாக, ஆமையாக.

கிழக்கிலங்கையில் நாவல் எழுதுபவர்கள் குறைவு. அமரர் அ.ஸ.அப்துல்சமது, அன்புமணி செ.குணரெத்தினம், இரா.கிருஸ்ணபிள்ளை வரிசையில் முகில்வண்ணனும் முதன்மை வகிப்பது புதுமையல்ல.

இலக்கியத் துறையில் பிரபலத்தை விளம்பரத்தை விரும்பாத இவர் தானும் தன்பாடுமாக 30இற்கு மேற்பட்ட படைப்புகளை எழுதித்தள்ளியிருக்கிறார். இன்னும் அச்சேற பல படைப்புகள் அவர் வசமுள்ளன என்பதை நானறிவேன்.

இவர் இதுவரை 18 நூல்கள் வெளியிட்டுள்ளார். 'இவரது அவள் ஒரு தமிழ்ப்பெண்' மற்றும் 'இனியும் நான் இராமன்தான்' என்ற சிறுகதைத் தொகுதி 'செல்லக்கிளி' என்ற நாவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயம்' என்ற வரலாற்று நூல் ஈண்டு குறிப்பிடத்தக்கவை. திருவாசகத்தை சிங்களத்தில் எழுதி யாழ்ப்பாணத்தில் இந்துகலாசார திணைக்களத்தினால் தேசிய விருது பெற்றவர் இவர்.

இலக்கியத் துறையிலும் சமூகத் துறையிலும் ஆன்மீகத் துறையிலும் ஓயாது உழைத்து வரும் வித்தகர் முகில்வண்ணன் அவர்களின் பன்முக சேவைகள் மேலும் தொடர வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

**விபுலமாமணி தேசமான்ய**

வி.ரி.சகாதேவராஜா *(M.Ed.) (ADE)*

செயலாளர் -

அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவை.

காரைதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01

இலங்கையின் கிழக்குக் கரையில் ***'மீன்பாடும் தேனாடு'*** என்று வர்ணிக்கப்படும் மட்டக்களப் புக்குத் தெற்கே 40 கி.மீ. தொலைவில் அமைந் துள்ளது கல்முனை நகரம். இது மட்டக்களப்பின் நெற்களஞ்சியம் என அழைக்கப்படுவதுடன், கடல்படு திரவியமான மீன்வளமும் நிறையப் பெற்றது. இங்கே கிராமத்திற்கு கிராமம் மாறி மாறி முஸ்லீம்களும் தமிழர்களும் வாழ்கின் றார்கள். இவர்களே இங்கு நெல் விளைவிற்கும் மீன்பிடிப்பதற்கும் மூல காரணமானவர்கள். இவர் கள் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் ஒருவர் சுகதுக்கங்களில் மற்றவர் பங்கு கொண்டு வாழ்வது சிறப்பம்சமாகும்.

தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்ட இம் முஸ்லிம்களும் தமிழர்களும் இணைந்து வாழ்வதில் வியப்பொன்றும் இல்லை. கல்வியில் பின்தங்கிய பகுதியாக இது கணிக்கப்பட்ட போதும் கலையிலும் கலாச்சாரத்திலும் முன்னேறி நிற்கிறது எனலாம். இதிலும் பெரும்பா லான முஸ்லீம்கள் ஈடுபடுவது இன்னொரு சிறப்பம்சமாகக் குறிப்பிடப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பிரதேசத்தில் ஒரு தமிழ் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன்தான் மகேந்திரன். அவனது தகப்பனார் ஒரு ஆசிரியர். அவனுக்கு கயல்விழி என்று ஒரு தங்கையும் உண்டு. ஒரு சிறிய குடும்பமாக இருந்ததினால் தனக்கு வேறு வித வருமானம் இல்லாத போதும் தனது சம்பளத்துடனே குடும்பத்தை ஓரளவுக்கு வழி நடத்திப் பிள்ளைகள் இருவரையும் அவர் படிப்பித்தார்.

மகேந்திரன் ஜி.சி.ஈ. உயர்தரம் இரு முறை எடுத்தும் தோல்வி கண்டான். அதனால் அவனால் பல்கலைக்கழகம் செல்ல முடியவில்லை இப்போது தங்கை படித்துக் கொண்டிருக்கிறாள். இந் நிலையில் தந்தை ஓய்வூதியம் (பென்சன்) பெற்றார். குடும்ப நிலை ஓரளவு கஷ்டமாக இருந்தாலும் சமாளித்துக் கொண்டனர். இப்போதுதான் மகேந்திரன் வேலையேதும் இன்றி நண்பர்களுடன் வீணே பொழுதைக் கழித்துக் கொண்டு திரிந்தவன் வேலை தேடும்படலத்தில் ஈடுபட்டான். வேலை பெறுவதென்பது அத்தனை எளிதான காரியமா என்ன?

அரசாங்க கெசற்றுக்களை பார்ப்பதும் பேப்பரில் வரும் விளம்பரங்களைப் பார்ப்பதும் அவற்றிற்கு விண்ணப்பிப்பதும் கடற்கரை செல்வதும் நண்பர்களுடன் கூடி 'காட்ஸ்' விளையாடுவது, படம் பார்ப்பது என்னும் பொழுது போக்குகளுடன் நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தான்.

வயது வந்த ஆண் பிள்ளை வீட்டில் வேலையின்றி இருப்பதும் அவனுக்கு வயது ஏறிக்கொண்டிருப்பதும் தனது பென்சன் பணத்திலே குடும்பம் உருளக் கஷ்டப்படுவதும் வேலுப்பிள்ளை மாஸ்டருக்கு மனக்கவலையை அதிகரிக்கச் செய்தது. இது அவருக்கு இரத்த அழுத்த நோயைக் கொண்டு வந்ததே தவிர மகனுக்கு வேலை தேடித்தரவில்லை. இப்படி இருக்கும் போதுதான் கிழக்கிலே இயற்கை துறைமுகம் அமைந்துள்ள திருகோணமலையில் அமைந்துள்ள தேவாரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் பெற்ற திருத்தலமான திருக்கோணேஸ்வரத்தில் மாசி மகத் திருவிழா நடைபெற ஏற்பாடாகி இருந்தது. இதற்கு அங்கு நிரந்தரமாக வசிக்கும் தனது பால்ய நண்பனும் தூரத்து உறவினனுமாகிய செல்லத்துரை அழைப்பு அனுப்பியிருந் தான். நீண்ட நாள் ஆசையை நிறைவேற்ற இது நல்ல சந்தர்ப் பம் என்று குடும்பத்தோடே சென்று வந்தார் வேலுப்பிள்ளை மாஸ்டர். அப்போது தனது மனக் கவலையான மகனுக்கு வேலையில்லையே என்ற தன் மனக் குறையை கோணேசரிடம் சொல்லி அழுதார். அவர் அது போல் செல்லத்துரையிடமும் செல்லிக் குறையிரந்து கொண்டார்.

''மாஸ்டர் என்னிட்டச் சொல்லி விட்டீங்க தானே! கவலையை விடுங்க இதை எண்ணி எண்ணி பிறஷரைக் கூட்டாமச் சும்மா இருங்கோ. எல்லாம் நடக்கிற நேரத்தில நடந்தே தீரும். இங்க பல இடங்களில் வேலை பெறலாம். ஒரு அரசாங்க வேலை கிடைக்கு மட்டும் நான் ஒண்டுல பார்த்து சேர்த்துவிடுறன்.''

''அப்படியென்றாலும் செய்தால் பெரும் உதவியாக இருக்கும்.''

அவர்கள் விடை பெற்று வீட்டுக்கு வந்து சில மாதங்களில் இவரது மகனை அனுப்பி வைக்கும்படி கடிதம் வந்தது.

உடனடியாக மகனை அனுப்பி வைத்தார் மாஸ்டர். அங்கு அவனுக்கு கட்டிடக் கம்பனியில் மேற்பார்வையாளராக வேலை கிடைத்தது. எனினும் முதல் மூன்று மாதங்களுக்குப் பயிற்சியாளனாகச் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் திறமையை பார்த்து சம்பளத்தை நிர்ணயித்துச் சேர்த்துக் கொள்வதாகவும் உறுதியளிக்கப்பட்டது. ஒன்றுமில்லாததிற்கு இது பராவா யில்லை என்று எண்ணிக்கொண்டான் மகேந்திரன்.

ஆனால் அவனது திறமை கம்பனி எதிர் பார்த்ததிற்கு மேலாக விளங்கியது. மேற்பார்வையாளர் நியமனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று சில மாதங்களிலேயே கம்பனியில் ஏற்பட்ட பில்டிங் போமன் இடத்திற்கும் விண்ணப்பித்து வெற்றி கண்டான். ஒரு வருடத்தினுள் தனது உயர்ச்சியும் சம்பள உயர்வும் அவனை வேலையில் மென்மேலும் உற்சாகமாக ஈடுபட வைத்தது.

இந்த வேளையில் தான் தனது ஊரைச் சேர்ந்த ஒருத்தியை அவன் அங்கு தெருவில் அடிக்கடி காண நேரிட்டது. முதலில் சந்தேகம் ஏற்பட்டாலும் பின்னர் நம்மூரவள்தான் இங்கு பணிபுரிகின்றாள் என்று புரிந்து கொண்டான். அவளை அறிந்து பழக வேண்டும் என்று சர்வசாதாரணமாகத்தான் முதலில் எண்ணினான். ஆனால் அவளது அழகும் பார்வையும் அவனை ஆட்கொண்டு விட்டன.

இது காதலாக மலர்ந்து இருவர் கண்ணையும் மறைத்தது. தனி அறையில் இருந்த மகேந்திரனுக்கு கட்டுப்பாடு இருக்க வில்லை. அவள் ஒரு பெண்கள் விடுதியில் இருந்தாலும் கட்டுப்பாடுகளை நீக்கி நடக்க முற்பட்டாள். இதனால் தன் இருப்பிடத்தையே இழந்து வேறிடம் செல்ல நேரிட்டது. இது அவர்களுக்கு பழகுவதற்கு இன்னும் வசதியாக போய் விட்டது.

ஆனால், செல்லத்துரையின் பூனைக் கண்களுக்கு இவர் களால் தப்ப முடியவில்லை. அவர் இதனை அறிந்தாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல், இதனை வெல்ல வேண்டும் என்று திட்டம் போட்டார். வேலுப்பிள்ளையிடம் இது பற்றி மெல்ல அறிவித்து விட்டு, அவனை வெளிநாட்டிற்கு அனுப்ப ஏற்பாடு செய்தார். இதையறியாது இதற்கு உடன்பட்டு செயல்பட்டான் மகேந்திரன்.

இந்த ஏற்பாட்டின்படி இரண்டு வருட ஒப்பந்தத்தில் பில்டிங்போமனாக இன்று வெளிநாடு வந்திருக்கிறான். உற்றார் உறவினரை பிரிந்து உயிருக்கும் மேலான காதலியைப் பிரிந்து 1981 ஆம் ஆண்டு ஜூலை மாதக் கடைசியில் வெளிநாடு வந்து, இப்போது இங்கு வாழ்ந்து வருகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வந்ததும் பல்வேறு நாட்டு மக்களுடன் வாழவேண்டி ஏற்பட்டது. ஒரே இடத்தில் பல்வேறு தேசிய இன, மொழி கலந்த மக்களுடன் வாழ்வது ஒரு புது அனுபவமாக இருந்தது. எல்லோரும் "ஹலோ பிரண்ட்" என்று அழைப்பதும் பழகுவதும் ஒரு புத்துணர்ச்சியை தந்து கவலையை மறக்க வைக்கும்.

இங்கு இலங்கையர், இந்தியர், பங்களாதேஷியர், தாய்லாந்துக்காரர், பாகிஸ்தானியர் என்று பல்வேறுபட்ட நாட்டினர் இருந்தபோதும் இவர்கள் அனைவரும் தமது பேதங்களை மறந்து, 'ஆசியர்' என்று வாழக் கூடியவாறு 'ஆசியன் கேம்ப்' என்ற விடுதியை கம்பனி இவர்களுக்கு வேறாக அமைத்துக் கொடுத்திருந்தது. இவர்கள் அனைவரும் அவ்வாறே ஒரு குடும்பம் போல் வாழ்ந்து வந்தனர். அதிலும் இலங்கையர் தமிழர், சிங்களவர், மூஸ்லிம் என்ற மூன்று சமூகமாக இல்லாமல் ஓர் வயிற்றுப் பிள்ளைகள் போல் ஒன்றாக வாழ்ந்து வந்தனர்.

இவர்கள், தங்களுக்குள் ஒரு பிணைப்பை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் தங்கள் நாட்டை, தாய் தந்தையரை, அன்புக்குரிய பிள்ளைகளை, உயிருக்குயிரான உறவினரைப் பிரிந்து வாழும் கவலையை இதனால் ஓரளவு மறந்து வாழ முடிந்தது.

அண்மைக் காலமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள பயங்கரவாத பிரச்சினை பற்றிய செய்திகளை பத்திரிகை வாயிலாகவும் றேடியோ செய்திகள் வாயிலாகவும் அறியக் கூடியதாக இருந்தது. இதனால் இத்தனை காலமாகவும் ஓர் குடும்பம் போல் வாழ்ந்து வந்தவர்களுக்குள் தம்மை அறியாமலே பிளவுகள் ஏற்பட ஆரம்பித்தன. குழுக்கள் குழுக்களாக கூடவும் பேசவும் சாப்பிடச் செல்லவும் ஆரம்பித்தார்கள். இவ்வாறான செய்கைகளால் இத்தனை காலமாகவும் கலகலப்பாக இருந்த தமிழர்களை, குடும்ப கவலைகள் தீவிரமாக பற்றிக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைவிட்டு வந்ததும் ஒன்றாய் கூடி சிரித்துப்பேசி சாப்பிட்டுவிட்டு ரிவியில் படமும் பார்த்துவிட்டு படுக்கையில் வந்து தொப்பென்று விழுந்ததும் நித்திரையில் ஆழ்ந்து விடும் பழக்கம் பலருக்கு உண்டு. இதனால் தம்மைத்தாமே மறந்து, அதனால் தனது கவலை வீட்டுக்கவலையை மறந்து வாழ்ந்து வருவது பெரும்பாலானோரின் வழக்கமாகும். இப்போது தனிமையும் ஓய்வும் அதிகம் கிடைப்பதால் இந் நிலை மாறுபட்டுச் சிலர் சதா வீட்டைப் பற்றியும் மனைவி மக்களைப் பற்றியும் அல்லது பெற்று வந்த வட்டிக்கடனைப் பற்றியும் எண்ணி ஏங்கிக் கொண்டிருப்பது வழக்கமாகி விட்டது.

ஒருவனைப் பலர் சேர்ந்து தொடர்ந்து கேலி செய்ததில் அவன் அது பற்றியே ஒரே ஓட்டமான சிந்தனையில் இறங்கி, சாப்பாடு தண்ணீர் இல்லாமலும் வேலை செய்ய முடியாமலும் இருந்தான். வைத்தியர் பரிசேதித்து, 'வருத்தம் ஒன்றும் இல்லை; கவலைப்படாமல் இருந்தால் சரி' என்றார். 'நித்திரை கொள்கிறான் இல்லை' என்றதும் அதற்கான மருந்து வசதி இங்கில்லை என்று கையை விரித்துவிட்டார். ஆனால் அவன் பைத்தியமடையக் கூடிய நிலைக்கு வந்ததும் அவனை கம்பனி 'பக்'பண்ணியதையும் மகேந்திரன் அறிவான்.

மகேந்திரன் ஒருவருடம் முடிந்ததில் இருந்து நாள்களை எண்ணிக் கொண்டிருந்தான். மேசையில் 365 நாள்களும் எழுதப்பட்ட தாள் ஒன்று ஒட்டப்பட்டிருந்தது. விடுதலையில் செல்லும் தினம் சிவப்பினால் மேலே எழுதப்பட்டிருந்தது. தினமும் காலையில் வேலைக்கு வந்ததும் முதல் வேலை கீழே இருந்து ஒரு நாளை வெட்டி விடுவதுதான். இவ்வாறு நாட்களைக் குறைத்துக் கொண்டு எண்ணி வருவதன் மூலம் மனதுக்கு ஒரு உற்சாகம் ஏற்படுவதாக மற்றவர்கள் கூறினார்கள். மகேந்திரனும் இதைக் கடைப்பிடித்துப் பார்த்தான். ஆமாம் அது நல்ல பயனைத் தந்தது.

இன்னும் முன்னூறு நாள்; இன்னும் இருநூற்றி நாற்பது நாள்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இருநூறு நாள் என்று கூறுவதிலும் அட்டவணை யைப் பார்ப்பதிலும் ஒரு மகிழ்ச்சி ஏற்படுவது இயல்பே! மகேந்திரனுக்கு வீடு செல்ல இன்னும் நூறு நாட்களே இருந் தன.

ஆனால், அப்போதெல்லாம் கவலை என்றால் என்ன வென்றே அறியாது இருந்தான் மகேந்திரன். இந்தப்பிரச்சினை இவ்வளவுக்கு சூடு பிடிக்காததும் மட்டக்களப்பு முதலில் அதனால் பாதிக்கப்படாததும் வீட்டிலும் காதலியிடம் இருந் தும் ஒழுங்காக கடிதம் வந்ததுமே அதற்குக் காரணம்.

'வீடு மீட்கப்பட்டதும் தங்கையின் கல்யாண ஒழுங்குகள் நடைபெறுவதாகவும் இரண்டு வருடம் கழிய நீயும் வந்ததும் கொண்டுவரும் பணத்தைக் கொண்டு சிறப்பாக நிறைவேற்றி விடலாம்' என்று மட்டும் அப்பா குறிப்பிட்டு இருந்தார். அப்படியாயின் தங்கையின் காதலனின் நிலை என்னவென்று தெரியவில்லை.

இந்தக் கடிதம் கிடைத்த மகிழ்ச்சியில் தனது காதலி இராசாத்திக்கு உடனே கடிதம் எழுதினான். 'இன்னும் நூறு நாள்களில் நான் அங்கு உன்னருகே இருப்பேன். தங்கைக்கு மணவிழா ஒழுங்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நான் வந்ததும் அது நடைபெற்று விடும்; அடுத்தது நம்முடையதுதான். நான் விடுதலை முடிந்து திரும்ப முன்னர் யார் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் நமது திருமணப் பதிவை முடித்துவிட்டே வர உத்தேசித்துள்ளேன். இன்னும் இரண்டு வருடம் நமக்காக உழைத்து விட்டே வந்து திருமணம் முடிக்க இருக்கிறேன். நீயும் இதற்கு சம்மதிப்பாய் என்று எண்ணுகின்றேன்' என்று குறிப்பிட்டிருந்தான்.

அதைக் கண்டதும் தன் மனத்தில் இருந்த பாரம் எல்லாம் பஞ்சாய்ப் பறந்து விட்டதை உணர்ந்தாள் இராசாத்தி. ஊரி லிருந்து அம்மா அப்பா அழுதழுது, "அவன் உன்னைக் கைவிட்டு விட்டுட்டேன், என்று வீட்டுக்கு கடிதம் எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கிறானாம்" என்று கூறியதால் ஏற்பட்டிருந்த சந்தேக மூட்டம் விலகிவிட்டது. நம்பிக்கையின்மை மெல்ல விலகி அவனை முற்றாக நம்பினாள் அவள். அவளை விட, பெற்றோரின் விருப்புக்கு ஆளாகி இப்போ தேடும் பணத்திற்கு அடிமையாகி விடுவானோ என்ற எண்ணம் இந்தக் கதையைக் கேட்டதும் ஏற்பட்டதுண்டு. இவையெல்லாம் இந்தக் கடிதத்தைக் கண்டதும் பறந்து விட்டது. அவன் கேட்டபடி எடுத்து வைத்திருந்த கலர் படத்தை எடுத்து வைத்துக்கொண்டு கடிதம் எழுதத் தொடங்கினாள்.

அவளின் கடிதம் கிடைத்ததும் அவன் இந்த உலகத்தில் இருப்பதையே மறந்து போனான். இன்னும் இருக்கும் மாதங் கள் சில நாட்களாக இருந்தன அவனுக்கு. இதனால் தனது தினசரி கடமைகளை நிறைவேற்றுவது என்பதெல்லாம் 'சிம்பிளாக' இருந்தது அவனுடைய அளவுக்கு மீறிய மகிழ்ச்சியின் காரணத்தை நண்பர்கள் கேட்பார்கள். ஏதோ கூறி மழுப்பிவிடுவான். காசும் பணமும் அப்பிளும் திராட்சையும் அதைவிடச் சிறந்த உணவு வகைகளும் படமும் அவர்களுக்கு கவலை தீர்க்கும் மருந்தாவதில்லை. கடிதம் ஒன்றே கைகண்ட மருந்து என்பதை உணர்வு பூர்வமாக பலரும் அறிந்துள்ளார்கள்.

இதில் ஒருவன் திருமணப்பதிவை முடித்து இரண்டு மாதத்தில் வேலைக்கு இங்கு வந்தவிட்டான். அவன் கூறுவ தைக் கேட்கவே பரிதாபமக இருக்கும். அவளது சேலையின் பட்டுத் தன்மையை மட்டுமே ஸ்பரிஸித்து இருக்கிறேன். அதற்கிடையில் என்னைப் பிரித்து இங்கு கொண்டு வந்து விட்டது இந்த வேலை. இங்கு வந்ததும் போதாதற்கு வேறு நீலத்தில் வேறு காணாத படங்களையெல்லாம் காட்டுகிறார்கள். இதையெல்லாம் பார்க்கும் போது இந்த வேலையை விட்டு ஓடிவிடவேண்டும் போலிருக்கிறது. ஆனால், பெற்ற சீதனத்தை தங்கைக்கு கொடுத்து விட்டு வந்து விட்டேன். எனக்குரிய பணத்தை நான் இப்போது தேடியாக வேண்டும். அதனால் மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றேன் என்பான். அவன் நிலையைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கும்.

கடிதம் வந்த மகிழ்ச்சியில் வீட்டில் இருந்து வந்த கடிதத்தை மறந்திருந்தான். பின்னரே அதைப் பிரித்துப் படித்தான். தங்கையின் திருமண ஏற்பாடு பற்றி தான் அப்பாவிற்கு கேட்டு எழுதிய கடிதத்திற்குத் தங்கையிடம் இருந்தே பதில் வந்தது.

'அண்ணா, நீங்கள் எவ்வளவு எழுதியும் நான் சொல்லியும் அம்மாவும் அப்பாவும் கேட்பதாக இல்லை. அவரைவிடத் திறமான மாப்பிள்ளை பேசி முடிக்க முடியும் என்று வேறு மாப்பிள்ளை பார்க்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்கள். என் வாழ்வே இருண்டு விடும் போலிருக்கிறது அண்ணா. நீங்கள் ஆயிரம் ஆயிரமாக உழைத்து அனுப்பும் பணம் எனது வாழ்வை வளமாக்கும் என்றிருந்தேன். ஆனால், அதுவே எனக்கு எமனாக வந்துள்ளது. அந்தப் பணத்திமிரிலேயே அப்பா வேறு மாப்பிள்ளை தேடுகிறார். அண்ணா, எனது வாழ்வை ஒளிமயமாக்க, உங்கள் பணத்தையல்ல; அம்மா அப்பாவையல்ல உங்களைத் தான் நான் தெய்வம் போல் நம்பியிருக்கிறேன். எனது எண்ணத்தை நிறைவேற்றி வைப்பீர்கள் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து வருகிறேன்' என்று நிறைய எழுதியிருந்தாள்.

தங்கையின் வாழ்வை எப்படி சீர்செய்வது? என்று எண்ணிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் மகேந்திரன். அறை நண்பன் குளிக்கச் சென்றிருந்தான். இவனோ, வேலை விட்டு வந்ததிற்கு இன்னும் உடுப்புக் கூட மாற்றாமல் கடிதங்களில் மனதைப்பறி கொடுத்து எண்ணங்களில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தான்.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02

தங்கை பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கும் போது நடந்த ஒரு நிகழ்ச்சி அவன் மனக் கண்முன் நிழலாடியது. நண்பர்கள் சொன்னபோது கயல்விழி அப்படிப்பட்டவளாக இருப்பாள் என்று அவன் நம்பவில்லை. அவளுக்கென்ன வயதா? அதை விட அவனோ வேறு பாடசாலையில் படிப்பிக்கும் ஆசிரியர். அவளுடன் பழக்கம் ஏற்பட வழியில்லை; இல்லை என்று சொல்வதற்கும் இல்லை, அவனும் இந்த ஊரவன் ஒருவகையில் உறவும் கூட என்று எண்ணிய மகேந்திரன் கண்ணால் காணும் வரை நம்பவில்லை. பாடசாலை முடிந்து வந்த தேவேந்திரன் என்னும் அந்த ஆசிரியர் இவளைச் சந்திக்கும் இடமான ஆஸ்பத்திரியை கடந்து போய் நின்று கொண்டிருந்தான். கயல்விழி பாடசாலை விட்டு வந்து தோழிகளை விட்டுப் பிரியும் இடம் வந்ததும் அங்கிருந்து பேசிக் கொண்டு செல்லலாம் என்பது அவன் எண்ணம். இதையெல்லாம் மகேந்திரன் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள கடைக்குள் இருந்து கவனித்துக் கொண்டிருக்கிறான் என்பது அவர்கள் இருவருக்கும் தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயல்விழியை தொடர்ந்து இவன் சென்று விட்டான். சற்றுநேரம் யோசித்துக் கொண்டிருந்த மகேந்திரன், இவர்கள் தனித்து வரும் வழியில் எதிர் கொண்டு வரவேண்டும் என்று சைக்கிளை எடுத்துக் கொண்டு சுற்றிவந்தான். ஆனால், கயல்விழி மட்டுமே வந்த கொண்டிருந்தது பெரும் ஏமாற்றமாக இருந்தது. இதை எப்படி அவளிடம் கேட்பது என்று தெரியவில்லை. இப்படி இருக்கும் போது ஒரு நாள் அவன் எதிர்பாராத விதமாக அவனும் அவளும் பேசிக் கொண்டு வரும் போது பின்னால் வந்து அவர்கள் அருகில் சைக்கிளை நிறுத்தினான் மகேந்திரன். இருவரில் ஒருவராவது அசைந்ததாக தெரியவில்லை. ஏன் அதிர்ச்சியடைந்த பாவம் கூடயில்லை. தேவேந்திரன் அவனைப் பார்த்து சிரித்து ''வசதியெண்டா நீங்க அங்கேயே வந்தால் நல்லது. எனக்கு தனிய வரச்சந்தர்ப்பம் இல்லை. நீங்கள் அண்ணனுடன் செல்லலாமே!'' என்று கூற அவள் தலையையாட்ட அவன் சைக்கிளில் ஏற்றிச் சென்று விட்டான்.

''என்ன கயல்விழி இப்படித் தெருவில பேசிக்கொண்டு வருகிறாய்? பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்?'' என்றான் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு வரும் போது.

''ஒரு ஆசிரியரும் மாணவியும் கதைப்பதைக் கொண்டு கேவலமாக பேசுமளவிற்கு இந்த உலகம் கெட்டு விட்ட தாண்ணா?'' என்றாள் அவள்.

''இந்த உலகத்தைப்பற்றி உனக்குத் தெரியாது கயல்விழி. நானும் நீயும் அண்ணன் தங்கையாக இருந்தும் 'ரவுணால' நடந்து போனால் நரம்பில்லாத நக்கால் எதுவும் பேசும். அதைவிடு அதைப் பற்றியறியும் அளவிற்கு உனக்கு இன்னும் வயது வரவில்லை. அது சரி என்ன சொல்லிவிட்டு போறார்?'' என்றான்.

''வீட்டுக்கு வந்து டியூசன் சொல்லித்தரும்படி கேட்டனான் அண்ணா. அதற்கு வசதி வரும் என்று சொல்ல முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார். உங்களுக்கு வசதியான நேரம் எதுவெண்டாலும் வந்து சொல்லித்தரும்படி கேட்டனான். அது தான் யோசித்து வந்து சொல்லுறன் என்று சொன்னவர் அன்றைக்கு கேட்டபோது. இப்போது அதுதான் தனக்கு காலையில ஆறுமணிக்கு எழும்பியதில் இருந்து மாலை ஆறு மணிவரை தினசரி மாறி மாறி பல இன்ஸ்டிரியூட்டில் ரியூசன் இருப்பதாகவும் அதில் ஒன்றில் வந்து சேர்ந்து படிக்கும் படியும் கூறிப்போட்டுப் போறார்'' என்றாள்.

தேவேந்திரன் என்றால் சிறந்த ஆசிரியர் என்ற பெயர் இருந்தது. ''ஏன் கயல்விழி பாடசாலையிலேயே மாலையில் ரியூசன் கொடுக்கிறார்களாமே அதிலே சேர்ந்து படிக்கலாமே?'' என்று கேட்டான்.

''வகுப்பில் படிப்பிக்கின்றவர்கள் தான் ரியூசனிலும் சொல்லித்தாறது. வகுப்பில் அவர் என்னைக் கேலிசெய்யிறது காணாது என்று அங்கேயும் போய் ஏச்சுப்படவா? அவராலேதான் எனக்கு இந்த பாடங்கள் ஏறுதில்லை. அதுதான் நான் இவரிட்ட கெஞ்சினனான்.''

உண்மையில் தங்கையும் படிப்பில் கவனம் எடுக்கிறாள் என்று மகிழ்ந்து போனான். கயல்விழி என்ன சொல்லி மாட்டிக் கொள்கிறாளோ என்று எண்ணிக் கொண்டு வந்தவனுக்கு மகேந்திரன் வந்து வீட்டில் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் மனம் 'திக்'கென்றிருந்தது.

ஒருவாறு சமாளித்துக் கொண்டு உள்ளே வந்தவன், ''இருங்க உடுப்பை மாற்றிக்கொண்டு வருகிறேன். பன்னிரண்டு மணிக்கு மேல் இதை மாட்டிக் கொண்டு இருக்கிறேன்'' என்று உள்ளே சென்றவன் தாயிடம் சென்று தேநீர் அவனுக்கும் சேர்த்து தயாரிக்கச் சொல்லிவிட்டு அறைக்குச் சென்றான்.

இவள் என்னத்தச் சொல்லி என்னை மாட்டி வைத்திருக்கிறாளோ? என்று எண்ணிக் கொண்டிருந்தான் தேவேந்திரன். அவன் வீட்டுக்கு ஒரு பிள்ளை அதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பிள்ளை சில காலத்துக்கு முன்னர் தான் தந்தையையும் இழந்தான். அவரும் ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியர் மகனைப் பட்டதாரி ஆக்கிய நிம்மதியில் அவனது சிறப்பு பெயரையும் கண்டு கேட்டுவிட்டுக் கண்ணை மூடிவிட்டார்.

அங்கு ஒரு கணம் மௌனம் நிலவியது. ''என்ன இஞ்சாலப் பக்கம்?'' என்று துணிவை வரவழைத்துக் கொண்டு கேட்டார் மாஸ்ரர்.

''இல்ல தங்கச்சி 'மாத்ஸ்'லயும், 'பிசிக்ஸ்'லயும் சரியான வீக் உங்களிட்ட ரியூசன் எடுத்தாத்தான் பாஸ் பண்ணலாமென்று சொல்லுறாள். நீங்க ரியூட்டறிக்கு வரச் சொல்றீங்களாம் அவளுக்கு அது தூரத்தில் இருக்கிறபடியால் வர ஏலாதாம் இஞ்ச இருந்து வேறெவரும் போறதும் இல்லையாம். பக்கத்தில இருக்கிற நீங்க வசதியான நேரம் இரவில எண்டாலும் வந்து சொல்லிக் கொடுக்க முடியுமெண்டா நல்லம் எண்டு கேட்டுத்துப் போகலாம் எண்டுதான் வந்தனான் அவளும் படிக்க ஆசைப்படுறாள். நாங்களும் உதவி செய்யத்தானே வேணும்'' என்றான். என்ன சொல்வாரோ என்று எண்ணியபடி இருக்க,

''இப்ப நீங்கதான் கண்ணால பார்க்கிறீங்களே இதுதான் நான் வாற நேரம் இதுக்கு பிறகு களைச்சு வந்து...''

''பராவாயில்லை நீங்க ரெஸ்ட் எடுத்திட்டு ஏழு எட்டு மணியளவில் வந்து ஒரு நாளைக்கு பிஸூக்சும் ஒரு நாளைக்கு மத்ஸூம் சொல்லிக் கொடுத்தால் போதும் உங்களுக்கு முடியாத வேளையில. வராமலும் இருக்கலாம்...'' என்று இடைமறித்தான்.

''நீங்க இவ்வளவு சொன்ன பிறகும் மறுக்கிறது எனக்கு நாகரீகமாகப்படல்ல. வசதியான ஒரு நாளைப் பார்த்து நான் கயல்விழியிட்டேயே சொல்லுறேனே'' என்றவனுக்கு உள்ளம் துள்ளிக் குதித்தது. கயல்விழி நல்ல புத்திசாலிப் பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய அண்ணனையே தூதனுப்பி என்னையே வீட்டுக்கெடுக்க எவ்வளவு சாமர்த்தியமாக பொய் சொல்லி அவனை ஏமாற்றியிருக்கிறாள் என்று இப்போதுதான் அவனுக்கு புரிந்தது.

தங்கையிடம் சென்று கூறிய போது அவளடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. இது படிப்பில் அவள் காட்டும் உற்சாகம் என்றே கருதினான் அவன். அவளோ கற்பனையில் மிதந்து கனவுகளைக் கண்டு இரசிக்கத் தொடங்கினாள்.

மகேந்திரனிடம் முன்னர் வீதியில் கயல்விழியும் மாஸ்ரரும் கண்டு கதைப்பதாக கூறிய நண்பர்கள் நக்கலாகவே கேட்டார்கள். ''என்ன மகேந்திரன் நாங்கள் வீதியில் கண்டு கதைக்கிறார்கள் என்று கூற வீட்டுக்கே கூட்டிப் போய்விட்டாய்...?'' என்று.

''வீதியில் பாடம்படிக்க முடியாதே அதுதான் வீட்டில கூட்டிக்கொண்டு விட்டிருக்கிறேன்'' என்றவன் தொடர்ந்து, ''வாயை மூடிக்கொண்டு ஊர்வம்பு கதைக்கிறதை விட்டுத்து உங்கட வேலையைப் பாருங்க'' என்றான்.

எல்லேரும் 'கப்சிப்' என்று அடங்கிப் போனார்கள். காலப்போக்கில் இவர்களுக்குள் காதல் மலர்ந்து விட்டதை அறிந்து மகேந்திரனின் அப்பா வேலுப்பிள்ளை கொதித்தெழுந்தார். ''அப்பா அப்படி வந்தால் கூட நாம் சந்தோஷப்பட வேண்டும் அவர் ஒரு திறமையுள்ள ஆசிரியர். அதைவிட அந்தச் சம்பளத்தைவிட மும்மடங்கு சம்பளம் ரியூசன் மூலம் உழைக்கிறார். இது தங்கையின் நல்வாழ்வுக்கு நல்லதுதானே'' என்று தங்கையின் பக்கமாகவே நின்று பேசினான் மகேந்திரன்.

''காசு பணம் மட்டும் இருந்தால் போதுமா? குலம் கோத்திரம் குடிப்பெருமையெல்லாம் பார்க்க வேண்டாமா?''

''அப்பா நீங்கள் வாழ்ந்த காலம் வேறு இன்று நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் காலம் வேறு. இதெல்லாம் அன்று வழக்கமாக இருக்கலாம் இன்று சொன்னால் கேட்பவர்கள் சிரிப்பார்கள்'' என்றான்.

''நீ சிறு பிள்ளை இளம் இரத்தம் இப்படித்தான் பேசுவாய். நல்லது கெட்டது எது என்பது எனக்குத் தெரியும். இனிமேல் அவன் இங்கு வருவதை நிறுத்திவிட வேண்டும். ஊரார் அறிந்தால் வெட்கக்கேடு'' என்றார்.

''அப்பா, அவளுடைய சோதனை முடியுமட்டும் பேசாமல் இருங்கள். இப்போது நீங்கள் வரவேண்டாம் என்று திடீரென்று நிறுத்திவிட்டால் அதுவே ஊர்மக்களுக்கு ஒரு கதையாகி பின்னர் அதுவே வளர்ந்து உண்மையாகிவிடும்'' என்று அப்பாவைத் தடுத்து நிறுத்தி சமாதானப்படுத்தினான்.

ஊரார் வாய்க்கு அவல் கிடைத்தால் சும்மா விடுவார்களா? *'இப்படியாம், அப்படியாம்'* என்று கதையெங்கும் பரவி விட்டது. அப்படியென்றால் கூடப்பராவாயில்லை என்றான் மகேந்திரன். தேவேந்திரன் பரீட்சை நெருங்கியதும் வருவதை நிறுத்திக் கொண்டான். இதனிடையில் தனக்கு திருகோண மலையில் ஒரு வேலை கிடைத்ததும் அங்கிருந்து தனக்கு வெளிநாடு வர சந்தர்ப்பம் கிடைத்ததும் அதனால் அப்பாவின் கையில் கொஞ்சம் பணம் சேர்ந்துவிட்டதும் பணத்துக்கு தகுந்த மாப்பிள்ளையை அவர் தேடிக்கொண்டிருப்பதும் அவனுக்கு கலக்கத்தைக் கொடுத்தது. தங்கையின் கடிதத்தைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. 'எல்லாவற்றிற்கும் நான் வருகிறேன் பேச்சுவார்த்தையை நடத்துவதுடன் நில்லுங்கள் தீர்மானம் எடுக்க நான் வருகின்றேன்' என்று வீட்டுக்கு கடிதம் எழுதி பாரத்தைக் குறைத்துக்கொண்டு எழுந்தான் மகேந்திரன். இப்போது தான் இருக்கும் நிலையில் அங்கு நடப்பது எதையும் தடுக்க முடியாது என்பதை அவன் அறிவான்.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03

அந்தக் கடிதம் தங்கைக்கு ஒரு நிவாரணம் அளிக்கும் என்பதை விட, அவனது மனதுக்கு ஆறுதலாகவும் நிம்மதியாகவும் இருந்தது. அதுவரை அவனது மனதை அரித்துக்கொண்டிருந்த கவலை தீர்ந்து விட அந்த இடத்தை இப்போதே இராசாத்தி வந்து நிறைத்துக் கொண்டாள். எத்தனை நாள் எண்ணிப் பார்த்தாலும் புளித்துப் போகாத எண்ணங்கள் அவை. அவை எப்போதும் அவன் நெஞ்சை விட்டகலாதவை. அடிக்கடி நண்பர்களிடம் கூறி அலுக்காதவை; அவர்களும் இவற்றைக் கேட்டு ரசிப்பதில் இன்பம் காணுவதும் அதுவே அவர்களுக்கு பொழுது போக்காக அமைந்து விடுவதும் உண்டு. ஆனால் அவை என்றும் நீங்காது அவன் நெஞ்சில் நீக்கமற நிறைந்திருந்தது உண்மை தான். பிரிவுதான் நெருக்கத்தை அதிகப்படுத்தும் என்பதை காதலித்தவர்கள் மட்டுமே உணர முடியும். இவ்வாறு காதல் வயப்பட்ட மகேந்திரனும் எவ்வளவு தூரம் பிரிந்து வந்திருக்கிறானோ அவ்வளவு தூரம் அவளை மனதளவில் நெருங்கியிருந்தான். ஆனால், அவள் எண்ணம் என்றும் அவன் நெஞ்சை விட்டு நீங்கியதில்லை. இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிக்கிழமை கிடைக்கும் ஒரே ஒரு ஓய்வு நாள். சாப்பிட்டு விட்டு வந்து இன்று எங்கும் செல்லுவதில்லை என்று எண்ணி யவனாக இராசாத்தியின் கடிதத்துடன் கட்டிலில் சாய்ந்து கொண்டான்.

அங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் உத்தியேகத்தர் களுக்கு வெள்ளிக்கிழமை மட்டுமே விடுமுறை நாள். அதிலும் வேலை அவசரம் என்று செய்யக் கேட்டால் செய்வார்கள் உழைப்பதற்கென்றே வந்திருக்கின்றோம், இச்சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது என்று எல்லோரும் வேலை செய்வது வழக்கம். எப்படியென்றாலும் மாதம் ஒருநாள் விடுமுறை கிடைத்தே தீரும் அது அவர்களுக்கு கொண்டாட்ட நாள்போல் இருக்கும். இது எமது நாட்டவருக்கு மட்டுமன்றி அங்கு வேலை செய்யும் வெள்ளக்காரர்களுக்கும் உல்லாசமான கொண்டாட்ட நாளாகவே அமையும். இன்று இவ்வாறு எங்கும் செல்வதில்லை என்று நண்பர்களிடம் கூறிவிட்டு அறையிலே தனிமையிலே இருந்தான். தன் காதலியின் கடிதத்தை பலமுறை படித்து அணுவணுவாக சுவைத்துக் கொண்டு இருந்தான். படித்துவிட்டு அதன் இனிமையை இரசித்த வண்ணம் கண்ணை மூடிக்கொண்டிருந்தவனுக்கு இது ஆரம்பித்த பழைய எண்ணங்கள் ஞாபகத்திற்கு வந்து அவனது மனதை ஆட்கொண்டன. அவற்றில் ஆழ்ந்துபோயிருந்தான். அவனுக்கு அந்த இனிமையான ஆரம்ப நாட்கள் மனக் கண்முன் தோன்றின.

காதலில் ஈடுபட்டவர்களுக்குத்தான் அதன் அருமை தெரியும் என்பதை, தான் காதலில் கட்டுண்ட பின்பே மகேந் திரனால் உணர முடிந்தது தங்கையின் காதலை அவனால் உணர முடிந்தது. அப்பாவின் எதிர்ப்பை முறியடித்து வெற்றிகாண வேண்டும் என்று எண்ணிக்கொண்டான். அதுவே, அவனது காதல் வெற்றி பெற வழிவகுக்கும் என்பது அவனது எண்ணம். இவ்வளவு பணத்தைச் சம்பாதிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவேந்திரனையே எதிர்க்கும் அப்பா இராசாத்தியின் நிலையை அறிந்தால் அனுமதிப்பாரா? இதற்கு முதற்படியாக தங்கையின் காதலை வெற்றிபெற வைக்க வேண்டும் என்ற வைராக்கியம் பிறந்தது.

இதனை ஒரு நாள் சந்திப்பின்போது இராசாத்தி நேரே கேட்டும் விட்டாள். ''நீங்கள் என்னை விரும்புகிறீர்களே உங்கள் பெற்றோர் இதற்கு அனுமதிப்பார்களா?''

''ஒரு கொந்தராத்துக்காரருக்கு மருமகனாக அமைவதை அப்பா விரும்பாமலா விடுவார்?''

''நீங்கள் பகிடிபண்ணுகிறீர்கள். அப்பா ஒரு ஏழைக் கொந்தராத்துக்காரர்தான். தனது வீட்டையே இதுவரை திருத்த முடியாமல் பல கொந்தராத்துக்களில் பல போட்டியில் எடுத்து நட்டப்படும் கடன்காரராக இருப்பவர். இலட்சம் என்ன ஆயிரக்கணக்கில் சீதனம் தரக்கூட அவரால் முடியாது.''

''அப்படியொரு நிலையிருந்தால் நான் இந்த வேலைக்கு வந்திருக்கவே மாட்டேன். உன்னிடம் யார் இப்ப சீதனம் கேட்டது? ஏன் இதையெல்லாம் எண்ணிக் கலங்குகிறாய்?''

''நீங்கள் கேட்கமாட்டீர்கள். ஆனால், உங்கள் அம்மா, அப்பா சும்மா விடுவார்களா? இப்படி எத்தனை இடங்களில் நடந்திருக்கிறது?''

''நீதான் உழைக்கும் பெண்ணாயிற்றே அதுவே பெரும் சீதனமல்லவா? அதையெல்லாம் நான் சமாளித்துக் கொள்வேன் நீ கவலையை விடு'' என்று அவளைத் தேற்றினான்.

அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்ட மகேந்திரன் சொன்னான், ''இராசாத்தி நமது காதல் உண்மையான அன்புடன் வளரவேண்டும் என்றால் அதில் சிறிதளவு சந்தேகம் கூட துளிர்க்கக்கூடாது. என்னை நீ முற்றாக நம்பவேண்டும் இப்போதாவது என்னை நம்புகிறாயா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நம்பாமலா உங்கள் பேச்சைக்கேட்டு உங்கள் பின்னால் வருகின்றேன். எல்லாப் பொண்ணும் நினைப்பது போல் நீங்கள் என்னைக் கைவிடாது இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசையும். எனது கோபம் பொய்க்கோபம் என்று நீங்கள் அறியவில்லையா?''

''இராசாத்தி பொய்யாகக் கூட நீ கோபிப்பதை நான் பார்த்து ரசிப்பேன். ஆனால் என் மீது கோபம் கொண்டு பேசாமல் இருக்க வேண்டும் என்று எந்தச் சந்தர்ப்பத்திலும் எண்ணாதே. அதை என் நெஞ்சு தாங்காது. இதை நன்றாக ஞாபகம் வைத்துக்கொள்'' என்றான்.

''அத்தான் இந்த நெஞ்சில் நான் இருக்கும் வரை உங்களுக்கு எதுவும் வராது நீங்கள் பயப்பட வேண்டாம். உங்களை விட்டுப் பிரிந்தால் நான் இந்த உலகத்தையே விட்டுப் பிரிந்து விடுவேன். அதற்கு மேல் ஒரு கணமும் இவ்வுலகில் வாழமாட்டேன். அதுமட்டும் உறுதி என்னையும் நம்புங்கள்'' என்று அவனது நெஞ்சைத்தடவி கையிலடித்துக்கொடுத்தாள்.

இவளுடன் பழகிவிட்டு அம்மா அப்பாவுடைய ஆசைக்கு மனம் மாறலாமா? இது கடைசிமட்டும் நடக்காது, மணந்தால் அவளையே மணப்பது இல்லையேல் சாவை அணைப்பது என்று மனதில் ஒரு உறுதியை வளர்த்துக் கொண்டான். இதேபோல் அவளும் இன்பக் கனவுகள் கண்டு மகிழ்ந்தாள். இனித்தனக்கு வேறொரு வாழ்க்கை இல்லை வாழ்ந்தால் இனி மகேந்தரனுடனேயே வாழ்வது என்று தீர்மானித்துக் கொண்டாள். ஒரு சில பெண்கள் ஒருவனை விரும்பினாலும் எட்ட நின்று பார்ப்பது பேசுவது. காதலிப்பதை முறித்துக் கொண்டால் வேறொருவனை மணப்பதில் தவறில்லை. அதைவிட்டு ஒருவனுடன் என்னைப்போல் நெருங்கிப் பழகிய பின்னர் இதைவிடவும் மோசமாகவும் நடந்த பின்னர் காதலில் முறிவு ஏற்பட்டால் கனவிலும் வேறொருவனை நினைக்கக் கூடாது அவர்களுக்கு சாவைத் தவிர வேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில்லை. ஆகவே, நாம் காதலிப்பவனை எப்படியும் மணந்து கொள்ள வேண்டும். இதுவே சாமர்த்தியமும் வாழ்வின் வெற்றியுமாகும் என்று தான் எண்ணியதை ஒருமுறை அவனிடம் கூறியபோது, ''அப்படியான ஒரு நிலை உனக்கு வரவிடமாட்டேன் இராசாத்தி'' என்று அவளை சமாதானப்படுத்தினான்.

அவனது சமாதானம் என்றும் நிலைக்குமா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும். மனிதர்கள் நினைப்பது ஒன்று கடவுள் நினைப்பது வேறொன்றல்லவா? இதை மறந்து மனிதன் வாழ்வது விந்தையே! ஆனால், இந்த நிலையிலும் கடவுளை மறக்காதவர்களுக்கு கடவுள் உதவவே செய்வார். ஆகவேதான், இறை நம்பிக்கையை பிடித்துக்கொண்டிருந்தான் மகேந்திரன். தனிமையும் தூரப்பிரிவும் இன்னும் கடவுள் நம்பிக்கையில் இறுக்கத்தை ஏற்படுத்தின.

அவன் மட்டுமென்ன வெளிநாடு வந்த எல்லேரும்தான் வெளிநாடு வர முன்னர் கோயில் செல்லாதவர்கள் சாமி கும்பிடாதவர்கள் எல்லாரும் இங்கு வந்ததும் பக்திமானாக மாறிவிடுகின்றார்கள். ஒன்று இந்த நாட்டு முஸ்லீம்களிடையே நிரம்பிவழியும் பக்திபிரவாகம் என்றால் மிகையாகாது. மற்றது கஷ்டம் வரும்போது கடவுளை நினைக்கும் மனப்பாங்கு எனலாம். இங்கு வந்துள்ளவர்கள் பலரும் பலவித கஷ்டங் களின் காரணமாகவே வந்தவர்கள் என்பது அவர்களுடன் பேசிப் பழகிப் பார்த்த பின்பே தெரியும். இதன் காரணமாக அவர்கள் அவரவர் கவலையை மறப்பதற்காக சுவாமிப்படங் களை வரவழைத்து வைத்து இரவும் பகலும் வணங்குவது வழக்கம்.

ஒரு பெரியவர் வயதும் நாற்பத்தைந்தைக் கடந்திருக்கும் பெரிய உத்தியோகம், கார், பங்களா எல்லாம் சொந்தத்தில் உண்டு. கைநிறையச் சம்பளமும் பெற்றவர். பென்சன் எடுக்கும் சந்தர்ப்பத்தில் வேலை உதறித்தள்ளிப் போட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருக்கிறார் ஏனென்று கேட்டால் அவரே சொல்லுவார். "யாழ்ப்பாணத்தில் நிலவும் சீதனப் பிரச்சினை உங்களுக்குத் தெரியும்தானே? எனக்கு மூன்று பெண்கள் கல்யாண வயதில் இருக்கிறார்கள். இருபத்தி ஐந்து வருட 'சேர்விஸ்' ஒரே ஒரு வீடுதான் கட்ட முடிந்தது. அங்கிருந்தால் மற்றப் பிள்ளைகளை என்னால் வாழவைக்க முடியாமல் போகும். இப்ப வந்து ஒரு வருடமாகிறது. இரண்டாவது வீடு முடியும் தறுவாயில் இருக்கிறது. லீவில் வீட்டுக்குப் போகும் நோக்கமும் இல்லை. தேவைகளை நிறைவேற்றிய பின்னர் ஒரேயடியாகப் போய்விடுவேன்., எனக்கு இரத்தழுத்தம் உண்டு. இதை மறைத்துத்தான் வந்தேன். அதுதான் சாப்பாட்டில் கட்டுப்பாடு வைத்துக் கொண்டு போய்ச் சேரும்வரை எதுவும் வந்துவிடக் கூடாது என்று தினமும் கடவுளை வேண்டுகிறேன்" என்பார். இன்னுமொரு உண்மை, 'கடவுளே! என்னைக்காப்பாற்று. நான் நல்லபடியாக ஊர்போய்ச் சேரவேண்டும்' என்று வேண்டுவதைப் பார்ப்போம்.

அவரே எழுபத்தைந்தாயிரம் சீதனம் வாங்கி தனது வலது குறைந்த தங்கைக்குக் கொடுத்த பின்னர், தனது வளமான வாழ்க்கையை அமைக்கப் பணம்தேடி வந்தார். ஆனால், பதிவுத் திருமணத்தை முடித்துவிட்டு, இரண்டு மாதம் முற்றாக முடியுமுன்னர் வெளிநாடு வந்துவிட்டார். அதுவரை அவளுடைய உணர்ச்சிகளுடன் விளையாடி உல்லாசமாகப் பொழுதைக் கழித்தார். இங்கு வந்த பின்னர் அவளாலும் அங்கு இருக்க முடியவில்லை இவராலும் இங்கு இருக்க முடிய வில்லை. அவளுடைய கடிதங்கள் எல்லாம் உணர்ச்சிப் பிளம்புகளாக வந்து அவரை வாட்டி வதைத்தன. 'தன்னால் இனியும் பொறுக்க முடியாது ஒருவருடத்துடன் வந்து திருமணத்தை முடித்துவிட்டுச் செல்லுங்கள்' என்பது அவளது வேண்டுகோள். இவருக்கோ இப்பொழுதே செல்லவேண்டும் போல் இருந்தது. பார்க்கும் படங்களும் வரும் கடிதங்களும் உணர்ச்சியைத் தூண்டிக் கொண்டிருந்தன. இருந்தும் மனதைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்படுத்திக் கொண்டிருந்தார். காரணம் இருக்கும் வரை இருந்து உழைக்கக் கூடியதை உழைத்துக் கொண்டு செல்வோம். திருமணம் முடித்தபின்னர் மீண்டும் வருவோம் என்ற நம்பிக்கையில்லை. இங்கு பார்த்த படங்களில் இருந்து வாழ்க்கையில் இன்னும் அனுபவிக்க வேண்டியது எவ்வளவோ இருக்கிறது என்பதையறிவார்.

அதுமட்டுமா? தாய்லாந்து வாசியொருவர் லீவில் ஒருமாதம் வீட்டுக்குச் சென்றபோது பெற்றோரின் வேண்டுதலில் திருமணம் முடித்தார். திருமணம் முடித்த ஒரு கிழமையில் இங்கு வரவேண்டியிருந்தது. ஆனால் அவர் ஒரு மாதத்தில் பைத்தியமாக அனுப்பி வைக்கப்பட்டார். இப்படியொரு நிலை தனக்கு வந்துவிடக் கூடாது என்பதே இவரது வேண்டு கோள். இப்படிப் பல உண்டு. உதாரணத்திற்கு இரண்டை மட்டும் இங்கு குறிப்பிட்டோம். இதையெல்லாம் மகேந் திரனும் அறிவான். தான் சென்று ஊர் சேர்ந்து தங்கையின் திருமணத்தை நல்லபடி முடித்துவிட்டு, இரகசியமாக என்றாலும் தனது பதிவை முடித்துவிட்டு வரவேண்டும், அதற்கு இறைவன் உதவி செய்யவேண்டும் என்பதே அவனது வேண்டுகோள் ஆகும்.

******


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04

இங்கு அறைக்கதவுகள் எதுவுமே பூட்டப்படுவதில்லை. கள்ளர் - களவு பயமும் இல்லை. மேசை மீது காசை வைத்துவிட்டுப் போனாலும் பெட்டித் திறப்பை வைத்துவிட்டுப் போனாலும் அது வைத்த இடத்திலேயே இருக்கும். வரும் 'றூம் பையன்'கள் அறையைத் துப்பரவு செய்துவிட்டுப் போவார்கள். வேலைக்குச் செல்லும் போதும் சரி வெளியே செல்லும் போதும் சரி அறைக் கதவுகள் பூட்டாமல் சாத்தப்பட்டி ருப்பது வழக்கம். வருபவர்கள் கதவைத் தட்டிப் பார்த்து விட்டுப் போவார்கள். மகேந்திரன் வேலை செய்தது சவூதியில் ஒரு பல்தேசியக் கம்பனி. அதில் மூன்று இனத்தவரும் அடங்குவர். சிங்களவர், தமிழ், முஸ்லீம் இதேபோன்று இந்தியர்களில் கேரளத்தைச் சேர்ந்த மலையாளிகள், ஹிந்தி பேசுபவர்கள் பஞ்சாபியர்கள் அடங்குவர். தமிழர் கள் இல்லாத போதும் தமிழ் பேசும் மலையாளி கள் அக்குறையைப் போக்கி தமிழர்களுடன் நெருங்கிக் கலந்து உறவாடினர். இதே போன்று தாய்லாந்து, பாகிஸ்தான், பங்களாதேஷ், சைபிரஸ், பிரிட்டீஸ் மற்றும் அரபிகளும் அக்கம்பனியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்தனர்.

இதில் குறிப்பிடக்கூடிய அம்சம் ஒன்றுண்டு. இத்தனை சாதிமக்கள் நாட்டுமக்கள் அக்கம்பனியில் வேலை செய்வதால் அக்கம்பனிக்கென்று ஒரு பாஷை உருவாகிவிட்டது. அது அக் கம்பனியின் பெயராலேயே வழங்கப்பட்டு வந்தது. அதில் சைபிரஸ், ஆங்கிலம், ஹிந்தி, அரபி என்பன கலந்திருக்கும். கம்பனி சைபிரஸ்காரர்களுடையது. ஹிந்திபேசும் இந்தியர்கள் நிறைய முதன் முதல் அக்கம்பனியில் சேர்ந்தவர்களாம். ஆங்கிலம் பொது மொழியாகவும் அரபி அந்நாட்டு மொழியா கவும் இருப்பதால் இது ஒரு கலப்புமொழிப் பாஷையாக இருந்தது. இதில் ஒரு அதிசயம் என்னவென்றால் இந்த மொழியில் பேசினால் அனைவருக்கும் விளங்கிவிடும். ஆனால், சுத்த ஆங்கிலத்தில் பேசினால் விளங்காது.

'மாஸ்த்துரு மீ நோ மாலும்' என்றால் 'ஐயா எனக்கு விளங் கவில்லை' என்று பொருள்படும். ஹிந்தியின் ஊடுருவல் அரபிகளின் பாஷையிலும் ஊடுருவி இருப்பதும் வியாபாரிகள் ஹிந்தியிலே விலைகளை 'பஞ்ச்றியால், தஸ் றியால்' என்று கூறுவதில் விளங்கிக் கொள்ளலாம். இவ்வாறு வாழும் பல்தேசிய மக்களில் ஆசிய மக்களுக்கு தனி இருப்பிட சாப்பாட்டு சமையல் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. உத்தியோகத்தர்களில் மற்றவர்கள் வேறாக வாழ்ந்து வந்தனர். ஆசியர்கள் என்று குறிப்பிடப்படுபவர்களில் தொழிலாளர்கள் எல்லா நாட்டைச் சேர்ந்தவர்கள் இருந்தாலும் உத்தியோகத் தர்களில் இந்தியரும் இலங்கையருமே அதிகம். இவர்கள் அனைவருக்கும் ஒரே இருப்பிட வசதியும் சாப்பாடும் 'மெஸ்' வசதியும் உண்டு. சமையலுக்கு இருநாட்டைச் சேர்ந்தவர்களும் இருப்பதுண்டு ஆசியர்களின் உணவை விரும்பும் சில பிரித்தானியர்கள் இவர்களின் மெஸ்ஸுற்கு வந்து சாப்பிடு வதும் உண்டு. வெள்ளிக்கிழமைகளில் உத்தியோகத்தர்கள் விஷேச உணவுக்காக வெளி நண்பர்களை விருந்துக்கு அழைப் பதும் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேந்திரனின் அறைக்கதவு தட்டப்படவே தமிழ் நன்கு தெரிந்த மலையாள நண்பர் நாயர்தான் வந்திருந்தார். அவர் ஒரு நில அளவையாளராக அங்கு கடமையாற்றுகின்றார். ஆறு வருடங்களாக அக்கம்பனியில் வேலை செய்யும் அவர் நல்ல அனுபவஸ்தர். வயதிலும் கூடியவர். தலையிலும் முன்னுக்கு வழுக்கையும் வயிறும் சற்றுப்பெருத்தும் இருக்கும். மகேந்திரனுடன் நல்ல உறவை வைத்துக்கொண்டு அவ்வப்போது ஆறுதலும் அறிவுரைகளும் கூறுபவர். அதனால் அவர் மீது ஒருபிடிப்பும் அபிமானமும் மகேந்திரனுக்கு இருந்தது. அவரும் அவனை மற்றவர்கள் போல் கேலி பேசாமல் வயதுக்கு தகுந்தாற் போல் அனுசரித்து நடந்து கொள்வார். இதுவே அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. முதல்முறை அவருடன் நெருங்கிப்பழக நேர்ந்ததும் வீட்டில் இருந்து வந்த கடிதம் ஒன்றினால்தான். தான் அனுப்பிய காசையெல்லாம் கொடுத்து வளவை மீட்கும்படி எழுதியிருந்தான் மகேந்திரன். ஆனால், வீட்டில் இருந்து வந்த கடிதம் வட்டிக்கு போக மிகுதி சொற்பமே இருப்பதால் வளவை மீட்க இன்னும் பணம் தேவையென்றிருந்தது.

தான் இவ்வளவு புழுதி குடித்து, வெயிலில் காய்ந்து உழைக்கும் பணம் வட்டிக்கே செலவாகின்றது என்று எண்ணிக் கொண்டிருக்கும் போதுதான் நாயர் அவனது அறைக்கு வந்தார். அவர் தமிழ்நாட்டில் சிலகாலம் வேலை பார்த்ததால் நன்கு தமிழில் பேசுவார். மகேந்திரனுடன் தமிழில் பேசி உறவாடுவதற்கே அவர் முதலில் வரத்தொடங்கினார். பின்னர் தினமும் சற்று நேரம் வந்து பேசிச் செல்லும் வழக்கம் ஏற்பட்டு விட்டது. அன்றும் அப்படித்தான் வந்தார். மகேந்திரன் யோசனையில் ஆழ்ந்திருந்தான். மற்ற அறை நண்பனைக் காணவில்லை.

என்ன யோசனை? என்று பலதடவைகள் கேட்டார்; மகேந்திரன் சொல்லவில்லை. ''டியர் பிரண்ட் உங்கட பிராப்பிளத்தைச் சொல்லுங்க ஐ கேன் ஹெல்ப் யூ...'' என்றார். அவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைப் பார்த்துச் சிரித்தான். மேசையில் கடிதம் கிடந்தது.

''வீட்டில் இருந்து கடிதம் வந்திருக்கிறது போல...'' என்றார்.

''ஓமோம்.. நான் வரும்போது ஈடு வைத்த வளவை மீட்க வட்டி கூடுதலாக வருகிறதாம் காசு கொஞ்சம் கூடுதலாக வேண்டுமாம் என்று அம்மா எழுதியிருக்கிறார். இப்பவே முழுவதும் கொடுக்காவிட்டால், அடுத்தமாதம் இன்னும் வட்டி கூடிவிடுமாம்... அதுதான் யோசிக்கிறேன். இங்க யார் இனசனம் இருக்கிறார்கள். தெரிந்தவர்கள் எல்லாம் தங்கள் பிரச்சினையே தீர்க்க முடியாமல் இருக்கிறார்கள். அப்படியிருக்க என்னால் என்ன செய்யமுடியும்...?'' என்றான் மகேந்திரன்.

'டியர் பிரண்ட்' எல்லாரையும் எல்லோரும் இப்படி அழைப்பது வழக்கம்.

''எவ்வளவு தேவைப்படுகின்றது?'' என்றார் நாயர்.

''இரண்டாயிரம் றியால் இதற்கு நான் இரண்டு மாதம் உழைக்க வேண்டும். அதற்கிடையில் வட்டி வளர்ந்து விடும்''

''கவலைப்பட வேண்டாம் நான் நாளைக்கே ஒழுங்கு பண்ணுறன். நீர் வேலைக்கு புதிது... இல்லையேல் கம்பனியிலே கடன் எடுக்கலாம்'' என்றவர், ''டோன்ற் வொறி. நோ ப்ராப்ளம்'' நான் ஒழுங்கு பண்ணுறன் என்றார்.

அடித்தாலும் ''நோ ப்ராப்ளம்'' என்னும் சொல் பாவிக்கும் பழக்கம் இங்கு எல்லாரிடம் எதற்கும் உண்டு. அவர் சொன்னது போல் அவனுக்கு அது பிராப்ளமாக இருக்கவில்லை. அடுத்த நாள் இரண்டாயிரம் றியாலைக் கொண்டுவந்து கொடுத்த போது, ''நாயர்.. '' என்று அவன் பேச முடியாதிருக்க அவர் பேசினார்.

''வீட்டுக்கு உடனே அனுப்புங்க.. என்னிடம் ஆயிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றியால் இருந்தது. கசியரிடம் ஆயிரம் றியால் கடன் பெற்றேன் அதை சம்பளத்தில் கழிக்கும்படி சொன்னேன்'' என்றார்.

எப்படியும் அவர் அவனை பேசவிடவில்லை. ''முதலில் வீட்டுக்கு அனுப்புங்க பின்னர் எனக்கு தரலாம். நான் வீட்டுக்கு போக இன்னும் ஆறுமாதம் இருக்கின்றது'' என்றார்.

இப்படியும் உதவி செய்யக் கூடியவர்கள் இங்கு இருக்கிறார்களா? என்று வியந்தவனுக்கு வாயடைத்துவிட்டது. உற்றார் உறவினரே உதவி செய்ய தயங்கும் போது வட்டி திருப்பித்தரும் கால எல்லையை நிச்சயித்த பின்னர் எழுதி வாங்கிக் கொண்டு தரும்போது, இப்படி கண்காணாத தேசத்தில் நமது நாட்டை நமது இனத்தைச் சேராதவர் ஒருவர் எப்போது தருவாய் என்று கூடக் கோட்காமல் எனக்காக தன்பெயரில் கடன் பெற்றுத் தருவதென்றால் இதை எண்ணும் போது அவனுக்கு வாயடைத்ததில் வியப்பில்லை. இதுவே அவர்கள் உறவுக்கு நெருங்கிய பழக்கத்தை ஏற்படுத்தியதென்றால் மிகையில்லை.

அதன் பின்னர் மகேந்திரனும் தன் பிரச்சினை அனைத்தையும் அவரிடம் கூறி ஆலோசனை கேட்கத் தவறுவதில்லை. அவரும் இவனை மிகவும் கவனமாக கவனித்து வந்தார். அவன் கூறுவதை மற்றவர்களிடம் கூறவும் மாட்டார். கூறினால் அவர்கள் இவனை பந்தியில் எடுத்துக்கொண்டு கேலி செய்வார்கள் என்பது அவருக்குத் தெரியும். அப்படி பலர் அங்கு ஆளாவதுண்டு. இன்று கம்பனி முழுவதற்கும் விடுமுறை என்ற போதிலும் அவருக்கு வேலை இருந்தது.

ஏதோ அவசர வேலை காரணமாக வேலைக்குச் சென்று குளித்துவிட்டு வரும் போது, அறையில் ஏதோ சத்தம் கேட்கவே தட்டிப் பார்த்தார் பதில் ஏதும் வரவில்லை, என்றதும் திறந்து பார்த்தார்.

''ஹலோ பிரண்ட்... என்ன சாப்பிட போகல்ல?'' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இல்ல.. நீங்க..'

''நான் வேலைக்கு போய் இப்பதான் வந்த நான் சாப்பிடப்போவம் கெற்றெடி'' என்று போகப் புறப்பட்டவர். கட்டிலில் கிடந்த சாறியைக் கண்டதும் ''ஓ சொப்பிங் போனதா? யாருக்கு சாறி தங்கைக்கா? இல்ல..'' வந்தெடுத்தார். அதன் மேல் கிடந்த இராசாத்தியின் படம் அவருக்கு எல்லா விளக்கத்தையும் சொல்லிவிட்டது.

''ஆ குட்டியின்ர சாறியா?'' என்றவாறு சிரித்துக்கொண்டு வெளியேறினார். நேரம் ஒன்றரையைக் கடந்து விட்டிருந்தது. மகேந்திரன் எழுந்து பாத் ரூம் சென்று முகம் கைகால் கழுவிட்டு வந்தான்.

நாயர் அழகான லுங்கியுடன் வந்து நின்றார். ''என்ன நாயர் புது லுங்கி உடுத்திருக்கிறாப்போல''

''இது வீட்டில இருந்து வரும் போது கொண்டு வந்தது. இன்றுதான் உடுத்த நான்'' என்று கதைத்தவாறு சாப்பாட்டு மெஸ்ஸுற்கு வந்தனர்.

''ஏன் இன்று எங்கும் செல்லவில்லையா?'' என்றார் நாயர் சாப்பிட்டுக் கொண்டே.

''இன்று முழுவதும் படுத்து றெஸ்ட் எடுப்பது என்றிருந் தேன்'' என்றான். சாப்பிட்ட பின்னும் வந்து படுத்துக் கொண்டு தான் கனவுலகில் சஞ்சரிக்க வேண்டும் என்பதே அவனது எண்ணம். நாயருக்குத் தெரியும் மகேந்திரன் எங்கு செல்வ தென்றாலும் தன்னுடன் தான் செல்வது தனது காரில்தான் செல்வது என்பதும்; இருந்தும் கேட்டார்.

''மாலை எங்காவது செல்வோமா? வெள்ளிக் கிழமைகளில் அரை நாள் வேலை என்பதால் மாலை விடுமுறையாக இருந் தது.

''நித்திரை கொண்டு எழும்பிப் பார்ப்போம்'' என்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேந்திரன்.

''எனக்கு போகவேண்டியதில்லை எனது லேபர்ஸ் கடைக்கு போக வேண்டும் என்றார்கள்'' என்றார் நாயர்.

''எனக்கு எதுவும் வாங்க வேண்டியதில்லை போக வேண்டும் என்றால் வருகின்றேன்''

''வீட்டுக்கு போக முடியவில்லை என்றதும் பொருள் வாங்குவதையும் நிறுத்திவிட்டீங்க போல?..''

''வீட்டுக்கு போகாமல் என்னத்துக்கு?''

''இப்படி எண்ணியெண்ணி கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல் வெளியில போய் வந்தால் நல்லாருக்கும்''

''வெளியில் போறதை விட அறையிலே படுப்பதையே விரும்புகின்றேன்''

''யு ஸ்லீப் போற நேரம் நான் எழுப்பிறன்'' என்றார். அவன் உண்மையிலேயே படுத்துத் தூங்கப் போகின்றான் என்று தான் அவர் எண்ணினார்.

அவனது உள் மனம் எதற்காக விழைகின்றது என்பதை அவர் அறியவில்லை. ஆகவே, ''நீ படுத்துத் தூங்கு; போகும் போது நான் எழுப்புகின்றேன்'' என்றார். அவர் தனிப்பாவிப்புக் கென்றே கம்பனி வாகனம் ஒன்று கொடுக்கப்பட்டிருந்தது. மகேந்திரன் கார் ஓட்டப் பழகியதும் எங்காவது தேவை யென்றால் அப்பகுதிக்குள் எடுத்துச் செல்வதும் அவரது கார்தான். அவனுக்கு மட்டுமல்ல கேட்கும் எவருக்கும் கொடுப்பார். எல்லாவற்றில் இருந்தும் விடுபட்டு அறைக்குள் அடைபட்டுக் கிடக்கவேண்டும் என்பதே இன்றைய ஆசை மகேந்திரனுக்கு. ஊருக்குச் செல்ல முடியாது என்பதுடன் தான் சிறைபட்டது மட்டுமல்ல தனது ஆசைகளையும் சிறைப்படுத்தி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான் மகேந்திரன். ஆனால் இன்று இனிமையான இன்பக்கனவுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதந்து கொண்டிருப்பதில் தனது கவலைகளைச் சற்று மறந்து இருக்கக் கூடியதாக அவனுக்கு இருப்பது இன்றையப் பொறுத்தளவில் ஒரு மனநிறைவைக் கொடுத்தது. ஆகவே, மாலையும் அவன் எங்கும் செல்வதை விரும்பவில்லை இதையே அவன் கூறினான். இருவரும் சாப்பிட்டு முடிந்ததும் கொடுக்கப்பட்ட அப்பிளைக் கடித்தவாறு அறைக்கு வந்து சேர்ந்தனர். அறைக்கு வந்ததும் கதையைக் கொடுத்தால் தனது நேரம் வீணாகிவிடும் என்று எண்ணிய மகேந்திரன் நாயரிடம் சொல்லவும் முடியாமல் கட்டிலில் விழுந்தான். சற்று நேரத்தில் அவரும் அவனது அறையை விட்டு வெளியேறினார். மகேந் திரன், தனக்கு நாயரை போன்ற நல்ல ஒரு உறவை ஏற்படுத்தித் தந்த இறைவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டான்.

அப்பிள் சாப்பிட்டு முடிந்தும் தான் விட்ட இடத்தில் இருந்த தொடரும் எண்ணம் கொண்டவனாக தலையணையைக் கட்டிலில் சட்டத்தில் சாய்த்து வைத்துக் கொண்டு சாய்ந்தான். அப்போது வெளியே சொப்பிங் போன கூட்டம் ஒன்று வந்து பெரும் கலகலப்பை ஏற்படுத்தியது. சற்றுநேரம் அதற்கு காது கொடுத்தவன் பின்னர் தன் நினைவில் மூழ்கிப்போனான். அது எங்கொல்லாமே அடித்துச் சென்றது.

******


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05

இனிமை தந்த இன்பமயமான அந்த நாள்கள் அவன் மனதில் நிழலாடின.

இராசாத்திக்குப் பாடசாலை விடுமுறை. இராசாத்தி இதனை முன்னமே அவனுக்கு அறிவித்தாள். ''எனக்கு விடுமுறை ஆரம்பமாகிறது. அப்பாவைக் கூட்டிச்செல்ல வரவேண்டாம் என்று கடிதம் எழுதி விட்டேன். உங்களுடன் போகலாம் என்ற எண்ணத்தில், இங்கு நம்மூரவர்கள் இருக்கிறார்கள் அவர்களுடன் வருவேன் என்று எழுதியிருக்கிறேன். அதற்கு ஏற்றாற்போல் நீங்களும் லீவிற்கு அப்பிளை பண்ணுங்க'' என்றாள்.

''நானும் போகவேண்டித்தான் இருக்கின்றது. நேரத்தோடு சொன்னது நல்லதாகிப் போய் விட்டது. ஏன் வெள்ளிக்கிழமை இரவே றெயினில் புறப்பட்டால் என்ன?''

''ஐயோ வேண்டாம்... இரவெல்லாம் கண்விழிக்க வேண்டும். மட்டக்களப்பிற்கு போக முன்னர் மூன்று மணித்தியாலம் கல்லோயாச் சந்தியில் இருட்டில் கிடக்க வேண்டும். பிறகு மட்டக்களப்பிற்கு விடியப்போய் திரும்ப ஊருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் எடுக்க வேண்டும்.''

''ஏன் இருட்டில் என்னோடு இருக்க பயமா?''

''நீங்க என்னைப் பிடித்து விழுங்கி விடுவீங்களா? அதற்கில்லை பஸ் என்றால், காலையில் ஏறினால் மாலை 4-5 மணயளவில் வீட்டிலே இறங்கிவிடலாம். காலைச் சாப்பாடு, தேநீர், மதியச் சாப்பாட்டிற்கெல்லாம் இடையில் கடையில் நிப்பாட்டுவாங்க. ரொம்ப சௌகரியமாக போய்வரலாம். இப்படித்தான் சித்திரை லீவிற்கு அப்பாவோட போய் வந்தனான்.''

''உனக்குச் சௌகரியம் என்றால் எனக்கும் சரிதான். ஒரு நாள் முழுவதும் இருவரும் ஒன்றாக இருந்து பிரயாணம் செய்வது எனக்கு மகிழ்ச்சிதான்.''

''பிரயாணம் பண்ணுறது சரி பஸ்ஸில சேட்டைகள் விடாமல் இருக்க வேண்டும்.''

''நானென்ன சேட்டைகள் விடுறது. இருவரும் ஒன்றாகப் போனா, பாக்கிறவங்க கணவன் மனைவி என்றுதான் எண்ணிக் கொள்ளுவாங்க. நீயேன் கவலைப்படுகின்றாய்?''

''அதுதான் எனக்கு கவலை. அப்படி நாம் போகும் போது நமக்குத் தெரிந்தவர்கள் யாரும் வந்துவிடக் கூடாது என்பது தான்.''

''அப்படி ஆரும் வந்தால் நீ அவங்களோட போய்ச் சேர் நான் அடுத்த நாள் பஸ்ஸில வாறன்'' என்று கோபமாக பேசினான்.

''ஐயோ அத்தான், அதுக்கில்ல சொன்னனான். நாம சந்தோசமாகப் போகப் போவதும் கெட்டுவிடப் போகிதென்ற கவலை தான் எனக்கும்'' என்று கூறிக்கொண்டு, அவனருகில் வந்து அவனது கழுத்தைச் சுற்றிப் பிடித்துக்கொண்டாள்.

என்ட குஞ்சுக்கும் ஆசையிருக்குதெண்டு சொல்லு''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பின்ன'' என்று அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

அவர்கள் திட்டப்படி பிரயாணம் ஆரம்பமாகியது. காலைச் சாப்பாட்டை டீச்சர் தயார் பண்ணிக் கொடுத்திருந்தார். கந்தளாயில் காலைத் தேநீருக்கு பஸ் நிற்பாட்டப்பட்ட போது, இருவரும் காலை ஆகாரத்தை அருந்தினர். மீண்டும் பஸ் புறப்பட்டது. எல்லாம் தங்களுக்கு அறிமுகமில்லாத முகங் களாக இருந்ததினால் அவர்கள் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. வழி நெடுகிலும் இருவரும் பேச்சும் கதையும் சிரிப்புமாக பெரும் கும்மாளமாகவே வந்தனர். பார்த்தவர்கள் இருவரும் புது ஜோடிகள் என்றுதான் எண்ணிக் கொண்டனர்.

அவள் தனது வாழ்க்கை எப்படி அமைய வேண்டும். தனக்கு எப்படிப்பட்ட கணவன் கிடைக்க வேண்டும் என்று தான் எண்ணியிருந்தது, இனித்தன் வருங்காலத் திட்டம் என்ன என்பதையெல்லாம் கூறிக்கொண்டு வர, இடையே கேலி செய்து வந்தாலும் அவள் கூறியதன் சாரத்தை முற்றாக தன்மனதில் பதித்துக் கொண்டான். ''அத்தான், நான் எப்படிப்பட்ட கணவன் எனக்கு கிடைக்க வேண்டும் என்று எண்ணியிருந்தேன் தெரியுமா? மதுபானம் பாவிக்காதவராக, பீடி சிகரட் குடிக்காதவராக மற்றப் பெண்கள் பின்னால் சுற்றாதவராக சோஷ்யல்லாக நடக்கக் கூடியவராக இருக்க வேண்டும் என்று விரும்பினேன். அப்படியே கிடைத்ததில் எனக்கு எவ்வளவு சந்தோசம் தெரியுமா?''

''இராசாத்தி இவ்வளவையும் விரும்பின நீ, அழகான நல்ல உத்தியோகம் உள்ளவனாக இருக்க வேண்டும் என்று விரும்பவில்லையா?''

''என்னத்தான் கேள்வி இது? எந்தப் பெண்ணும் தனக்கு வரப்போகும் கணவன் ஒரு ஆணழகானாகத்தான் இருக்க வேண்டும் என விரும்புவாள். ஆனால், நான் நல்ல உள்ளத்தையே விரும்பினேன். வெளியழகைக் கண்டு நான் ஏமாற விரும்பவில்லை. மனம் கொண்டது தானே மாளிகை.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்படியென்றால், நான் அழகில்லாவிட்டாலும் பரவாயில்லை என்று ஏற்றுக் கொண்டயாக்கும்...''

''ஐயோ! அத்தான் ஏன் நீங்க இப்படியெல்லாம் பேசுறீங்க? உங்களைப்பற்றி என்ட பிறண்ட்ஸ் கதைக்கும் போதே எனக்கு பெருமையாக இருக்கும். நீங்க நல்ல அழகு; நல்ல ஹான்சம்; நல்ல ஜோடிப் பொருத்தம் என்றெல்லாம் சொல்லும் போது, பேசாதீங்கடி கண்பட்டு விடப்போகின்றது என்று சொல்வேன். நீங்க என்னவென்றால் இப்படிச் சொல்றீங்க'' என்று சிணுங்கினாள்.

இப்படி அவளை அடிக்கடி சீண்டிப் புதினம் பார்த்துக் கொண்டு வந்தான். திருமலைக்கு வந்த பின்னர் தனக்கு சிகரட் பிடிக்கும் பழக்கம் ஏற்பட்டதையும் இராசாத்தி விரும்ப வில்லை என்பதை அறிந்து, அவள் அறியாமலே விட்டதையும் எண்ணிப் பார்த்துக் கொண்டான்.

இப்போது சவூதியில் நண்பர்கள் சிகரட் பண்டலாக வாங்கி நாளுக்கொன்று, இரண்டு பக்கற் என்று புகைக்கும் போது அவனுக்கும் வாய் துருதுருவென்னும். என்றாலும் இராசாத்தி யின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் அவனைத் தடுத்துவிடும்.

ஒருநாள்... ''அம்மா இராசாத்தியைப் பற்றி என்ன நினைக்கிறீங்க? நல்ல வடிவு கெட்டிக்காரியும் கூட நல்ல குணம் என்று சேர்டிபிக்கட் கிடைத்திருக்கிறது'' என்றான்.

அம்மா, ''அதெல்லாம் உனக்கென்னத்துக்கு போய் உண்ட வேலையைப்பார்'' நாளைக்கு நாலு பேச்சுக் கொடுக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

மகனைச் சமாதானப்படுத்தியதில் திருப்தி.

அடுத்த நாள் காலை அண்ணனிடம் கயல்விழி சொன்னாள் ''எனக்கு பெரும் சந்தோஷம். நல்லதொரு அண்ணி எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைப்பா'' என்றாள்.

மகேந்திரன், ''அம்மா எங்கே?'' என்றான்.

''அம்மா எங்கோ போய்விட்டா அப்பா முற்றத்தில நிற்கிறார்'' என்றாள்.

இதேநேரம் தனது தாய் அங்கு இராசாத்தியின் வீட்டில் நின்று பேசிக் கொண்டிருப்பது இவர்களுக்குத் தெரியாது. அதையறியாது அவர்கள் அவளைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர்.

''இராசாத்தியை நான் விரும்புவது உனக்கு விருப்பமா? எனக்கு ஐஸ் வைக்கிறாயோ? நான் உனக்கு உதவ வேண்டும் என்று''

''இல்லாட்டி எண்டாப் போல எங்கட அண்ணன் எனக்கு உதவாமல் போகமாட்டாரா?'' என்று இப்போது தான் உண்மையில் ஐஸ் வைத்தாள்.

தொடர்ந்து, இராசாத்தி நல்ல கெட்டிக்காரி. அட்வான்ஸ் லெவல் படிக்கக்குள்ள எங்களுக்கு சீனியர். கம்பஸுக்கு வந்ததும் படிக்க வழியில்லாமல் வேலைக்கு போய்ட்டா. வகுப்பில என்ன 'கொன்வேன்றிலே' அவவோட எல்லாருக்கும் நல்ல விருப்பம் நல்ல வடிவும், நல்ல பண்பாகச் சின்னப் பிள்ளைகளோடும் பழகுவா. கெட்டிக்காரி என்ற கர்வமும் இல்ல எங்கட பள்ளியிலேயே அழகி அவதான். என்றால் பாருங்களேன். இப்படிப்பட்ட ஒரு அண்ணி எனக்கு கிடைச்சா சந்தோஷமாக இருக்காதா பின்ன? உண்மையாக அண்ணா, உண்மையிலேயே இராசாத்தியும் ஒரு அதிஷ்டக் காரியண்ணா. பாவம் அம்மாட்ட சொன்ன மாதிரி பேசிக் கதைத்துப் போட்டு அவளை ஏமாற்றிவிடாதே!'' என்றாள்.

''சீ... அப்படிச் செய்வனா? அம்மாவைச் சமாதானப்படுத்த ஒரு பொய்க்குச் சொன்னனான்.''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்க சொன்னாப் போல அம்மா சமாதானம் அடையல்ல... இரவு அப்பாவேட கதைத்துக் கொண்டிருந்தா? ஏதோ கடித விஷயமெலல்லாம் கதைத்தாங்க. பிறகு வெளிநாடு போகப் போவதாகவும் அதன் பிறகு எல்லாம் சரியாகிவிடும் என்று அப்பா சொன்னார்.''

''அப்பாதான் கடுமையாக இருப்பார் என்று எண்ணினேன் இப்ப அம்மாவல்லோ கெடுபிடி பண்ணுகிறா? நீதான் ஒருக்கா அம்மாட்டச் சொல்லன்''

''வரட்டும் அம்மா... நீங்க போய்விருவீங்க தானே... நான் அம்மாட்ட சந்தர்ப்பம் பார்த்து கதைக்கிறன்.''

''வெளிநாட்டுக்குப் போனாப்போல நான் அவளை மறக்கப் போவதில்லை. நான் வெளிநாடு போகப் போவது உனக்கு சீதனம் தேடத்தான். அது முடிந்ததும் வந்து அவளையே கட்டிக் கொள்வேன்.''

''அண்ணா எனக்காகப் போனாலும் உங்கட நன்மைக்குப் போனாலும் நீங்க இராசாத்தியை மறக்காமல் இருந்தால் போதும். காசு பணமெல்லாம் என்றைக்கும் தேடிக் கொள்ளலாம் அண்ணா. நல்லவங்களை இப்படியொரு அண்ணியை இனி நீங்க தேடமுடியாது.''

முற்றத்தில் அப்போது வந்த தாய், அங்கு நின்று உலாவிக் கொண்டிருந்த அப்பாவிடம் ஏதோ சத்தமாக பேசுவது கேட்டு இருவரும் வெளியே வந்து பார்த்தனர்.

''நல்ல கேள்வி நாலு கேட்டுத்து வந்திருக்கிறன். பொம்பிளப் பிள்ளை வளர்க்கிறதெண்டா ஒழுங்காக வளர்க்க வேண்டும். வேலையை தேடிக்கொடுத்து புருசன் பிடிக்கயா அனுப்பிறது.''

''இஞ்ச சத்தம் போடாதை.. உன்னப் பேசாமல் இருக்கச் சொல்லி அல்லவா சொன்னனான். நீயேன் வலுச் சண்டைக்கு போறாய்?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்க சொல்லிப் போட்டு சும்மா இருப்பீங்க.. பெத்தவயிறு எனக்கெல்லோ பத்துது?''

''நான் சும்மா இருக்கல்ல ஒரு திட்டத்தோடதான் இருக்கிறன். எதுக்கும் நேரமும் காலமும் வரவேணும் ஏன் அவசரப்படுகிறாய்?''

அண்ணாவும் தங்கையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மகேந்திரன் இராசாத்தியின் வீட்டுக்குச் செல்வதற்கு அவசரப்பட்டான். அங்கு என்ன நடந்தது என்பதை அறிய வேண்டும் என்ற ஆதங்கம் மேலேங்கி நின்றது.

சற்று நேரத்தில் தாய் குசினிப் பக்கம் செல்ல, தங்கையிடம் ''விசயத்தை கேட்ட அறி'' என்று கூறிவிட்டு புறப்பட்டு விட்டான் மகேந்திரன்.

அவன் எங்கே செல்கிறான்? எதற்குச் செல்கிறான்? என்று கேட்க அங்கு எவரும் இருக்கவில்லை. அப்பாவும் பின்பக்கம் சென்றுவிட்டார். மகேந்திரன் வழமை போல் இராசாத்தியின் வீட்டுக்குச் சென்றான். அவன் சென்றதும் ஓடி வரும் இராசாத்தியைக் காணவில்லை. சற்று நேரத்தில் ஆள் அரவம் கேட்டு அவளுடைய தாய்தான் வெளியே வந்தாள்.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06

ஆள் அரவம்கேட்டு வந்த இராசாத்தியின் தாய் மகேந்திரனைக் கண்டதும் முகம் சுளித்தாள்.

''தம்பி நீங்க புதுப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு வந்ததும் போதும்; நாங்கள் பேச்சு வாங்கினதும் போதும். நீங்கள் இங்கு வாறது உங்களுக்கு நல்லதில்ல; எங்களுக்கும் நல்லதில்ல. பெண்ணப் பெத்த நாங்கள் தான் கவனமாக இருக்க வேண்டும். சீலை முள்ளில் விழுந்தாலும், முள் சீலையில் விழுந்தாலும் கெடுதல் சீலைக்குத்தான்.''

''மாமி அதெல்லாம் இருக்கட்டும் இப்ப இராசாத்தி எங்க? என்ன நடந்து என்றதை நான் அறிய வேணும்.''

''நான் சொல்லிறதைச் சொல்லிப் போட்டன். அவள் காலையில் இருந்து சாப்பிடாமல் அழுது கொண்டு கிடக்கிறாள்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

மகேந்திரன் மெல்ல எழுந்து அவளுடைய அறையை எட்டிப் பார்த்தான். கட்டிலில் குப்பறப் படுத்துக் கொண்டு தலையணையில் முகத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதைத்துக் கொண்டு விம்மி விம்மிக் கிடந்தாள். மெல்ல உள்ளே சென்றவன் செய்வதறியாது அப்படியே சிறிது நேரம் பார்த்துக் கொண்டு நின்றான். பின்னர் கட்டிலில் அமர்ந்து அவளை மெல்லப் புரட்டினான். அவள், அவனது மடியில் தலையை வைத்துக் கொண்டு 'கேவிக் கேவி'க் அழுதாள். அழுகை ஓயும் வரை அவளது தலையைத் தடவிக் கொண்டிருந்தான்.

''இராசாத்தி என்ன நடந்தது? ஏன் இப்படி அழுகிறாய்? அம்மா வந்து என்ன பேசினவ?'' என்றான் கேள்விமேல் கேள்வியாக.

''உங்கட அம்மா, வீட்டில வந்து எங்களுக்கு பேசியிருக் கலாம். தெருவில நின்று கொண்டு பேசி எங்கட மானத்த போக்கத் தேவையில்ல. நாங்க ஏழைதான் என்றாலும் கௌரவத்துடன் வாழ்கின்றோம். இப்படி மானம் தெருவில போகக்கூடியபடி நாங்க வாழல்ல...''

''அப்படி என்ன பேசினா? என்றுதான் கேட்கிறன். அதைச் சொல்லாமல் என்னவெல்லாம் பேசினா?''

''எப்படிச் சொல்லுறது?.. நாங்க றோட்டில போய்நின்று கேட்டாத்தானே? ஏதோ சத்தம் கேட்க... நான்தான் போய் எட்டிப் பார்த்தேன். பிள்ளை வளர்க்கிறதென்றால், ஒழுங்காக வளர்க்க வேணும்... வேலைசெய்யப் போனவளா? புருசன் பிடிக்கப் போனவளா? என்ட மகனுக்கும் என்ன மாயப் பொடியோ மந்திரமோ செஞ்சு போட்டாள். பெட்டைகளைப் பார்க்காதவன்... இப்ப இவளுடைய வீடே தஞ்சம் என்று கிடக்கிறான். இப்படி என்னவெல்லாமோ பேசிக் கொண்டி ருக்க, கூடியவர்கள் கேள்விகள் கேட்க இன்னும் பேச்சின் வேகமும் ஆத்திரமும் கூடிற்று. நான் ஓடிவந்து கதவைப் பூட்டிற்று படுத்திட்டன். நல்லவேளை அம்மா வீட்டில இருக்கல்ல இல்லாட்டி அம்மாவும் வாய் கொடுத்திருந்தா இஞ்ச பெரிய புதினமாகத்தான் போய் இருக்கும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்கட அம்மா பேசிப்போட்டுப் போன பிறகுதான் அம்மா வந்தா. வரும் வழியிலே யாரே சொல்லக் கேட்டுத்து வந்து அவவும் என்னைப் பேசினா. மானத்துக்குத்தான் மனிசர் வாழ்கிறது? இன்னும் என்னத்துக்கு வாழவேண்டும் என்று தோன்றுகின்றது?'' என்று கூறி அழுதாள். அவளது கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தவனுக்குள் ஒரு தீர்மானம் நிறைவேறிக் கொண்டிருந்தது.

''இராசாத்தி கண்ணைத் துடைத்துக் கொண்டு எழும்பு. முகம் கழுவிக் கொண்டு வா... சாப்பிடு...''

''எனக்கு ஒண்டும் வேண்டாம். என்னைச் சும்மா இப்படியே விட்டீங்க எண்டால் போதும்.''

''இராசாத்தி இப்ப நான் சொல்லுறபடி கேட்கப் போறாயா? இல்லையா? நான் நாளைக்கு காலையில போறன். ஞாபகம் இருக்கட்டும்''

''ஐயோ! என்னை இந்த நிலையில் நீங்களும் விட்டுத்துப் போயிற்றா... எனக்கு ஆறுதல் கூறுவார் யார்? வீட்டிலயும் அம்மாவும் பேசிக் கொண்டு இருக்கிறா. அப்பா வந்தாலும் இது நீயே தேடிக்கொண்ட வினை என்றுதான் பேசுவார்''

''நான் நாளைக்குக் காலையில போறதெண்டு ஏற்பாடு தெரியும்தானே! உனக்காக வேணுமெண்டா பஸ் பயணத்தை விட்டு இரவு ரெயினில் போகலாம் எப்படிப் போனாலும் திங்கட் கிழமை காலை வேலைக்குப் போக வேண்டும்''

''அப்படி என்றாலும் நில்லுங்கவன்.''

''அப்ப நான் சொல்லுறபடி எழும்பி முகத்தைக் கழுவிச் சாப்பிடு. எல்லாம் சொல்லுறன்''

அவள் எழுந்து கிணற்றடிக்குச் சென்று முகத்தை அலம்பிக் கொண்டு வந்தாள். 'சாப்பிட்டேன்' என்ற பெயருக்குச் சாப்பிட்டாள். அவனுக்குத் தேநீருடன் வந்தாள். ஆனாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது முகவாட்டம், உறக்கம் இன்னும் நீங்கவில்லை; அவள் முகத்தை இப்போது மலரவைக்க முடியாது என்று புரிந்தது.

''இராசாத்தி காதலிக்கும் போதே இப்படி எதிர்ப்பு வரும் என்று எனக்குத் தெரியும். ஆகவே, அது என்னைப் பாதிக்க வில்லை. ஆனால், உன்னை வருத்தும்படி நிகழ்ந்த நிகழ்ச்சி எனக்கும் வருத்தத்தை தருகின்றது. ஆனால், இந்த எதிர்ப்புக் களைக் கண்டு கலங்கக் கூடியவனில்லை நான்'' என்று கூறிய மகேந்திரன் சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு,

''சிரிக்கிற காதல் முறிந்துவிடும். அழுகிற காதல் உறுதிப்படும் என்று படித்திருக்கின்றேன். காதல் என்னும் பயி ருக்கு எதிர்ப்புகள் தான் உரம். எவ்வளவு எதிர்ப்புகள் ஏற்படு கின்றதோ அவ்வளவுக்கு நமக்கும் காதலில் உறுதி ஏற்படும். இதுதான் நாம் காதலில் வெற்றி பெற உதவும். இந்தச் சிறிய நிகழ்ச்சியே எனது மனதில் சற்று நேரத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. அம்மாவிடம் நேற்று நான் சும்மா கண்டு பேசிப்பழக்கம் என்றுதான் சொன்னேன். இன்று நேரடியாக நான் அவளையே காதலிக்கிறன். கல்யாணம் முடித்தால் அவளையே முடிப்பேன். என்று உறுதியாகக் கூறிவிட்டுப் போகப் போகின்றேன். இனி என்ன முடிவு ஏற்பட்டாலும் நான் கவலைப்படப் போவதில்லை. இனி எனக்கு மனைவி நீதான் என்பதை எனது வீட்டார்களும் இன்றிலிருந்து அறிந்து கொள்ளப் போகின்றார்கள். நீ இச்சிறு சம்பவங்களுக்கு கவலைப்படாமல் என்னை நம்பித் தைரியமாக இருந்தால் போதும். அதுதான் நீ எனக்குச் செய்யும் உதவி. நீ என்னுடன் ஒத்துழைத்தால் தான் நான் எனது முயற்சியில் வெற்றி பெற முடியும். நீ தயங்கி ஒதுங்கினால் என்னால் எதுவும் செய்ய முடியாது. இத்தனைக்கும் உனக்கு ஆறுதல் கூறவே வந் திருக்கிறேன். எனக்கு ஒத்துழைப்பு தருவதா இருந்தால் சிரி பார்ப்பம்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அத்தான், எனது காதுகளையே நம்ப முடியவில்லை... நீங்கள் அத்தனை துணிந்த பின்பு உங்களுடன் வருவதைத்தவிர எனக்கு வேறு வழி ஏது? வாழ்ந்தால் இருவரும் ஒன்றாக வாழ்வோம். இறந்தாலும் இருவரும் ஒன்றாகச் சாவோம். இது உறுதி'' என்று அவனது கைகளைப் பற்றிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தாள் இராசாத்தி.

''என்ட அச்சா இராசாத்திக் குஞ்சு'' என்று அவள் கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தான். அது வழிந்து கொண்டே இருந்தது. அவனும் ஆனந்த பரவசம் அடைந்தான். மகேந்திரன் வீட்டுக்கு வந்து சேர்ந்த நேரம் மதியச் சாப்பாடு முடிந்து விட்டிருந்தது. வந்தவன் சாப்பாட்டில் விருப்பம் இல்லாமல் தனது அறையிலேயே அடைபட்டுக் கிடந்தான். வெகு நேரம் சென்ற பின்னரே அவன் தாயார், 'அவன் வந்த விட்டானா?' என்று பார்க்க அவனுடைய அறைக்குள் வந்தாள். அப்போது அவன் கட்டிலில் படுத்து எண்ணச் சுழலில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தான்.

''எங்க மகன் போனனீ இவ்வளவு நேரமும்? நான் இன்னமும் வரவில்லையாக்கும் என்று எண்ணிக் கொண்டிருந்தன். நாளைக்கு போக வேண்டும் என்று சொன்ன நீ அல்லவா? நாளைக்கு போக ஏலாது. பஸ் பிறேக் டவுனாம். அந்த பஸ்தானாம் வந்து போறது டிக்கட் புக் பண்ண போன நான் பஸ் வரல்ல. எழும்பிச் சாப்பிட்டுத்து படு நாளைக்கு இல்லாட்டி நாளை அடுத்த நாள் போகலாம்.'' என்றார் அப்பா.

''எனக்குச் சாப்பாடு வேணாம்''

''ஏன் மகன் எங்காவது சாப்பிட்ட நீயா?'' - இது அம்மா.

''இல்ல... காலையில நீங்க செஞ்சித்து வந்த வேலையைப் பார்த்து எனக்கு அவமானமாக இருக்கு''

''என்ன செஞ்சித்து வந்த நான்? அவங்களுக்கு ஆரம்பத்திலேயே நாலு வார்த்தை சொல்லி வைச்சாத்தான் அடக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கமாக இருப்பாங்க"

''இப்ப என்ன நடந்திட்டு என்று நீங்க போய் பேசிப் போட்டு வந்திருக்கிறீங்க? உங்கட மகனைப் பிடிச்சிடுவாங்க என்ற பயமா?"

''பிள்ளையைப் பெத்த நான் பயப்படத்தானே வேணும்"

''அம்மா எல்லாப் பக்கத்து நியாத்தையும் உங்கட பக்கமா எடுத்துக்காதேயுங்க.. உங்கட மகள் காதலிச்சா அவளை ஏசுறீங்க.. மகன் காதலிச்சா இல்ல போய் வந்ததற்கே அவளை ஏசுறீங்க.. உங்கடை மகளைப் போலதான் அவளும் ஒரு வயது வந்த பெண்.. பிள்ளை நாளைக்கு ஒருவனுடன் வாழப் போகிறவள். அவள் என்னை வலைவீசிப் பிடிச்சிட்டாள் எண்ட மாதிரி நீங்களும் கதைத்துப் போட்டு வர, நானும் அங்கு போய் வந்ததிற்கு விஷயம் உண்மையாகிப் போய்விடும்" என்றவன் சிறிது நேர மௌனத்தின் பின்,

''என்ன போய்விட்டது?... ஊர் இப்ப அப்படித்தான் கதைக்குது. இனி அவளை எவன் கட்டிக்க வருவான். இனி நான்தான் அவளைக் கட்டிக்கொள்ள வேண்டும். வேறு வழி யில்லாம நீங்கதான் செஞ்சிருக்கீங்க''

''என்ன மகன் சொல்கிறாய்?... நான் இப்படியெல்லாம் வருமெண்டு நினைக்கல்ல... ஊர் ஆக்கள் சொல்லுறதைப் பற்றி கவலைப்படாமல் நீ வேலைக்கு போய்ச் சேர்... மற்றதை நான் பார்க்கிறான்... அப்பாட்ட இதையெல்லாம் சொல்லாத அவருக்கு பிறஷர் கூடிவிடும்"

''அப்பாவுக்கு தெரியத்தானே வேணும்" என்றான் மகேந் திரன்.

''நான் எல்லாத்தையும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறன். இவளிட்ட சொன்ன நான், ஆத்திரப்படாம கொஞ்சம் ஆறுதலாக இரு.. என்று சொல்லக் கேட்கல்ல இப்ப அனுபவிக் கட்டும்'' என்றார் அப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்பா என்னில எந்தப் பிழையும் இல்ல... வெறும் பழக்கத்தை, இப்ப கட்டாய நிர்ப்பந்தத்திற்கு கொண்டு வந்தது அம்மாதான். நமக்கும் ஒரு பெண் பிள்ளை இருப்பதை எண்ணி அவளது நிலையையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.''

''அதெல்லாம் கவனிக்கலாம்... நீ போய் உன்னுடைய வேலைகளைப் பார். அதற்கு நேரமும் காலமும் வரட்டும் பார்த்துக்கிறன்.''

அப்பாவின் தந்திரத்தை அறியாமல், அப்பா தன்னுடைய பக்கம் நின்று பேசுகிறார் என்று எண்ணி மகிழ்ந்தான் மகேந் திரன்.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07

மகேந்திரன் முன் விறாந்தையில் வந்து கதிரையில் அமர்ந்தான். பின் கட்டில் அம்மாவும் அப்பாவும் பேசிக் கொண்டிருந்தனர்.

கயல்விழி மெல்ல அண்ணாவை நாடி வந்தாள். "அண்ணா நீ போன பிறகு அப்பா அம்மாவைப் பேசினார்."

"அதுதானே கேட்டேன் அப்பா என்ட பக்கம் தான்."

"மண்ணாங்கட்டி... நான் சொல்றதைக் கொஞ்சம் கேளன். உன்னுடைய காதல் விஷயம் அவருக்கு முன்னமே தெரியுமாம். அம்மா கத்துவா என்றுதானாம் அவவிடம் சொல்லல்ல... எல்லாம் திருகோணமலையில் இருந்து செல்லத்துரையோ ஆரோ எழுதினதாம். அதுதானாம் உன்னை வெளி நாட்டுக்கு அனுப்ப முயற்சி எடுக்கும் படி எழுதினாராம்."

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு மௌனமாக இருந்தான் மகேந்திரன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னண்ணா உங்கள் வாயை மூடிக்கொண்டிருக்கச் சொன்ன மாதிரி ஒன்றும் பேசாமல் இருக்கிறீங்க?..''

''இல்ல தங்கச்சி இதுபற்றி நன்றாக சிந்திக்க வேண்டும்'' என்றான்.

அவள் மெல்ல நகர்ந்தாள். தந்தையின் மாஸ்ரர் பிளான்படி தான் தன்னை வெளிநாட்டுக்கு அனுப்பும் திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கிறது. என்பதை அறிந்ததில் இருந்து அவனுக்கு நிம்மதியில்லாமல் போய்விட்டது. இதை எப்படி முறியடிப்பது என்பதைப் பற்றியே அவனது சிந்தனை சுழன்றது. இதற்காக வெளிநாடு செல்வதை இரத்துச் செய்யவும் விரும்பவில்லை. அது தனது குடும்ப பொருளாதாரத்தை பாதிக்கும். ஆகவே, வெளியே போறது போறதுதான். ஆனால் இராசாத்தியை மறப்பது போல் நாமும் பாசாங்கு செய்து கொண்டு நடக்க வேண்டியதுதான். இதை ஏற்கனவே இராசாத்தியிடம் சொல்லி வைக்கலாம். அப்பாவிற்கு கடைசிவரை தெரியாமல் நடப்பதன் மூலமே இதை முறியடிக்க முடியும். வெளியே சென்றதும் நண்பர்களுக்கும் ஏன் கயல்விழிக்கும் கூட இராசாத்தி பற்றி எழுதுவதை விட்டுவிட வேண்டும். வேண்டுமானால் வெறுத்து ஒதுக்கிவிட்டது போல் எழுதி விடலாம் இதைவிட வேறு சரியான வழி அவனுக்குத் தோன்றவில்லை.

இறுதியாக இத்தீர்மானத்தை எடுத்த பின்னர் 'ஆமாம், இதுதான் சரியான வழி' என்று எண்ணிக் கொண்டு நித்திரைக்குப் போனான். படுக்கையில் விழுந்தாலும் அவனுக்கு நித்திரை வரவில்லை. 'அப்பா மறந்துபோனார், நான் அவருக்கு பிறந்த பிள்ளை என்பதை. அதை நான் நிருபித்துக் காட்ட வேண்டும். நானும் பிடித்த பிடி வெல்ல வேண்டும். வெளிநாட்டில் சென்று என்ன அப்படியே தங்கி விடப் போகிறேனா? வந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளலாம். நான் வரும் வரை இராசாத்தி எனக்காகத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருப்பாள்' இவ்வாறு எண்ணியவாறு படுத்தவன் எப்போது தூங்கினானே தெரியாது.

காலையில் ஏழு மணியாகியும் அண்ணா எழும்பாததைக் கண்ட கயல்விழி கோப்பியுடன் வந்து அவனை எழுப்பினாள். எழும்பிய பின் மணியைப் பார்த்து விட்டு, ''இவ்வளவு நேரம் தூங்கிவிட்டேனா?'' என்று வியந்தான்.

''இன்று ஞாயிற்றுக் கிழமை தானே எங்கும் செல்ல மாட்டீங்க படுக்கட்டும் என்று அம்மாதான் சொன்னா... அதுதானண்ணா எழுப்பல்ல நான்'' என்றாள் கயல்விழி.

வாயைக் கொப்பளித்து விட்டு, கோப்பியை பருகினான். அதிகாலையிலே எழுந்து குளித்து நல்ல ஆடையணிந்து திருநீறு, சந்தனப் பொட்டு எல்லாம் வைத்திருந்தாள் கயல்விழி. இதை அவதானித்த மகேந்திரன் கேட்டான்,

''இன்று என்ன விஷேசம் தங்கச்சி?'' என்று.

அவள் பதில் கூறாமல் நாணி நின்றாள். ''ஏன் கோயிலுக்கு போய் வந்த நீயா?'' ஆமாம் என்று தலையை மட்டும் ஆட்டினாள். அவள் முகத்தில் தெரிந்த பூரிப்பு அதிலும் ஒரு விஷேசம் இருக்கிறது என்பதை அவனுக்கு உணர்த்திற்று.

''ஏன் எதுவும் பேசமாட்டேன் என்கிறாய்? இந்திரனும் வந்திருந்தானா?'' என்று கேட்டதும் தலையை ஆட்டிவிட்டு ஓடிவிட்டாள் கயல்விழி.

ஓகே... இப்போது சந்திப்பு கோயிலில்தான் நடக்கின்றது போல. வெள்ளிக்கிழமைகளில் சனக்கூட்டம் அதிகமான படியால் ஞாயிற்றுக் கிழமைகளை தெரிந்து வைத்திருக்கிறார்கள். கயல்விழி இப்போது வீட்டைவிட்டு வெளியே எங்கும் செல்லாததால் இதைவிட வேறு வழியில்லை என்பதை ஒருகணத்தில் புரிந்து கொண்டான் மகேந்திரன்.

எழுந்து குளித்து உடுப்பு மாற்றி சாமி கும்பிட்டு விட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே வந்து அமர்ந்ததும். அப்பா அன்றைய தினசரிகளுடன் வந்து கொண்டிருந்தார். அதில் ஒன்றைப் பெற்றுக் கொண்டு ஆழ்ந்து போனான் மகேந்திரன்.

கயல்விழி அதற்கு பிறகு அவன் கண்களில் தென்படவே யில்லை. 'அண்ணா உன் காதலை மட்டுமல்ல எனது காதலையும் நீதான் காப்பாற்ற வேண்டும்' என்று சூசகமாக உணர்த்தியது போல் இருந்தது மகேந்திரனுக்கு. ஆமாம் அதையும் நிறைவேற்றி வைக்க வேண்டியது எனது பொறுப்புத் தான். என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

மதியம் சாப்பிடும் போதுதான் அப்பா கேட்டார்,

''என்ன மகன் எல்லா டெக்குயுமென்டும் எடுத்து விட்டாயா? எப்ப போகப் போறாய்? ''

''எல்லாம் சரியப்பா நாளைக்கு இரவு றெயிலுக்கு போகலாம் என்றிருக்கிறன்'' என்றான்.

''எல்லாவற்றையும் கொண்டு செல்லத்துரையிடம் கொடு. அவன் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளுவான். ஒரு கடிதமும் தாறன். கொண்டு போய்க் கொடு'' என்றார்.

'செல்லத்துரை' என்ற பெயரைக் கேட்டதும் அவனுக்கு எரிச்சலாக வந்தது. என்றாலும் அடக்கிக் கொண்டான். தனக்கு வேலை பெற்றுத் தந்த நன்றிக் கடனும் உண்டு. இப்போ வெளியில் அனுப்ப முயற்சிப்பவரும் அவரல்லவா? ஆமாம் அந்த நேரத்தில் வெளிநாடு செல்வது என்பது அவ்வளவு பிரபல்யமாகவில்லை. ஊரில் அங்கொன்றும் இங்கொன்று மாக ஒரு சிலர் தங்கள் செல்வாக்கைப் பிரயோகித்துச் சென்று கொண்டிருந்தனர். இதனால் செல்லத்துரையை பகைத்துக் கொள்ளக்கூடாது. அவர் தூரத்து உறவு என்றாலும் அவர் தனக்குச் செய்யும் உதவிக்குத் தான் என்றும் நன்றிக்கடன் பெற்றவனாக இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, அவர் தன் காதல் விடயம் பற்றி வீட்டுக்கு எழுதியதும் அதுவே தான் வெளிநாடு செல்லக் காரணமாக இருப்பதும் அத்தனை தூரம் கோபிக்க வேண்டிய விஷய மில்லை என்று விட்டான். என்றாலும் பெரிய மனுசர்கள் சிறுசு களின் காதல் சேட்டைகளை இவ்வளவு உன்னிப்புடன் கவனித்து தடை போட முயற்சிப்பது எரிச்சலையே தந்தது. என்ன செய்ய? என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். கயல்விழி எதுவும் பேசாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். '

''அப்பா, நான் வெளிநாடு சென்று வந்ததும்தான் கயல்விழிக்கு கல்யாணம். நான் உழைக்கபோக விரும்புவது அவளுக்காகத் தான். அவளுக்கு இப்ப என்ன வயதா? நான் போய் வருமட்டும் இரண்டு மூன்று வருடங்கள் இன்னும் காத்திருக்கலாம் தானே.''

''நானும் அதைத்தான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். நீதான் உழைத்து அவளுக்கு சீதனம் கொடுக்க வேண்டும். நல்ல சீதனம் இருந்தா நல்ல மாப்பிள்ளையும் எடுக்கலாம்'' என்றார் அப்பா.

மகேந்திரன் கயல்விழியைப் பார்த்தான். அவள் கடைக் கண்ணால் அண்ணனைப் பார்த்தாள். 'எதற்கும் நீ பயப் படாதே!' என்பது போல் இருந்தது அவளுக்கு. மாலை வரை நேரத்தை கடத்துவது பெரும் கஷ்டமாக இருந்தது. எப்படியும் நேரத்தைப் போக்க வேண்டுமே பத்திரிகைகளை ஒன்று விடாமல் மாறிமாறிப் படித்துக் கொண்டிருந்தான்.

நாலுமணியாகியதும் சைக்கிளை தள்ளிக் கொண்டு வெளி யேறினான். எவரும் 'எங்கே போகிறாய்?' என்று துணிந்து கேட்கவில்லை. எங்காவது நண்பர்கள் வீட்டுக்குப் போகிறான் என்று எண்ணினாள் அம்மா. கயல்விழிக்கு மட்டும் தெரியும். அவன் இராசாத்தியின் வீட்டுக்குச் செல்கிறான் என்று.

மாலை ஒரு குட்டித்தூக்கம் போட்டு எழுந்து முகம் கழுவி தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள் இராசாத்தி. அவள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு தேநீருடன் வந்து அமர்ந்தாள்.

''ஏன் காலையில இந்தப் பக்கம் வரவில்லை. நாளைக்கு போற நீங்கதானே வந்திருக்கலாமே? காலையில... வீட்டில தான் இருந்தனான் பெரிய 'டல்'லாகத்தான் இருந்தது.''

''நீங்க வீட்டு வேலை செய்யிற நேரத்தில வந்து இடைஞ்சல் பண்ணுவானேன்.. என்று இருந்து விட்டேன்.''

''நான் இங்க வீட்டு வேலையொண்டும் செய்வதில்லை.. அம்மாதான் எல்லாம் செய்வா... அதுவும் நீங்க வந்தா, என்னை ஒரு வேலையும் செய்ய விடமாட்டா... போ... போய்க் கதைத்துக் கொண்டிரு... என்று அனுப்பிவடுவா'' என்றாள்.

''நாளை மாலையில போக வேணும்'' என்றவன், இராசாத்தி யிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தான். பின்னர் 'குட்நைட்' என்று கூறிக் கொண்டு அவன் பைசிக்கிளில் ஏறிச் சென்றான்.

அதையே பார்த்தபடி கேற்றடியில் இருட்டில் நின்று கொண்டிருந்தாள் இராசாத்தி.

இரவு முழுவதும் அரைத் தூக்கத்தோடும் கவலையான எண்ணங்களோடும் பிரயாணம் செய்து, விடியற் காலை ஐந்து மணியளவில் திருகோணமலை வந்து சேர்ந்தான். தனது அறைக்கு வந்து உடுப்பை மாற்றி குளித்து விட்டு முதல் வேலையாக இராசாத்திக்கு முதல் முதல் கடிதத்தை எழுத ஆரம்பித்தான். 'நான் சுகமாக வந்து சேர்ந்து விட்டேன். எதற்கும் கவலைப்படாமல் விரைவில் வந்து சேர்.'

கடிதத்தை வேலைக்கு போகும்போது தபால் பண்ண வேண்டும் என்பதால் உடனே எழுதி வைத்து விட்டு மற்ற வேலைகளைக் கவனித்தான். எட்டு மணியளவில் கந்தோருக்கு போனதும் அவனுக்கு தலை கொள்ளாத வேலை காத்திருந்தது. எல்லாம் அவன் வரட்டும் என்று போடப்பட்டிருந்தன. இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது திறமைக்கு ஒரு மதிப்புத்தான் என்றாலும் இவ்வாறு வேலை செய்து காட்டினால் இப்படித்தான் நான் முறிய வேண்டும் என்று எண்ணத் தவறவில்லை. அவன் அடிக்கடி லீவு எடுக்காததாலும் வீட்டுக்கு போகாததாலும் அவன் நாலு அல்லது ஐந்து மாதங்களுக்கு ஒரு முறை செல்லும் போது வேண்டும் லீவு கிடைத்துவிடும். ஆனால் அத்தனை நாளைய வேலையும் அவனே வந்து செய்ய வேண்டும் என்று காத்துக் கிடப்பதுதான் அவனுக்குப் பிடிக்கவில்லை எல்லா பேப்பர் களையும் அள்ளிக் கொண்டு வேலைத் தலங்களைப் பார்வை யிடச் சென்றான். அவற்றில் அவனுக்கு நேரம் போனதே தெரியவில்லை. பேப்பர்களை வீட்டில் வந்து இரவில்தான் கவனிக்க வேண்டியிருந்தது.

இரண்டு மூன்று நாட்களாக வேலைத் தலத்திலும் வீட்டிலுமாக வேலை இருந்த படியால் இராசாத்திக்கு இந்த நாட்களில் நல்ல விடுமுறை கிடைத்தது. அந்த வேலைகளை யெல்லாம் முடித்த பின்னர். அவள் வந்து அவனை முற்றாக ஆட்கொண்டுவிட்டாள். அதன் பிறகே செல்லத்துரையை சந்திக்க செல்லவும் ரீச்சரை சந்திக்க செல்லவும் வசதி கிடைத் தது. எப்படியோ நாள்கள் பறந்தோடி விட்டன. இராசாத்தி வந் து சேர்ந்து விட்டாள். அவனும் அவளைச் சந்திக்க சென்றிருந் தான். அப்பொழுது ரீச்சர் வந்து ''பிள்ளை நாங்க ஒரு கல்யாண வீட்டிற்கு போய் வரவேணும் வீட்டைப் பார்த்துக்குங்க'' என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

மகேந்திரனின் சூடு, அவளை அணைத்ததும் கொஞ்சம் கொஞ்சமாக் தணிந்தது. ''போதும்.. போதும் விடுங்க...'' என்று அவள் முணுமுணுப்பது அவனது வேகத்தை இன்னும் கூட்டியது எனலாம்.

தன்னை விடுவித்துக் கொண்ட இராசாத்தி, ''இத்தனை நாளும் எப்படித்தான் இருந்தீங்களோ?'' என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அடக்க முடியாமல் இருந்தேன்'' என்பதற்கு அறிகுறிதான் இது இன்னும் இருக்கிறது. ரீச்சர் வெளியே போகட்டுமே...'' என்றான் குறும்பு பார்வை பார்த்தவனாக.

அவர்கள் சற்று நேரத்தில் புறப்பட்டு போனார்கள். மகேந் திரன் தன்னிலை மறந்தவனாக அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். கட்டிலில் சாய்ந்தனர். இத்தனை நாளும் போல் தன் இச்சையை தீர்த்துக் கொள்ளப் போகிறார். ஒரு மாதத்திற்கு மேலாக ஆசையாக முத்தமிட்டதும் இல்லை என்று எண்ணித் தான் இசைந்து கொடுத்தாள் இராசாத்தி. ஆனால், கட்டுக் காவல் கரை கடந்து வெள்ளம் பெருக்கெடுத்த போது தன்னால் விடுவிக்க முடியாதபடி உணர்ச்சி வசப்பட்டிருந்தாள். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டான் மகேந்திரன். இரண்டு உள்ளங்கள் மட்டுமில்லை இரண்டு உடல்களும் ஒன்றாகச் சங்கமித்தன. உணர்வுகள் கலந்து பிரிந்து உணர்ச்சி யற்றுக் கிடந்தாள் இராசாத்தி.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08

மூன்று வருடங்களுக்குப்பின் இன்று நினைத்த போதும் அந்த நிகழ்ச்சி அவனை உணர்ச்சியடைய வைத்தது. இந்த நிகழ்ச்சியை எத்தனையோ முறை எண்ணி எண்ணி அனுபவித்து - ஆனந்தித்து இருக்கிறான். இந்த நேரம் தானா நாயர் வந்து கூப்பிட வேண்டும்.

''சொறி நாயர், ஐ ஆம் பீலிங் சிலீப்பிங் - நான் படுக்கப் போறன்.''

''சரி நான் போயிட்டு வாறன். வந்ததும் ஒரு வோக் போவம். கெற் றெடி'' என்று கூறிவிட்டு வெளியேறிவிட்டார் நாயர்.

மகேந்திரன் எழுந்து கட்டிலில் உட்கார்ந்தான். பின்னர் சாரத்தை மாற்றிக் கொண்டு அமர்ந்தான். மீண்டும் விட்ட இடத்தில் இருந்து அவனது நினைவு படர்ந்தது.

❋

சற்று நேரத்தில் உணர்வு வரப்பெற்ற இராசாத்தி எழுந்த கட்டிலில் உடகார்ந்து கொண்டு ''சீ... என்ன வேலை செய்து விட்டீங்க?'' என்று சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தை முழங்கால்களுக்கிடையில் வைத்துக் கொண்டு அழுதாள். மகேந்திரனுக்கு அவளைப் பார்க்க ஒரு பக்கம் அவமானமாகவும் மறுபக்கம் பரிதாபமாகவும் இருந்தது. அவள் தன்பாட்டில் அழுது ஓயும்வ்ரை அவனும் எதுவும் பேசத் தோன்றாமல் அப்படியே இருந்தான். அவளது அழுகை நின்றபாடில்லை. மெல்ல எழுந்து அவளருகே கட்டிலில் சென்று அமர்ந்தான்.

''சொறி இராசாத்தி, என்னையறியாமல் உணர்ச்சிவசப்பட்டு விட்டேன். நானும் இப்படி நடக்கும் என்று எண்ணவில்லை. சும்மா விளையாட்டுக்குத்தான் தொடங்கினேன்'' என்று அவளது தலையை தடவினான்.

''ஐயோ அத்தான் என்னைத் தொடாதீங்க'' என்று அவனது கையை தட்டிவிட்டாள்.

''நீங்க இப்படி நடந்து கொள்ளுவீங்க என்று நான் கனவிலும் எண்ணவில்லை இப்படியெல்லாம் நடப்பீங்க என்று எண்ணியிருந்தா உங்களுடன் இப்படி நெருங்கிப் பழகி இருக்கமாட்டன்.''

''என்னை நம்பு இராசாத்தி! இப்படி நடக்க வேண்டும் என்று நானும் எண்ணவில்லை. ஏதோ தெரியாத்தனமாகத் தப்பு நடந்து விட்டது. என்னை மன்னிச்சுக்கொள்! என்று தானே கேட்கிறன்.''

''மன்னிச்சாப்ப போல செய்த தப்பை மறைக்க முடியுமா? எனக்கு நெஞ்சு வயிறெல்லாம் எரியுது'' என்று மீண்டும் அழத் தொடங்கினாள்.

''இராசாத்தி நடந்தது நடந்து விட்டது; எழும்பு குஞ்சு! நீ என்ன தண்டனை விதிக்கிறாயோ அதை நான் ஏற்றுக் கொள்ளுறன். என்ட 'டார்லிங்' அல்லவா?'' என்று அவள் தலையை நிமிர்த்தினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது கையைத் தட்டிவிட்ட இராசாத்தி நிமிர்ந்து அவனை வெறித்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அவள் அவனது கையை தட்டி விட்டுக் கொண்டிருப்பதில் அவனுக்கு கண்ணீரை துடைக்கவும் முடியவில்லை. வேறு ஆடைகளை எடுத்துக் கொண்டு வெளியே சென்றான். மகேந்திரன் மேசைக்கு பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்ந்து மேசைமேல் தலையைக் கவிழ்த்துக் கொண்டு இருந்தான். நாம் என்னவே செய்யப்போய் விபரீதமாகப்போய் முடிவடைந்து விட்டதே! இப்போது குற்றவாளிக் கூண்டில் நிற்கின்றோமே!! - என்று கூனிக் குறுகிப்போய் இருந்தான். இராசாத்தி குளித்துவிட்டு உடுப்பை மாற்றிக்கொண்டு மற்ற உடுப்புகளைக் கழுவிப் போட்டு அறைக்குள் வந்தாள். மகேந்திரன் கவிழ்ந்த தலை நிமிராமலே இருந்தான்.

''இப்போது எனக்கு என்ன பதில் சொல்லப்போறீங்க?'' என்று கேட்டவாறே கட்டிலில் அமர்ந்தாள்.

அவளைப் பார்க்கத் தயங்கியவனாக ஏறெடுத்துப் பார்த்தான். தான் அவளிடம் என்றும் கண்டிராத கடுமை முகத்தில் படர்ந்தது.

''இராசாத்தி அதுவரை மானசீகமாகக் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தோம். இப்போது உண்மையாகவே மாறி விட்டது. இனி நான்தான் உனக்கு கணவன் - நீ என்ன செய்யச் சொல்கிறாயோ அதைச் செய்ய சித்தமாக இருக்கிறேன். என்ட குஞ்சைவிட எனக்கு எதுவுமே பெரிதில்லை.''

''நாளைக்கே பதிவுக் கந்தோருக்கு போய் திருமணப் பதிவை முடித்துவிடுவோம். யாருக்கும் தெரிய வேண்டாம் ரீச்சரை மட்டும் கூட்டிச் செல்வோம்'' என்றாள் இராசாத்தி.

''உனக்கொரு ஆதாரம் வேண்டுமென்றால் அதைச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை; எனக்கு சம்மதம். நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் உனது நம்பிக்கைக்குப் பாத்திரமான கணவனாக இருக்க விரும்புகிறேன். உன்னை விட்டுவிட்டு ஓடிவிடுவேன் என்று நீ எந்த நிலையிலும் எண்ண இடம் வைக்க நான் தயாரில்லை" என்றான்.

''மணமேடையில் மேளதாளத்தோட - நாலுபேர் மத்தியில தாலிகட்டிக் கைபிடித்த பின்னர் நடக்க வேண்டியது இப்போதே நடந்து விட்டது. இதன் பிறகும் திருமணப் பதிவாகுதல் நடக்காமல் இருந்தால்... என்ன கெதி? பிறகு நான்...!" என்று கூறி மீண்டும் கண் கலங்கினாள்.

''இராசாத்தி, நீ இருக்கும் நிலையில் - எனது குடும்பம் இருக்கும் நிலையில் காதலில் களவெளுக்கம் நடைபெறுவது நியாயமானதுதான் என்று நான் வாதாட விரும்பவில்லை. எனக்கு வேண்டியதெல்லாம் உனக்கு நம்பிக்கையான கணவனாக இருக்க வேண்டியதுதான். நான் உன்னை விட்டுவிட்டு ஓடிவிடுவேன். நீ நடுத்தெருவில் அலைய வேண்டும் என்பதெல்லாம் இல்லை. உன் விருப்பப்படி நாளையே பதிவுத் திருமணத்தை வைத்துக் கொள்ளலாம். சரிதானே!."

''அத்தான் உங்கள நம்பாமலா? இப்படியெல்லாம் கேட்கிறன். என்னுடைய நிலையை நீங்கள் புரிய மாட்டேன் என்கிறீங்க.. நாளைக்கு எனக்கு ஏதும் ஆகிவிட்டால். நான் பாடசாலைக்குச் செல்ல முடியுமா? றோட்டால் தலை நிமிர்ந்து நடக்க முடியுமா? ஒரு ஆசிரியை எத்தனை மாணவிகளுக்கு முன்மாதிரியாக நடக்க வேண்டும். எனது இலட்சியத்தையே பாழடைத்து விட்டீர்களே!" என்று சொல்லி மீண்டும் அழுதாள்.

எழுந்து சென்று அவள் பக்கத்தில் அமர்ந்து கொண்டு அவளை அணைத்துக் கொண்டான். இப்போது அவள் தடுக்கவில்லை. அவனது தோளில் சாய்ந்து கொண்டாள். ''எண்ட இராசாத்தி, நடந்தது நடந்து போயிட்டு என்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிச்சுக் கொள். வீணாக கலக்கமடைய வேண்டாம். நடந்தது உனக்கும் எனக்கும் தானே தெரியும். அப்படி எதுவும் நடக்காமல் பார்த்துக் கொள்ளலாம். நீ விரும்பினால் சொல்லு 'ரப்லட்ஸ்' வாங்கிவாறன் இப்பதான் அதுக்கொல்லாம். வசதி இருக்கே இப்ப எத்தின பேர் இப்படி கல்யாணம் முடிக்க முன்னரே குடும்பமாக இருக்கிறாங்க."

''அப்படியெல்லாம் எண்ணிக் கொண்டுதானா இப்படியெல்லாம் நடந்தீங்க?"

''நிச்சயமாக இல்ல ராசாத்தி! என்ன நம்பு. இது சத்தியம். நடந்த தவறை மறைக்க வேறு வழியில்லாமல் சொல்லுறன். அதுவும் நீ விரும்பினாத்தான். இல்லையென்றால் நீ சொல்லுகிறபடி செய்யிறன். என்னை நம்பினா நீ இதை விரும்பலாம்."

''ஐயோ! அத்தான். உங்கள நம்புற என்ற கதைய விடுங்க உங்கள நம்பித்தானே இப்படியும் நடந்தது. உங்கள் நம்பாட்டி இப்படி எல்லாம் நடந்திருக்குமா? நான் உங்கள நம்புறன் அது இல்ல பிரச்சினை. என்னுடைய மானப் பிரச்சினையை பற்றித் தான் சிந்திக்கிறன்."

''குஞ்சு, ஒண்டுக்கும் கலங்காத நான் போய் 'ரப்லட்ஸ்' வாங்கி வாறன். அதைப்போடு எல்லாம் சரியாப் போகும். அதால நான் உன்னைக் கைவிட்டு விடுவேனோ? வேறு கல்யாணம் முடிப்பேனோ? என்று மட்டும் எண்ணாத உன்னை விட்டால் எனக்கு இந்த உலகமே இல்லை. இது சத்தியம். இந்தக் கோணேசர் மீது ஆணை."

''அத்தான், நான் கேட்காமலே இரண்டாம் முறையாக இப்போதும். கோணேசர் மீது ஆணையிட்டு கூறுறீங்க. நான் இந்த உறுதி மொழியை எல்லாம் நம்பல்ல. உங்கட உள்ளத்த நம்புறன். உங்கட அன்பை விசுவாசிக்கிறன். இதைவிட எனக்குச் சொல்லத் தெரியல்ல."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இராசாத்தி, உன்னை கெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில நான் நெருங்கல்ல இதுவரை கட்டுப்பட்டுக் கிடந்த உணர்ச்சி கரை புரண்டு விட்டது.''

''இனியும் இப்படி நடக்க மாட்டீங்க என்பது என்ன உறுதி. இப்படி மருந்து பாவிக்கலாம் தானே! என்று எண்ணி நடந்தால்...''

''இல்ல... நிச்சயமா இல்ல... உனது விருப்பத்துக்க மாறாக இனி நான் என்றும் நடக்க மாட்டன்.''

''அத்தான் உங்கள நம்பி நீங்க சொல்லுறபடி குளிசை போடச் சம்மதிக்கிறன். ஏனென்டா உங்கட விருப்பப்படி நடக்க வேண்டிய கடமை எனக்குண்டு. ஆனா..''

''என்ன ஆனா... நீ என்ன சொன்னாலும் உன்னுடைய விருப்பத்தையும் கேட்டு நான் நடப்பன்.''

''இப்படி நெடுக நடக்க முயற்சிக்கக் கூடாது. மற்றது என்ன நடந்தாலும் இனி நீங்கதான் எனக்கு கணவர். எந்தச் சந்தர்ப்பத்திலயும் நமக்குக் கல்யாணம் நடக்காம போனாலும். நான் கன்னிமை கழிந்த கன்னியாகவே வாழ்வேன். எப்போதாவது நான் இறக்கும் போது எனது மரணத்திலாவது எனது பிணத்துக்கு மாலையிட்டு நீங்கதான் எனது கணவன் என்பதை ஊர் உலகம் அறியச் செய்யவேண்டும்.''

''போடி பைத்தியமே அப்படியெல்லாம் நடக்காது நான் உனக்கு மணமாலையே மாற்றுவேன். வீணாக அலட்டிக் கொள்ளாதே!''

''அத்தான், அப்படியெல்லாம் நடக்கக்கூடாது என்பதுதான் எனது பிரார்த்தனையும். ஆனால் தப்பித்தவறி ஏதும் நடந்தால் நீங்கள் இப்படிச் செய்ய வேண்டும். செய்வேன் என்று சத்தியம் செய்து தரவேண்டும்'' என்று கையை நீட்டினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசாத்தியைப் பார்த்து கண்கலங்கிக் கொண்டிருந்த மகேந்திரன் கூறினான், ''ராசாத்தி, நீ கேட்கிறாய் என்பதற்காக சத்தியம் செய்து தருகிறேன். ஆனால், இறைவன் நமக்கு அப்படி ஒரு நிலைமையை தரக் கூடாது'' என்று கூறியவன், ''உனது விருப்பத்தை நிறைவேற்றுவேன்! இது சத்தியம்'' என்று கையடித்துக் கொடுத்தான்.

❋

நாயர் கூறியது அவனுக்கு இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது.

''பிரண்ட், நான் ஐந்து வருடமா இங்கு வேலை செய்கின்றேன். என்னிடம் இப்போது ஓரளவுக்கு பணம் உண்டு. இப்போது மற்றவர்கள் மதிக்க என்னால் வாழ முடியும். வீடு கட்டி விட்டேன். கார் வாங்கிவிட்டேன். ஆனால் எனது வாழ்க்கையை எண்ணிப் பார்த்தால் இந்தப் பணமும் இவ் வாழ்க்கையும் வெறுத்தவிடும்...'மணி ஸ் நொட் எவிறிதிங்'

சிறிது நேர இடைவெளியில் தொடர்ந்த நாயர், ''எனது மணவாழ்வு இங்கு வேலைக்குச் சேர்ந்த பின்னே ஆரம்பித்தது. யு..சீ... இந்த ஐந்து வருடத்தில் மனைவியுடன் ஐந்து மாதங்கள் மட்டுமே வாழ்ந்திருக்கிறேன். இதை எண்ணும் போது இந்த வாழ்க்கை வெறுத்துவிடும். வாழ்க்கையை எப்போது அனுபவிக்கப் போகின்றோம். பணம் நிறைய இருந்து இல்வாழ்வை சிறப்பித்து விடுமா? ஒவ்வொரு வருடமும் இந்த வருடத்துடன் வேலையை விட்டு போய்விட வேண்டும் என்றுதான் எண்ணுவேன். அங்கு சென்றதும் வேலையில்லாப் பிரச்சினையை எண்ணியதும் திரும்பி வந்து விடுவேன்'' என்று வெறுப்பும் சலிப்பும் கலந்திருந்தது குரலில் தெரிந்தது.

தொடர்ந்து நாயர், இத்தனை வருட வாழ்விலும். ஒரே ஒரு குழந்தை உண்டு. இப்போதெல்லாம் நான் காசை பெரிதாக மதிப்பதில்லை வாழ்க்கையையே மதிக்கின்றேன். பிறருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவுவதையே பெரிதாய் நினைக்கின்றேன்" என்று பெரிய ஞானிகள் கதைப்பது போல் கதைத்திருந்தார்.

வந்து சில மாதங்களில் பணம் பெரிதில்லை... அதுவே எல்லாமாய் மாறிவிடுவதுமில்லை என்பதை மகேந்திரனும் உணர்ந்து விட்டான்.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09

'கயல்விழிக்கு ஒரு அப்போதிக்கரியை மணம் பேசி ஏற்பாடு செய்து விட்டதாகவும் சீதனப் பணத்தில்தான் பிரச்சினை இருந்து கொண்டு இருக்கிறது. அதனையும் தீர்த்து விடலாம். நீ வந்ததும் திருமணத்திற்கு ஒழுங்கு செய்யலாம் என்றிருக்கிறேன். நீ லீவில் வரும் தினத்தை முன்கூட்டியே எனக்கு அறிவிக்கவும். அது திருமணத்தை நிர்ணயிக்க உதவியாக இருக்கும்' என்று அப்பாவிடம் இருந்து கடிதம் வந்திருந்தது.

அதே கடிதத்தினுள் தங்கை கயல்விழியும் அழுதழுது கடிதம் எழுதியிருந்தாள். "அப்பா இப்படி கல்யாணம் பேசி முடிவெடுத்து இருக்கிறார். இதையறிந்ததில் இருந்து அவர் பைத்தியம் பிடித்தது போலாகிவிட்டார். பாடசாலைக்கும் ரியூட்டரிகளுக்கும் இப்போ ஒழுங்காகச் செல்வதில்லையாம். இப்போது என்னையும் சந்திக்க வருவதில்லை. ஒரே போத்தலும் கையுமாக குடிவெறியில்தான் இருக்கிறாராம். இதுதான் முடிவென்றால் எனக்கு என்ன நேருமோ தெரியாது. நீங்கள் வந்து இதற்கொரு நல்ல முடிவெடுக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டால் இரு உயிர்கள் வீணாக பலியாகும் அண்ணா. அப்பாவுக்கு கண்டிப்பான கடிதம் போடுங்கள். இல்லையேல் நான் உங்களுக்கு தங்கையாக இருக்கமாட்டேன். எனது அண்ணா நான் விரும்பும் இந்த ஒரே ஒரு விருப்பத்தை நிறைவேற்றி வைப்பார் என்று எண்ணி எதிர்பார்த்து இருக்கிறேன். நடு ஆற்றில் கைவிட்டு விடாதீர்கள்'' என்று என்னவெல்லாமோ எழுதியிருந்தாள்.

நான் ஆரம்பத்தில் இருந்து சொல்லிவந்த போதும் கேட்காமல் அப்பா இவ்வளவு தீவிரமாக மாப்பிள்ளை தேடி ஒழுங்கு பண்ணும் போது, இனி தான் என்ன சொன்னாலும் கேட்கக்கூடிய நிலையில்லை. விடயம் தலைக்கு மேல் போய்விட்டது என்பதை அவனால் உணரமுடிந்தது. அவன் வரும் திகதியை அறிந்து அதற்கிடையில் கல்யாணத்திற்கும் நாளைக் குறித்து ஏற்பாடுகளைச் செய்து விட்டால்.. அதன் பின் போயும் எதுவும் செய்யமுடியாது. அப்பாவின் தந்திரத்தை மகனால் அறிய முடிந்தது. என்றாலும் தங்கையின் பரிதாபத்துக்காக கடைசி முறையாக அப்பாவை கெஞ்சிக் கேட்டு ஒரு கடிதம் எழுதிப் பார்ப்போம் என்று எண்ணி னான். சிறந்த ஒரு அறிவாளியான ஆசிரியரை அறிவுலகம் இழந்துவிடப் போகின்றது. அது நமது சமூதாயத்துக்கு ஒரு இழப்பு என்பதையும் எடுத்துக்காட்ட வேண்டும் என்று எண்ணினான்.

அதுபோல் தங்கைக்கும் ஆறுதல் கூறி கடிதம் எழுதினான். தனது ஆறுதல் அவளை ஆற்றாது என்று தெரிந்தாலும் கடமைக்காக அவள் கடிதத்திற்குப் பதிலுக்காக பல ஆறுதல் மொழிகளை 'எழுதி நான் வரும்வரை மனதைத் திடப்படுத்திக் கொண்டிரு..' என்று எழுதினான்.

வெளி நாட்டில் இருந்து உழைத்து அனுப்புவது காணாது என்று இப்படியான பிரச்சினைகளையும் ஒருவன் தனது கவலைகளுடன் தீர்த்து வைப்பது என்றால் எப்படி? ஊரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றார் பெற்றாரை பிரிந்திருப்பதே பெருங்கவலையாக இருக்கும் போது, இப்படியான பிரச்சினைகளும் வந்தால் ஒருவன் பைத்தியமாகத்தான் போவான்.

ஆனால், மகேந்திரன் திடசங்கற்பத்துடன் எல்லாப் பிரச்சினைகளையும் கையாண்டு வந்தது மட்டுமல்ல அங்குள்ளவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளையும் முன்னின்று தீர்க்குமளவிற்கு முன்னேறியிருந்தான். இதனால் பலர் அவனை தினம் நாடிவருவது வழக்கமாகி விட்டது. விடுமுறைக்கு ஒரு மாதத்திற்கு முன்னே விண்ணப்பிக்க வேண்டும். ஆகையால் மகேந்திரனும் விண்ணப்பித்தான். ஒப்பந்தத்தை புதுப்பிக்க விரும்பாதவர்கள். ஒரேயடியாகச் செல்லலாம். புதுப்பிக்க விரும்புபவர்களுக்கு மட்டுமே திரும்பி வருதற்கான விசாவும் ரிக்கட்டும் வழங்கப்படும். ஆகஸ்ட் ஐந்தில் செல்லவும் ஒரு மாதம் சம்பளத்துடனான லீவையும் மேலதிகமாக சம்பளமற்ற லீவு ஒரு மாதமும் கேட்டு விண்ணப்பித்ததுடன் ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கான சம்மதக் கடிதத்தையும் எழுதிக் கொடுத்திருந்தான்.

கடைசி இரண்டு மாத சம்பளமும் வீட்டுக்கு அனுப்பவில்லை. அதனை வீட்டுக்கும் இராசாத்திக்கும் பொருள் வாங்கவென்று சேகரித்து வைத்துக் கொண்டான். ஒன்றிரண்டு என்று சில பொருட்களும் வாங்கத் தொடங்கிவிட்டான். இராசாத்திக்கென சின்ன ரேப்பும் றேடியேவும் உள்ள ''டு இன் வன் செட்'' ஒன்று வாங்கி விட்டான். வீட்டுக்குப் பெரியதொன்று வாங்க வேண்டும். இதனை மறைத்துக் கொண்டு செல்லாம் என்று வைத்துக் கொண்டான்.

விடுதலை அனுமதிக்கப்பட்டிருந்த சமயம் தானா இப்பேரிடி இலங்கையில் விழ வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக புகைந்து கொண்டிருந்த இனப்பிரச்சினை தலை விரித்தாடியது. நடந்த அனர்த்தங்கள் சொல்லில் அடங்காது. பிளைட்டுகளும் இரத்துச் செய்யப்பட்டன. எங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைகளும் மரண ஓலங்களும் என்றுதான் செய்திகள் வந்து கொண்டிருந்தன. ஒருவருக்கொருவர் எட்டி விலகி நடந்து கொண்டாலும் இலங்கையர் என்ற வகையில் எல்லா மக்களுமே கவலைப்பட்டனர்.

வழமையில் இனக்கலவரம் எழுந்தால், இலங்கையில் ஓரிரு தினங்களில் அடங்கிவிடுதும் பின்னர் மீண்டும் ஓரிரு மாதத்தில் சகஜமாகி விடுவதும் வழக்கம். ஆனால் இம்முறை ஒரு கிழமைக்கு மேல் நீடித்த இனக்கலவரம் மக்களை பெரும் பாதிப்புக்குள்ளாக்கியது. பிளைட்டுக்கள் கான்சல் பண்ணப் பட்டதால் கடிதங்கள் வரவில்லை. கடைசி நேரத்தில் டிக்கட் புக் பண்ணியவர்கள் தங்கள் விசாக்கால எல்லை முடிந்து வேலைக்கு வரமடியாமல் வேலையை இழந்தனர். இதில் பாதிப்புற்றவர்கள் பெரும்பாலும் தமிழர்களே மீண்டும் விமானச் சேவை பல நாட்களுக்குப் பின்னர். ஆரம்பிக்கப் பட்டாலும் வடக்கிலும் கிழக்கிலும் இருந்தவர்கள் பாதுகாப் பாக விமான நிலையம் வரமுடியவில்லை. விசாவை நீடித்து தரும்படி கம்பனிக்கு அனுப்பிய ரெலக்ஸ் பயன்தரவில்லை. இதனால் பலர் வேலையை இழந்தனர்.

அடுத்து வந்த சிங்களவர்களே பல செய்திகளைக் கொண்டு வந்தனர். பிரச்சினை ஆரம்பமாக முன்னர் போட்ட கடிதங்கள் இரண்டு கிழமையின் பின்னரே கிடைத்தன. இனக்கலவரம் ஆரம்பித்த பின்னர் அதன் நிலையை அறியக் கூடியவாறு வீட்டில் இருந்து எவருக்கும் கடிதம் வரவில்லை. பி.பி.சி செய்தி ஒன்றே தஞ்ச மென்று நம்பியிருந்தனர் இலங்கைத் தமிழர்கள். இந்த நிலையில் வீட்டில் எந்த விதமான கடிதமும் வராத நிலையில் கேள்விப்படும் அபாயகரமான நிலையில் லீவில் செல்வது சரிவராது என்று உணர்ந்த மகேந்திரன் கம்பனிக்கு ஒரு கடிதம் எழுதினான்.

''நாட்டு நிலைமை சரியில்லாததினால் என்னால் விடுமுறை யில் செல்ல முடியவில்லை. ஆகவே, மறு அறிவித்தல் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது விடுமுறையை ஒத்திப்போடவும்'' என்று.

நாட்டு நிலமை கம்பனி அறிந்ததே. இப்படிப்பல தமிழர்கள் மட்டும் எழுதிக் கொடுத்தனர். மற்றவர்கள் வழமைபோல் வீடு சென்றனர். மகேந்திரனும் மற்ற தமிழர்களும் கதி கலங்கிப் போய் இருந்தனர். வீட்டுக்குச் செல்லவில்லை. அதுதான் பராவாயில்லை என்றால். வீட்டில் இருந்து கடிதம் வந்து நிலமை அறிந்தாலாவது ஒரு ஆறுதல் கிடைக்குமே. அதுவும் இல்லையே! இதுவே, அனைவருக்கும் பெரும் கவலையாக இருந்தது. எல்லோரும் கூடிக்கூடிக் கதைப்பது ஒன்றே அவர்களால் செய்ய முடிந்தது.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

இலங்கையில் நடந்த கலவரமும் படுகொலைகளும் உலகமெங்கும் பரவியது. எந்த றேடியோவைத் திருப்பினாலும் இலங்கை பற்றிய செய்தியாகவே இருந்தது. வீட்டில் இருந்து இதுபற்றி கடிதங்கள் ஏதும் வராதது எல்லோருக்கும் பெரும் கவலையை அளித்தது. யாருக்கு யார் ஆறுதல் கூறுவது? மாதம் ஒன்று மறைந்த பின்னர் கடிதங்கள் வந்தன. பலருக்கு கட்டுக் கட்டாக கடிதங்கள் வந்திருந்தன. முன்னர் பின்னர் போட்ட கடிதங்கள் எல்லாமாக ஒன்றாகவே வந்திருந்தன.

வீட்டில் இருந்து மூன்று கடிதங்களும் இராசாத்தியிடம் இருந்து இரண்டு கடிதங்களும் ஒன்றாகக் கிடைத்ததில் மகிழ்ந்தவனாக அறைக்கு வந்தான் மகேந்திரன்.

முதலில் வீட்டுக் கடிதத்தைப் படித்து விட்டு, பின்னர் ஆறுதலாக அமைதியாக இராசாத்தியின் கடிதத்தைப் படிக்கலாம் என்று வீட்டுக் கடிதங்களையே முதலில் உடைத்துப் படித்தான். ஒன்று கலவரத்துக்கு முன்னர் போட்ட கடிதம். அதை வைத்து விட்டு அடுத்த கடிதத்தைப் படித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில், ''இலங்கையில் நடைபெற்றுள்ள கலவர நிலமை இன்னும் சீரடையவில்லை. வீட்டுக்கு வருவதை ஒத்திப் போடு... நிலமை சரிவந்ததும் அறிவிக்கின்றேன்'' என்று அப்பா நாட்டு நிலவரம் பற்றி எழுதியிருந்தார். கயல்விழின் கடிதத்தைப் படித்தான்.

''அண்ணா, இராசாத்தியின் அப்பா கலவரத்தில் இறந்து போனார். அவருடைய சவ அடக்கத்துக்கு கூட அவவால் வர முடியவில்லை.''

இதற்கு மேல் அவனால் அக்கடிதத்தைப் படிக்க முடியவில்லை. அவற்றை அப்படியே போட்டு விட்டு இராசாத்தியின் கடிதங்களைப் பிரித்தான்.

முதல் கடிதத்தில், ''நடந்த கலவரத்தில் தங்கள் வீட்டுடமைகள் அனைத்தும் சேதப்படுத்தப்பட்டு அகதி முகாமில் இருக்கின்றோம். நான் மீண்டும் விலாசம் அறிவிக்கும் வரை கடிதம் போட வேண்டாம்'' என்றிருந்தது. அதை மேலோட்டமாகப் பார்த்து விட்டு அடுத்த கடிதத்தை பிரித்தான். அதனைப் படிக்கத் தொடங்க முன்னரே அவனது கண்கள் கலங்கின.

*அன்புள்ள அத்தான்,*

*இக்கடிதத்தை எப்படி ஆரம்பிப்பது என்றே தெரியவில்லை இந்த துர்ப்பாக்கியவதியின் நிலை கண்டு நீங்கள் கலங்க வேண்டாம். அப்பாவை இழந்து அம்மாவும் நானும் இப்போ தனிமரமாக நிற்கின்றோம். அப்பா கலவரத்துக்கு முன்னர் கொழும்புக்கு ஏதோ கொந்துராத்துப் பணம் பேமண்ட்ஸ் எடுக்கச் சென்றாராம். எடுத்துக்கொண்டு திரும்பிவரும் வழியில் கலவரம் ஆரம்பித்து இருக்கிறது. குருநாகலில் வைத்து கலவரக்காரர்கள் மக்களை அடித்தும் வெட்டியும் குத்தியும் கொலை செய்தார்களாம். சிலர் உயிருடன் படுகாயங்களுடன் தப்பி வந்திருக்கிறார்கள். அப்பா பிணமாகத்தான் மட்டக்களப்பு வந்து சேர்ந்துள்ளார். நல்லவேளை அவரது அறிமுக அட்டை இருந்தபடியால் அவரது பிணத்தைப் பெறமுடிந்ததாம். ஆனால், அந்த பிணத்தின் முகத்தில் கூட இந்தப்பாவியால் விழிக்க முடியவில்லை. நான் அகதி முகாமில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறேன். பொலிஸ் செய்திகளோ தந்திகளோ அந்த நாட்களில் அனுப்ப வசதி இல்லாமல் போய்விட்டது. அனுப்பினாலும் வரக்கூடிய போக்குவரத்து வசதிகளும் இல்லை. இதனால் பெற்ற தகப்பனின் பிணத்தில் கூட விழிக்க முடியாத கடைசி முறை ஓருதரம் பார்க்க முடியாத பாவியாகிவிட்டேன். பத்து நாட்களின் பின்னர் அகதி முகாமில் இருந்த எங்களை தங்கள் தங்கள் ஊருக்கு அழைத்து வந்தார்கள். உயிரைக் கையில பிடித்துக் கொண்டு வந்தோம். வீட்டிற்கு வந்ததும் வீட்டில் கேட்ட மரண ஓலமும் அம்மாவின் விதவைக் கோலமும் என்னை மூர்ச்சடைய வைத்து விட்டன.

அப்பாவைக் காணாத குறை சாகும் வரை என்னை விட்டு நீங்காது. அத்துயரம் என் நெஞ்சில் என்றும் நிலைபெற்று நிற்கின்றது. அப்பா போனதுதான் போனார் அவர் பெற்று வந்த பணமும் கொள்ளையடிக்கப்பட்டது. சாவீடு முடிந்து எட்டு வீடு முடிந்த பின்னர் தான் வீட்டுக்கு கடன்காரர்கள் ஒவ்வொருவராக வந்தார்களாம். என்ன செய்லாம் என்பதை நான் வந்ததும் யோசிக்கலாம் என்று அம்மா கூறியிருக்கின்றாள். நான் வந்து அடுத்தநாள் பெருங்கூட்டமே கூடிவிட்டது. எல்லாம் அப்பா பட்ட கடன்தான். கடைசியாக கொந்தராத்துக்கு எடுத்த வீட்டை அடவு வைத்துப் பணம் எடுத்து பிணைப்பணம் கட்டினாராம் என்று கூட அம்மா சொன்னா. அவர் மட்டும் வரவில்லை காரணம் வீடு ஈடாக இருக்கின்ற காரணமாக இருக்கலாம். நான் ஒரு பெண் என்பதால் என்ன செய்ய முடியும். அப்பா செத்த 31ஆம் நாள் இன்னும் முடியவில்லை இந்த நிலையில் அவரது கொந்தராத்தில் உள்ள மிகுதிப் பணத்தையும் பிணைப் பணத்தையும் எடுத்துத்தர எனக்கு யார் உதவப் போகிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் இல்லாத குறையை உணர்கின்றேன். 31 முடிந்த பின்னர் இவற்றை என்னால் முடிந்தவரை பார்த்துச் செய்கின்றேன். அப்பா பட்ட கடன் என்பதால் எப்படியும் நான் உழைத்துக் கொஞ்சம் கொஞ்சமாக என்றாலும் அடைப்பேன் என்று கூறியிருக்கின்றேன். இதைவிட என்னால் என்ன செய்ய முடியும்?

கயல்விழி இரண்டுநாள் வந்து எனக்கு ஆறுதல் கூறிச் சென்றாள். யாருடைய ஆறுதலும் என்னை ஆற்றப் போவதில்லை. நீங்கள் ஒருவர் பக்கத்தில் இருந்தால் ஆறுதலாக இருக்குமே என்னவோ? அந்தப் பாக்கியம் இந்தப்பாவிக்கு கிடைக்குமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இப்படிக்கு,*
*உங்கள் இராசாத்தி.*

கடிதத்தைப் படித்த மகேந்திரன் சிலையாக இருந்தான். அவனால் எதையும் எண்ணிப் பார்க்க முடியவில்லை. வெறுமனே சூன்யத்தை வெறுத்து நோக்கிக் கொண்டிருந்தான். அவனால் எதையும் எண்ணிப் பார்க்க முடியாமல் மண்டை விறைத்துப்போய் இருந்தது. கண்களில் இருந்து கண்ணீர் மட்டும் வழிந்து கொண்டிருந்தது.

அப்போது அறைக்கு வந்த நண்பனும் ஒரு கட்டுக் கடிதத்துடன் வந்தான். இவனது நிலமையைக் கண்டதும் பக்கத்தில் சென்று அமர்ந்து அவனைத் தொட்டான். "என்ன மகேந்திரன் ஏதும் விபரீதம் நடந்து விட்டதா?" என்று கேட்டான்.

விஷயத்தைச் சொல்லிவிட்டு, வாய்விட்டு அழுதான் மகேந்திரன். "அவளுக்குத் துணையென ஒருவரும் இல்லை... அவள் இப்போது இருக்கும் நிலை எனக்கு கவலையாக இருக்கிறது... இருந்த ஒரு ஆண் துணை அவர்கள் அப்பாதான்... அதனையும் இழந்து தனிமரமாக நிற்கும் இந்த வேளையில் என்னாலும் சென்று அவளருகிலிருந்து ஆறுதல் சொல்ல முடியவில்லையே!" என்று கூறி அழுதான்.

"மகேந்திரன் நீ கூறுவதைக் கேட்கத்தான் எனக்கும் நடுக்கமாக இருக்கின்றது. வீட்டில் என்ன நடந்ததோ?" என்று அவசர அவசரமாக வீட்டுக் கடிதங்களை பிரித்தான்.

திகதிகளைப் பார்த்துப் பார்த்து பிரச்சினைக்கு முந்திய கடிதங்களைப் போட்டு விட்டு அதன் பிறகு எழுதிய கடிதம் தெரிய முதலில் வாசித்தான். தங்களுக்கு எந்த இழப்பும் இல்லை. கொழும்பில் இருந்து உறவினர்கள் பலர் வீட்டில் வந்து நிற்பதாக மட்டும் கடிதம் வந்திருந்தது. இதைப் படித்த பின்னர் மற்ற கடிதங்களையெல்லாம் அவன் வாசிக்க தொடங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேந்திரன், தான் எந்த வகையில் இராசாத்திக்கு உதவலாம்? என்றுதான் சிந்தித்துக் கொண்டிருந்தான். தன்னிடம் இருக்கும் பணத்தை எடுத்துப் பார்த்தான். இருநூறு டொலர் அனுப்ப முடியும். அதுதான் சரி இந்த உதவி ஒன்றுதான் இப்போத என்னால் செய்ய முடியும். இதை அவள் ஏற்காமல் போகலாம். ஏற்கக் கூடியவாறு கடிதம் எழுத வேண்டும். இது கடன்களில் இருந்து அவளுக்கு ஒரு ஆறுதலையாவது கொடுக்கும். வீட்டுக்கு தெரியாமல் இருக்க வேண்டும். தெரிந் தால் அப்பா, அம்மா அவளைக் கொத்தி எடுத்துவிடுவார்கள். 'இருந்த காசுக்கு பொருள் வாங்கி வைத்து விட்டேன். வருகிறேன் என்ற எண்ணத்தில்...' என்று வீட்டுக்கு எழுதி விட்டால் சரி. போற நேரம் வீட்டுக்கு போய் சமாளித்துக் கொள்ளலாம் அதுவரை இராசாத்தியின் வீட்டில் இருந்து தெரியாவிட்டால் சரிதான். அதற்கு மேலும் அவனால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. யார் நாளைக்கு நகருக்குச் செல்பவர்கள் என்று விசாரிக்கச் சென்றான்.

''கேம்ப் வொஸ்ஸே'' செல்வதாகக் கூறியதும் அவனுக்கு திருப்தி ஏற்பட்டது. உடனே வந்து வங்கி விண்ணப்பத்தை நிறைவு செய்து பணத்துடன் அவரிடம் ஒப்படைத்துவிட்டே அமர்ந்தான்.

கடிதத்தை கையில் எடுத்தாள் இராசாத்தி, அதைப் பார்த்ததும் யு.எஸ். டொலர் இருநூறு என்றிருப்பதைக் கண்டதும் கைகள் நடுங்கின. சற்று நேரம் அதையே பார்த்துக் கொண்டிருந்தவள் பின்னர் கடிதத்தைப் படிக்கத் தொடங் கினாள். படிக்கப் படிக்கப் போராட்டமாக இருந்தது. கடிதம் முழுவதையும் படித்து முடித்த பின்னர் நல்லவேளை நான் வெளியில் வைத்து பிரிக்காததும் படிக்காததும். அம்மா யாருடனோ கதைப்பது கேட்டது. இதை ஏற்றுக் கொள்வதா இல்லையா? என்ற சங்கடத்திடையே அம்மாவிடம் சொல்லக் கூடாது என்று எண்ணிக் கொண்டிருந்தாள். இப்போது இருக்கும் பிரச்சினையில் வரட்டுக் கௌரவத்தை பார்த்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தால் கௌரவமே காற்றில் பறந்துவிடும். ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவரின் வெறுப்புக்கும் ஆளாக வேண்டி ஏற்படும். ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. மற்றவர்கள் அறிவதில் இருந்து தப்பிக் கொண்டேன். இல்லா விட்டால் அது புதுப் பிரச்சினையை தோற்றிவிடும்.

அம்மாவிடமும் பொய்தான் செல்லவேண்டும் இல்லா விட்டால், அம்மா இதனைப் பெருமையாக சொல்லப்போக அதுவே விபரீதமாக போய்விடும். அம்மாவிடம் கதைத்திருந் தவர்கள் போனதும் அம்மாவே அறைக்கு வந்தாள்.

''என்ன பிள்ளை, இவ்வளவு நேரமாக என்ன செய்கிறாய்?'' என்றவாறு வந்தாள்.

''அத்தான் கடிதம் போட்டிருக்கின்றார். எனக்கு ஆறுதல் சொல்லித்தான் நிறைய எழுதியிருக்கின்றார்.''

''நடந்தது நடந்து விட்டது. இனி யார் ஆறுதல் சொல்லியும் திரும்ப வரப்போகிறதா? அவர் எப்ப வாறதாம்?''

''நிலமை சீரடைஞ்ச பிறகுதானாம் வாறத்தைப்பற்றி யோசிக்கிறதாம். வந்தால் திரும்பி போறதில்லையாம்...''

''ஏனாம் பிள்ளை, இஞ்ச இருந்து என்ன செய்யப் போறா ராம்? பிடிபட்டு அடிபட்டுச் சாக வேணாம்.. போகச் சொல்லி எழுதிப் போடு. உயிர் எண்டாலும் தப்பி, கண்காணாத தேசத்தில் கிடந்தாலும் பரவாயில்ல'' என்றாள் தாய்.

அதற்கு மேல் அவளால் பதில் சொல்ல முடியவில்லை. ''அது இருக்கட்டும் அம்மா. பின்னேரம் மகா வித்தியாலய அதிபரிடம் போய் வருவோமா? வேலைக்கு மாறுதல் கேட்டு ஒரு கடிதம் எழுத வேண்டும். அப்பா செத்தது இருந்து வீடு அடிபட்டது. சாமான்கள் தொலைந்தது எல்லாம் நல்ல காரணம் காட்டி, இந்தப் பாடசாலைக்கு மாறுதல் கேட்டு எழுத வேணும். அதற்கு அவரும் சம்மதிக்க வேணும். சம்மதித்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரையே எழுதித்தரச் சொல்லலாம். மற்றது மூன்று மாதச் சம்பளம் அட்வான்ஸ் கொடுக்கிறாங்களாம். அதையும் கேட்டு ஒரு கடிதம் எழுத வேணும். அதையும் இந்தக் கல்விக் கந் தோரிலே பெறக் கூடியவாறு எடுத்தால் அப்பாட கடனை ஓரளவுக்கு அடைக்கலாம்'' என்றாள்.

''நல்லது பிள்ள.. பின்னேரம் போவோமே.. பின்ன அவர் நல்ல மனிசன். நமக்குச் செஞ்சு தருவார்.''

''இல்லாட்டி நான் பள்ளிக்கு போகமாட்டேன் அம்மா. உங்கள விட்டுத்து போக என்னால ஏலாது.''

''இராசாத்தி அப்படி சொல்லாத பிள்ள... நீ வேலைக்குப் போனாத்தானே நமது குடும்பம் நடக்கும். அப்பா என்ன தேடிவைச்சிற்று போயிருக்கார். கடனைத்தான் தேடி வைச்சுருக்கார். அதையும் தீர்க்க நீதானே பிள்ள உழைக்க வேணும். நீ கவலைப்படாத மாறுதலை எடுத்திடலாம்.''

''மாறுதல் வந்தால், வேலை செய்யலாம் அம்மா... வேலை செய்யிறது தான் மனதுக்கு ஆறுதலாக இருக்கும். எண்டு அவரும் எழுதியிருக்கிறார்'' என்றாள்.

''அதுதானே நல்லது பிள்ள... அந்தப் பிள்ளையும் தெரிஞ்சத எழுதியிருக்கு.''

''அம்மா, வங்கியில காசு கொஞ்சம் மாசாமாசம் கட்டி வாறனே.. அதில் ஒரு கடன் கேட்டு பார்க்கலாம் என்று இருக்கிறன்'' என்றாள்.

''கடன் எடுத்தா எப்படிப்பிள்ள கட்டுறது?''

அவள் இந்தச் 'செக்'கை மறைக்க எத்தனை பொய்யைச் சொல்ல வேண்டி ஏற்பட்டது.

''கடனைச் சம்பளத்தில் இருந்து மாசாமாசம் வெட்டு வாங்க அம்மா. அதைப்பற்றி கவலை இல்லை. அதுக்கும் நாளைக்கு போகலாம் என்றிருக்கிறேன்'' என்றாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இத்தனை நாளும் பேசாமக்கிடந்த உனக்கு அந்தப் பொடியண்ட கடிதம் வந்து கண்ணத் திறந்து இருக்குது போல... அதுவும் நல்லது தான். நல்ல பிள்ளைகள் எப்போதும் நல்லதைச் சொல்லும் செய்யும்'' என்றாள் தாய்.

தாயிடம் பொய் சொல்லுவது பெரும் கஷ்டமாக இருந் தாலும். அதைவிட வேறு வழியில்லை என்று மறைத்து வைத்தாள்.

பின்னேரம் அதிபரின் வீட்டுக்கு போனபோது அவர் கண்ணாடியை மேலே உயர்த்தி, ''நானே வரவேண்டும் இப்படிச் செய்யச் சொல்ல வேண்டும் என்று இருந்த நான். எங்க நேரம்?'' என்றார்.

தொடர்ந்து, ''அதெல்லாம் நான் செய்து தாறன்... நீ கவலை இல்லாம போ புள்ள...'' என்றார்.

எல்லாவற்றையும் சொல்லக் கேட்ட பின்னர் அடுத்தநாள் பதில் கடிதத்தை எழுதிப் போட எடுத்துக் கொண்டு, வங்கிக்கு காசேலையைப் போடவும் எடுத்துச் சென்றாள். அவள் நினைத்ததற்கு மாறாக காசை உடனே எடுக்கக் கூடியதாக இருந் தது.

''இந்தாங்கம்மா காசு... கடையில இருக்கிற கடனை கொடுத் துப் போட்டு தேவையான சாமான்களை வாங்கிவாங்க?''

''ஏது பிள்ள காசு?''

''எத்தின நாளைக்கு இப்படிக் கஷ்டப்படுறது... வங்கியில கிடத்ததைத்தான் எடுத்திற்று வந்திருக்கிறன். கடன் எடுக்க பிந் தும் போல கிடக்கு அதுதான் இருந்ததை எடுத்திற்று வந்தநான்'' என்றாள்.

''அதுவும் நல்லது தான்.. நீ உடுப்பை மாத்திற்று தண்ணி வை. நான் சாமான் வாங்கிட்டு வாறன்'' என்று புறப்பட்டாள் தாய். தாய்க்கு பொய் சொல்வதற்காத் தெய்வத்திடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

வேலுப்பிள்ளை மாஸ்டர் தன் மகனுடைய கடிதம் வரவில்லை என்று கவலைப்பட்டார். பியோனிடம் தினமும் காத்திருந்து விசாரித்தார். அவன் 'வரவில்லை' என்று சும்மா சொல்லிவிட்டு போகக்கூடாதா? அவன், ''இராசலெட்சுமிக்குத் தான் இரண்டு மூன்று நாளைக்கு முன்ன ஒரு வெளிநாட்டுக் கடிதம் வந்தது'' என்றல்லவோ சொல்லிவிட்டுப் போனான்.

வேலுப்பிள்ளை மாஸ்டருக்கு மூளை மிகவும் வேகமாக வேலை செய்தது. வீட்டில் வந்து இதைப் பற்றிக் கதைத்தார்.

''அவன் தங்கவேலுவின்ட மகள் இராசலெட்சுமிக்கு வெளிநாட்டில் இருந்து கடிதம் வந்ததாம். போஸ்ட் பியோன் சொல்லிப் போட்டுப் போறான். அவளுக்கு கடிதம் போடக் கூடியவங்க யார் வெளியில இருக்கிறாங்க?''

''ஆர் இருக்கிறாங்க?.. உங்கட செல்வப் புத்திரன் தான் போட்டிருப்பான்'' என்று நீட்டி முழக்கினாள் தாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இருக்கலாம் அம்மா... நான் தான் அண்ணாவுக்கு எழுதினனான், அவளுடை அப்பா செத்துப் போய் விட்டார் என்று. அதுதான் அனுதாபம் சொல்லி எழுதியிருக்கும்.''

''பாத்தியளே! நம்மட பிள்ளையே நமக்கு நஞ்சாக இருக்கக் குள்ள...'' என்றாள் தாய்.

''அதுதானே பார்த்தேன். நீயேன் இதெல்லாம் எழுதின நீ? அவன் வெளியில போனதோடு அவளையெல்லாம் மறந்து போட்டான் என்று எனக்கு எழுதியிருந்தவன். நீ இப்ப இதையெல்லாம் மீண்டும் ஞாபகப்படுத்தி இருக்கிறாய்.''

''இதில் என்னப்பா பிழை? ஊரே திரண்டு பாவம் என்று உருகும் பொழுது, அண்ணா அறியக் கூடாதா? அவரும் சில நாள் பழகியவர் என்ற முறையில நாலு வார்த்தை எழுதி ஆறுதல் கூறியிருப்பார்.''

''அது சரிதான்.. இல்லை என்று நான் சொல்லலை. இவன் கடிதம்போட அதுக்கு இவள் பதில் போட பழையபடி உறவு வந்து விடும். இப்ப அம்மையும் மகளும் இருக்கிற நிலை தெரியும் தானே? கடன்காரர் கொத்திக் கொண்டு போவாங்க போல இருக்கு.. அந்த நிலையில நம்மட பிள்ளையும் அங்க அகப்பட்டா அவன் கதி?'' என்றார்.

கயல்விழி எதுவும் பேசாமல். இவர்களுடன் ஒத்துப் போய் இவர்கள் கதைப்பதை அறிந்து அண்ணாவுக்கு எழுத வேண்டும். என்று எண்ணிக் கொண்டாள்.

''நீங்க நேரே அவனுக்கு எழுதுங்க இனிமேல் இப்படிக் கடிதம் ஏதும் எழுதவேண்டாம் என்று'' என்றாள் தாய்.

''அதுதானே! அப்படி எழுதினா அண்ணா ஏன் எழுதப் போறார்? நான் வேணுமென்டா அவங்கட வீட்டபோய் அவ கடிதம் போடுகிறவா? என்று அறிஞ்சுட்டு வாறன்'' என்றாள் கயல்விழி.

'நீ போனதும் வேணாம்... வந்ததும் வேணாம்... அத அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்துக் கொள்வார். தெரிஞ்சுதா?" என்று கயல்விழியிடம் சொன்னாள் தாய்.

தலையை ஆட்டிய கயல்விழி அங்கு இருக்க பிடிக்காமல் எழுந்து போய்விட்டாள். அடுத்த நாள் போஸ்ட்மேனை சந் திக்கும் வரை மண்டையைப் போட்டு பிய்த்துக் கொண்டார் வேலுப்பிள்ளை மாஸ்டர். எப்படி என்ன செய்வது என்று பல திட்டங்களைப் போட்டுப் பார்த்தார். ஒன்றும் சரிவரவில்லை. அடுத்த நாள் தபால்காரன் வரும்வரை வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தார். அவர் காத்திருந்தது வீண் போகவில்லை தபால் காரன் தனது கேற்றடியிலேயே வந்து நின்று பெல் அடித்தான். வேலுப்பிள்ளை மாஸ்டர் மெல்ல நடந்து வருவதற்கிடையில் கயல்விழி ஓடி வந்து பெற்றுக் கொண்டாள். இரண்டு கடிதங் கள் இருந்தன. அதில் ஒன்று கயல்விழிக்கு அதை அவள் எடுத்துவிட்டு மற்றதை அப்பாவிடம் கொடுத்து விட்டு ஓடினாள்.

''அண்ணே! கொஞ்சம் நில்லன்.'' புறப்பட்ட தபாற்காரனை நிறுத்தினார். வேலுப்பிள்ளை மாஸ்டர்.

"என்ன மாஸ்டர், கடிதம் தான் ஒன்றுக்கு ரெண்டே வந் திருக்கே இன்னு மென்ன?"

''அதுக்கில்லை மணியம், இவள் இராசலெட்சுமிக்கு வந் ததோ என்று தான்?"

''இல்லை.. இல்லை.. எப்பவோ ஒரு நாள் வந்ததுதான்."

''இனிமேல் வந்தால் அதை இஞ்சாலே கொண்டுவந்து தாவன் அதுதான் உன்னிட்ட சொல்லவேணும் எண்டு.."

''ஏன் நான் பென்சன் எடுக்கப் போறது விருப்பமில்லையா? ஏன் பயப்படுகிறாய். நான் ஆரிட்ட சொல்லப்போறன்?"

''இருந்தாலும் ஒருத்தருக்கு வாறதை இன்னொருத்தருக் கிட்ட கொடுக்கிறது பாரிய குற்றம் மாஸ்டர்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதெல்லாம் எனக்குத் தெரியுண்டாப்பா.. இந்தா இதை வைத்துக்கொள்.'' ஒரு தாள்(நூறு ரூபாய்) கைமாறியது.

''நீங்க சொன்னா நான் செய்யாம விடுவேனா மாஸ்டர்? ஆனால் ஒண்டு உங்களிட்டத் தரமாட்டன். கொடுக்காமல் விட்டாச் சரிதானே! நீங்க இனிக் கவலையை விடுங்க.'' என்று பைசிக்கிளில் ஏறி குஷியாகப் பறந்தார் அவர்.

அதில் அடுத்த வீட்டுக்கு கொடுக்க இருந்த கடிதத்தையும் கொடுக்காமல் போய் திரும்பிவந்தார்.

''என்னப்பா... நான் கடிதமும் வாசிச்சுப் போட்டன் நீங்க இவ்வளவு நேரமும் போஸ்ட்மென்னோட பேசிக் கொண்டு இருந்தீங்க?'' என்றாள் கயல்விழி.

''ஒண்டுமில்ல... பிறகு ஏதும் கடிதம் வந்ததா? எண்டு விசாரிச்சனான். இல்லையாம்... நீ சொன்னாப் போல செத்ததிற்கு ஆறுதல் கூறித்தான் போட்டிருப்பான்.''

''என்ன போல... போட்டதாம்! எனக்கு அண்ணா எழுதியி ருக்கே ஒழிக்க மறைக்க வேண்டுமென்றால் எனக்கு எழுதியி ருக்க மாட்டாதே!! என்னையும் போனால் ஆறுதல் கூறட்டாம்'' என்று எழுதியிருக்கிறான்.

''அந்த சேட்டையெல்லாம் வேணாம். நீ உண்ட வேலையைப் பார். அங்கால போனா காலை உடைச்சுப் போடுவன்'' என்றாள் அம்மா.

முகத்தை வெட்டிக் கொண்டு எழுந்து நடந்தாள் கயல்விழி. ''அதுதானே! அவனே எழுதியிருக்கக்குள்ள நான் நூறு ரூபாயை வீணா இழந்து போட்டன்'' என்று கவலைப்பட்டவர் கடிதத்தைப் படித்தார். மனைவி கேட்டுக் கொண்டிருந்தாள். கயல்விழியும் அறைக்குள் இருந்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

கடிதத்தைப் படித்து முடிந்ததும் பதில் எழுத வேண்டும் என்ற எண்ணம் ஏற்படவில்லை மாஸ்டருக்கு, 'நூறு ரூபாயைக் கொடுத்ததுக்கு ஏதும் பயன் அடைய வேண்டாமா? அவனு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய கடிதம் மட்டும் கிடைக்காமல் போனாச்சரியா? இவள் போடும் கடிதமும் கிடைக்காமல் செய்ய வேண்டும்' என்று எண்ணிக் கொண்டார்.

அடுத்த நாள் போஸ்ட்மென்னை மறித்து விஷயத்ததைச் சொன்னார்.

''கட்டு என்னுடைய கையில இல்ல அது போஸ்ட் ஒப்பீஸில தான்.. அதுக்கு பெரும் செலவாகுமே'' என்றார் மணியம். வெளிநாட்டுக் காசுல கறக்கலாம் என்ற எண்ணம் தான்.

''தம்பி இனி கடிதம் போடமாட்டான். அப்ப அந்த நூறை அங்கால கொடுத்துச் செய்யன் மணியம்.''

''அப்ப சரி நான் கொடுக்கிறன். பிறகு கடிதம் வந்தால் கொடுக்க வேணாம் எண்டு சொல்லப்படாது. வேணுமெண்டா உங்களிட்ட காட்டிப் போட்டுக் கொடுப்பன். அவங்க இந்த நூறுக்கு அங்க இணங்குவாங்க எண்டு நான் நினைக்கல்ல...''

''வேணாம்.. வேணாம்... அதை நீ வைச்சுக்க. நான் இன்னும் ஒரு நூறு தாறன் பாத்துச்சரிக் கட்டன்.''

''சே.. நான் நினைக்கல்ல... ஒரு இருநூறு எண்டாலும் தந் தால் ஒருமாதிரி பாக்கலாம்.''

''நீ நினைச்சா செய்யலாம் மணி.''

''அப்ப நீங்க செய்யுங்க... நான் வாறன்'' என்று சைக்கிளை உருட்டினார் மணியம்.

''இந்தா பின்ன பிடி.. இருநூறு இதில் இருக்கு.. எப்படியும் நீதான் கவனிக்க வேணும்'' என்றார் மாஸ்டர்.

''காசு தந்திட்டீங்கல்ல கவலையை விடுங்க'' என்று கூறிவிட்டுச் சென்றார் மணியம்.

வெளிநாட்டுக் காசில் நல்லாய்க் கறக்கலாம் என்று எண்ணி யதால், ஒரு இளம் காதல் ஜோடியை பிரிக்கப் போகிறோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைச் சற்றும் உணரவில்லை மணியம். பாவம் ஒரு காதல் பயிர் இதனால் அழியப் போகிறது என்ற குற்ற உணர்வற்றவ ராக அதற்கு உடந்தையாக இருந்தார் அவர். இதையறியாது கடிதத்திற்கு மேல் கடிதம் மாறிமாறி பறந்து கொண்டிருந்தது.

இராசாத்தி காசு கிடைத்தது என்று அறிவித்ததுதான் அவனுக்கு கிடைத்த கடைசிக் கடிதம். அதுபோல் காசுடன் கிடைத்ததுதான் அவளுக்கு கிடைத்த கடைசிக் கடிதம். அவள்தான் அடிக்கடி கடிதம் போடமாட்டேன் என்று எழுதியி ருந்தாள். பரவாயில்லை என்று எண்ணிக் கடிதம் போட்டான் மகேந்திரன். காசு' அனுப்பிய பின்னர் பதில் கடிதம் போட்டேன். பிறகு நான் கடிதம் போட்டாலும் போடாவிட்டா லும் கடிதம் போடுவேன் என்றவரிடம் இருந்து இதுவரை ஒரு கடிதத்தையும் காணவில்லையே. ஒரு மாதம் மட்டும் தபாலில் தடையிருக்கலாம் என்று எதிர்பார்த்தாள். பின்னர் தானாக கடிதம் போட்டாள். அவற்றிற்கும் பதில் கிடைக்காதது அவளை மேலும் வாட்டியது.

மூன்று மாதம் கழிந்தது. கவலைகள் தீர்ந்தபாடில்லை அவளுக்கு ஊரோடு மாறுதல் கிடைத்தது. அதற்கும் அந்த மகா வித்தியாலய அதிபரின் முயற்சிதான் காரணம் எனச் சொல்ல வேண்டும். முற்பணம் கிடைத்தது. ஒருவாறு அப்பாவின் கடன்களை அடைத்துவிட்டாள். இன்னும் இரண்டு கடன்கள் இருந்தன. ஒன்று வீட்டுக்கடன் மற்றது மகேந்திரனின் கடன்.

இப்படித்தான் அவள் எண்ணினாள். 'என்னை ஆசை காட்டி மோசம் செய்துவிட்டு, அதற்கு கூலியாக இப்பணத்தை தந்து விட்டு அத்துடன் மறந்து போனாரே என்று எண்ணினாள். சீ... எனது அத்தான் அப்படிப்பட்டவர் இல்லை அத்தானுக்கு ஏதோ நடந்து விட்டது. இல்லாவிட்டால் எனக்கு கடிதம் போடாமல் இருக்க மாட்டார்' என்று சொல்லும் மனம்.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

காசு அனுப்பியதற்கு பதில் கடிதம் மட்டுமே மகேந்திரனுக்கு கடைசியாக இராசாத்தியிடம் இருந்து கிடைத்த கடிதம்.

எத்தனையோ கடிதங்களை இத்தனை மாதமாகப் போட்டும் பதில் ஏதும் வராததால் இந்தக் கடிதத்தையே பல மாதங்களாக திரும்பத் திரும்ப படித்துக் கொண்டிருக்கிறான். அவளுக்கு என்ன நடந்தது ஒன்றில்லா விட்டால் மற்றதாவது கிடைத்திருக்க வேண்டும். ஒரு கடிதத்திற்கும் பதில்வராத காரணம் என்ன? என்பது அவனுக்கு விளங்கவில்லை. கயல்விழிக்கு எழுதிக் கேட்டும் பதில் வரவில்லை. வீட்டில் இருந்து தாமதமாக பதில் வந்து கொண்டிருந்தது. ஆனால் இராசாத்தியைப் பற்றி ஒருவரியும் எழுதமாட்டேன் என்கிறாள். வீட்டில் கண்டிப்புப் போல் தெரிகிறது.

யாரிடமும் ஒழுங்காகக் கதைப்பதில்லை நேரத்திற்கு எழும்புவதில்லை. குளிப்பதில்லை. யாரும் எழுப்பிவிட்டதும் புறப்பட்டு வேலைக்குச் செல்வான். வேலை செய்கிறானோ இல்லையே வேலைக்கு மட்டும் ஒழுங்காகச் சென்று வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயர் சொல்வதையும் இப்போது அவ்வளவாகக் கேட்பதில்லை. தான் தனியே நினைத்த நேரம் போய்ச் சாப்பிட்டு விட்டு வந்து அவளுடைய கடிதமும் டேப்பும் கையுமாக எங்காவது ஒதுக்குப் புறமாகப் போய் அமர்ந்து விடுவான்.

'நித்தம் சாவாருக்கு நித்தம் அழுவாரும் உண்டா?' இருந்தும் நாயர் தனது முயற்சியைக் கைவிடவில்லை. இலங்கை நண்பர்கள் எல்லாம் வெறுத்து ஒதுக்கிய பின்னும் அவர் அவனுக்கு ஆறுதல் வார்த்தைகளையும் புத்திமதிகளையும் கூறிக்கொண்டுதான் இருந்தார். அவன் கேட்டுக் கொண்டு மட்டும் இருப்பான். இந்தளவுக்காவது மரியாதை தருகிறானே! என்று திருப்தி.

வீட்டுக்கு கிழமை ஒரு கடிதம் என்றிருந்தது. இரண்டு கிழமைக்கு ஒன்றாகி இப்போது மாதம் ஒன்று என்று, அதுவும் சம்பளத்துடன் மட்டும் எழுதி வந்தான். வீட்டுக்கு வரமுடியாத தினால் மனம் நொந்து போயிருக்கிறான் என்று மட்டும் தான் அவர்களால் எண்ண முடிந்தது.

இராசாத்தியை எண்ணும் போது அவனால் நம்பமுடிய வில்லை. இவ்வளவும் எழுதியவள், எப்படி எல்லாமோ பேசி யவள், எந்த நிலையிலும் மாறமாட்டேன் என்றும் எனக்காகவே தவமிருப்பேன் என்றும் உண்மையான மனைவி யாகிவிட்டேன் என்றும் கடைசியாக எழுதினாள் அப்படிப் பட்டவளா? இன்று இப்படி மாறினாள். எனக்கு இத்தனை நாளாக ஒரு கடிதமாவது போட முடியவில்லையே என்று எண்ணுவான்; ஏங்குவான். அவனது நெஞ்சு வெடித்து விடும் போல் இருக்கும்.

இதுவரை தான் விரும்பாத நான் 'ராசியில்லா ராசா' என்ற பாட்டை விரும்பிக் கேட்பான். தானாக வாய்க்குள் முணு முணுத்துப் படித்துக் கொள்வான். தோல்விதனை எழுதட்டும் வரலாறு என்று இப்போது ஏற்றுக் கொண்டான். இதுவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியின் உச்சியில் நின்றவன் இப்போது கீழே விழுந்து விட்டான். இலங்கையில் ஏற்பட்ட இனப் பிரச்சனை ஒன்று மறியாத அவனது வாழ்வையும் பாதித்து விட்டது.

இராசாத்தியை எண்ணும் போதெல்லாம் அவன் இதயம் அழுதது. சில வேளை எண்ணங்கள் அதற்குமேல் அசைய மறுத்து மரத்துப் போய்விடும். இரவு படுக்கையில் விழுந்து, லைட்டை அணைக்கும் வரை காத்திருப்பான். அதன் பின் மடை திறந்த வெள்ளம் போல் அவனது கண்கள் நீரைச் சொரியும்.

சிலர் அறியக் கூடியவாறு பல செய்கைகளையும் ஒருவரும் அறியாமல் சில செய்கைகளையும் மறைத்து வந்தான். ஆனால் அறையிலுள்ள நண்பனும் அவனுடன் நெருங்கிப் பழகும் நாயரும் அவனது செய்கைகளை அறிந்து புரிந்து அவனுக்கு ஆறுதல் கூறிவந்தனர். ஆனால் எத்தனை நாட்களுக்கு அவர்களால் முடியும்?

நாட்கள் மாதங்களாகி அவையும் மறைந்து கொண்டிருந்தன. இவற்றை எல்லாம் எண்ணும் போது எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு வீட்டுக்குச் செல்வோம்; நடப்பது நடக்கட்டும் என்று ஒரு அசட்டுத் துணிவு பிறக்கும். ஆனால் அடுத்த நாள் வரும் செய்தி அல்லது கடிதம் அதனைச் சிதறடித்து விடும்.

எல்லாக் கடிதங்களிலும் அரசபடை அவனைப் பிடித்து விட்டது. இவனைக் கொன்றுவிட்டது. அரச ஊடகங்களிலோ இங்கு பயங்கரவாதிகள் கண்ணி வெடி வைத்தார்கள். அதில் இத்தனை பேர் இறந்தார்கள் பொதுமக்களும் சுடப்பட்டார்கள் என்ற செய்திகளே வந்து கொண்டிருந்தன. காணததற்கு பி.பி.சி யும் இலங்கை செய்திகளை ஒலிபரப்பிக் கொண்டிருந்தது.

அதை விட வீட்டில் மகேந்திரனுக்கு மட்டுமின்றி மற்றவர் களுக்கும் வரும் கடிதத்தினுள் பேப்பர் கட்டிங்குகளும் வந்தன. அவை கூறும் செய்திகளோ இன்னும் பயங்கரமானவையாக இருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு நிலமை நல்லதில்லை என்று தெரிய வரும். இதன் பின்னரும் எவன் வீட்டுக்குப் போகத் துணிவான். எல்லோரும் பயந்தவர்கள்; தம் பயணத்தை ஒத்திப்போட்டுக் கெண்டே வந்தனர். இதில் மகேந்திரனும் ஒருவன்.

பெற்றோரிடம் இருந்து வரும் கடிதங்கள் எல்லாம், 'நாட்டின் நிலமை இன்னும் சீரடையவில்லை. நாங்களும் தினம் தினம் பயந்து செத்துத்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பொடியன்களைத் தான் கண்ணில் காட்டமுடியவில்லை. இப்போதைக்கு இங்கு வருவதை எண்ணிப் பார்க்காதே' என்று தான் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன.

இப்படி எத்தனை கடிதம் வந்தாலும் அவனது நெஞ்சு நிம்மதியடையவில்லை. இவன் யாரிடமிருந்து கடிதம் எதிர்பார்க்கிறானோ அவளிடமிருந்து மட்டும் ஒரு கடிதம் ஒரே ஒரு கடிதம் வந்துவிட்டால் போதும் என்று தான் ஏங்கித் தவித்தது அவனது மனம். இதனால் அவனது நெஞ்சு தவியாய் தவித்தது அதனை எழுத வார்த்தைகளுக்கு சக்தியில்லை.

வீட்டுக்குச் செல்ல முடியாமல் தவித்து இருப்பவர்கள் பல பேர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் இப்படி ஒரு பிரச்சனை இருந்து கொண்டுதான் இருந்தது. யாருக்கு யார் ஆறுதல் கூறுவது எல்லோரும் ஒன்றாகக் கூடிக் கதைத்துக் கொள்வார்கள். ஆரம்பத்தில் அவர்களுடன் கூடும் மகேந்திரன் இப்போதெல்லாம் கூடுவதில்லை.

நாட்கள் வெகுவேகமாககச் சென்று கொண்டிருந்ததை வீட்டில் இருந்து வரும் கடிதங்களே அவனுக்கு உணர்த்தின. கடைசியாக வந்த கடிதத்தில், 'கயல்விழிக்கு கல்யாணம் முற்றாகி விட்டது. அடுத்த மாதம் 14 ஆம் திகதி அமைதியாக நடத்தி விடப்போகிறேன். நிறையச் செலவாகும் முடிந்தளவு கூடிய பணம் அனுப்பு' என்றிருந்தது.

சம்பளத்தை எடுத்து அனுப்பி விட்டதுடன் சரி. அடுத்து வந்த கயல் விழியின் கடிதம் தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலைப் பற்றியது; ஏதோவெல்லாம் அலம்பி இருந்தாள்.

இது எதுவும் அவன் மனதில் முன்னர் போல எடுபட வில்லை. ஏதோ வந்தது படித்து விட்டுப் போட்டான். அவ்வளவுதான். அடுத்த கடிதம் கயல்விழியின் கல்யாணம் சிறப்பாக நடந்தேறியதைப் பற்றி விபரித்திருந்து. இனக் கலவரம் நடந்து ஆண்டொன்று ஓடிமறைந்தது. அதற்கெனக் கூட்டிய சர்வகட்சி மகாநாடும் எந்த முடிவும் இல்லாமல் தோல்வியில் முடிவடைந்தது.

அரசியல்வாதிகள் இப்பிரச்சினையைத் தீர்த்துவிட்டல் தங்கள் அரசியல் வாழ்வு அஸ்தமித்துவிடும் என்று, இதனைத் தீர்க்காமல் வளர்த்துக் கொண்டே செல்கிறார்கள் என்று பேசிக் கொண்டார்கள்.

இந்திய மத்தியஸ்தம் வகித்து இப்பிரச்சனையைத் தீர்த்து வைக்கப் போகிறது என்று பேச்சு அடிபட்டதும் எல்லோருக்கும் ஒரு நம்பிக்கை நட்சத்திரம் தோன்றி இருப்பதாக எண்ணினார் கள். நாட்கள் செல்லச் செல்ல அதிலும் நம்பிக்கை அற்றுப் போகக் கூடிய நிலையை அவதானிக்க முடிந்தது.

அன்று கனவு கண்டு கத்திக்கொண்டு எழுந்த மகேந்திரன் இரவு ஒரு மணியில் இருந்து அழுது கொண்டிருந்தான். நாலு மணியளவில் தான் கண்ட கனவு என்னவென்று கூறினான்.

'இராசாத்தி கொலை செய்யப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடக்கிறாளாம்.'

''மகேந்திரன், நீ இரவும் பகலும் அவளையே பற்றி, எண்ணிக் கொண்டிருப்பதனால் இவ்வாறான கனவு காண்பது இயற்கையே. உனது உள்ளம் முழுவதும் வியாபித்து இருக்கும் இராசாத்தி கனவில் வந்து உனக்கு விளையாட்டுக் காட்டு கிறாள்.''

'முன்னரும் இப்படித்தானே, அவள் கார் அக்சிடென்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதாக கனவு கண்டதாகக் கூறினாய். இது பற்றி வீணாக அலட்டிக்கொள்ளாமல் படு'' என்றான் நண்பன்.

விடிந்தும் நாயரும் இதையே கூறி அவனைச் சமாதானப்படுத்தினார். என்றாலும் அவளுக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது என்பதை மட்டும் அவனால் உணர முடிந்தது. மனம் உறுத்திக் கொண்டே இருந்தது.

'இதன் காரணமாகத்தான் அவள் தனக்குக் கடிதம் போடாமல் இருக்கிறாள். ஆமாம் ஏதோ ஆபத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறாள்' என்று மட்டும் அவன் நிச்சயமாக உணர்ந்தான். அன்று முழுவதும் அவனால் சாப்பிட முடியவில்லை சாப்பிடுவதற்கென்று சாப்பாட்டறைக்குச் சென்றாலும் வெறும் தேனீருடன் திரும்பி விடுவான். காதலியிடம் இருந்து கடிதம் வந்தால் மட்டுமே அது முடியும்.

நாயரும் அறை நண்பருமாகத் திட்டம் போட்டு அவளுடைய விலாசத்தை அறிந்து, அவளுக்கு இவனுடைய நிலமையை விளக்கியும் உடனடியாகக் கடிதம் போடும்படியும் எழுதி அனுப்பினார்கள். இல்லையேல் இவன் பைத்தியமாகத் தான் திரும்பி வருவான் என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். அப்படி அவளுக்கு நேரே கடிதம் எழுத முடியாத சூழ்நிலை ஏதும் என்றால் எனக்கு அறிவித்தால் அதனைப் படிப்படியாக அவனுக்குச் சொல்லி வைப்பேன் என்றும் எழுதியிருந்தனர்.

நாட்கள்தான் சென்றன. ஆனால் பதிலேதும் அதற்கும் வரவில்லை. அதற்குமேலும் அவர்களால் என்ன செய்ய முடியும். முடிந்த வரை அவனைப் பாதுகாப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று எண்ணிக் கொண்டு செயல்பட்டார்கள் அவர்கள் இருவரும்.

இதுவே அவர்களுக்கு பெரும் சங்கடமாக இருந்தாலும் அதையும் பொறுத்துக் கொண்டு வேறு வழியின்றி இப் பொறுப்பை தாமாகவே ஏற்றுச் செய்து கொண்டிருந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப்பட்ட வேளையில் அவன் அவர்களது சொல்லைக் கேட்காவிட்டால் எப்படி இருக்கும்? இருந்தும் பொறுத்துக் கொண்டு பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார்கள். அவர்களை மற்றவர்கள் பாராட்டாமல் இல்லை.

மகேந்திரன் இன்றோ நாளையோ பைத்தியமடையக் கூடிய நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தான்.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

நாட்டின் இக்கட்டான இந்நிலையிலும் சிலர் துணிந்து புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தனர். வருவது வரட்டும் என்று துணிந்தவர்கள் புறப்பட்டுச் சென்றனர். பயந்தவர்கள் நாட்டு நிலமை சீரடை யட்டும் என்று காத்திருந்தனர். 'கடல் வற்றும் கடல் வற்றும் என்று காத்திருந்த கொக்கின் நிலை' தான் மகேந்திரனது நிலையும். காத்திருந்து காத்திருந்து காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தான்.

பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டல்லவா? 'இனி என்ன வந்தாலும் புறப்படுவதுதான்' என்று தீர்மானித்துக் கொண்டான். அதுவே அவனுக்குப் புத்துணர்வைக் கொடுத்தது. சில நாட்களாக மகிழ்ச்சியாகக் காணப்பட்டான். ஒவ்வொரு வெள்ளி மாலையும் நாயரிடம் சொல்லி அவருடைய வாகனத்தில் சென்று தேடித் தேடிப் பொருட்கள் வாங்கினான். அப்பாவுக்கென்று அம்மாவுக் கென்று தங்கைக்கும் கணவனுக்கும் என்று மற்றும் சொந்தக்காரர்களுக்கு என்று சில சாறிகள் பிள்ளை களுக்குரிய சூட்கள், ரீ சேட்டுகள் என்று பல பொருட்களைத் தேடி வங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை எல்லாம் வாங்கித் திரியும் போது எதைக் கண்டாலும் இது இராசாத்திக்கு நன்றாக இருக்கும் என்று எண்ணி விட்டால் போதும் அதை அப்படியே வாங்கி விடுவான். இப்படியாக அவளுக்கென்று வாங்கிய பொருட்கள் மட்டுமே ஒரு 'சூட்கேஸ்' நிறைந்து விட்டது. மாமிக் கென்று சில வெள்ளைச் சாறிகள் மட்டுமே மேலதிகமாக இருந் தன.

இவன் இப்படி ஆயத்தம் செய்யும் போது நாயர் ஒரு நாள் கேட்டார், ''பிரண்ட் நீங்கள் சந்தோசமாக இருக்கிறதைப் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கின்றது. நிச்சயமாகப் போகப் போகிறீர்களா?''

''ஏன்?.. இப்படியே இங்கே கிடந்து பைத்தியமாக வீடு திரும்ப வேண்டும் என்ற எதிர்பார்க்கிறீர்களா?

''கோபம் வேண்டாம் பிரண்ட். நாட்டு நிலைமை இன்னும் நல்லதில்லை என்று சொல்றீங்க. இங்கிருந்து சென்று கொழும்பில் இருந்து வீடு போய்ச் சேரும் வரை சிங்களப் பகுதிகளைக் கடந்து போகவேண்டும் என்று சொல்கிறீர்கள் அப்படியான நிலையில் எப்படிப் போகப் போகிறீர்கள் அது தான் கேட்டேன்.''

''இல்ல நாயர் இனி என்ன நடந்தாலும் நான் கவலைப்படப் போவதில்லை. என்னுடைய இராசாத்திக்கு என்ன நடந்தது என்பதை நான் கண்ணால் பார்க்க வேண்டும். அவளுக்கு ஏதோ நடந்திருக்கிறது என்று என்னுடைய மனம் அடிக்கடி சொல்லிக் கொண்டு இருக்கின்றது. இல்லாவிட்டால் இத்தனை மாதங் களுக்கு ஒரு கடிதம் போடாமல் இருக்கமாட்டாள். அவள் கடிதம் போட்டுக் கொண்டிருந்தால் இதெல்லாம் எனக்கு அற்பம்'' என்றவன் இடைவிட்டு,

''அவளுடைய கடிதம் மட்டும் வருமென்றால் இங்கு நான் எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் இருப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது அந்தத் துணிவை இழந்துவிட்டேன். இப்போதுதான் எனக்கு புரிகின்றது, இந்துக்கள் ஏன் சக்தி என்று பெண் தெய்வங்களை வைத்து வணங்குகிறார்கள் என்று.

பெண்கள் அன்பு, கருணை, மென்மையுடையவர்களாக இருக்கலாம். ஆனால் வலிமை மிக்க ஆண்களின் சக்தி அவர்களேதான். இதனால்தான் இறைவன் அர்த்தநாரீசுவரர் உருவம் கொண்டார். பெண்ணுக்குத் தன்னுடலிலே சரிபாதியைக் கொடுத்தார். இதைச் சிலர் ஏளனம் செய்யலாம். ஆனால் ஒவ்வொன்றையும் தான்தான் உணரும்வரை புரியாது நாயர்...''

''ஐஸே... நீங்க இத்தனை நாளும் பேசாமல் திரிஞ்சதில ஞானம் பிறந்துவிட்டது போல...''

''அப்படியில்லை... யோசித்ததில் பல உண்மைகள் எனக்கு புரிந்தன. அவ்வளவுதான் அரசும் பிரச்சனையைத் தீர்ப்பதாக தெரியவில்லை. பொடியனுகளும் விட்டுக் கொடுப்பதாகத் தெரியவில்லை. பிரச்சினை இன்றோ நாளையோ தீரப்போவ தில்லை. இரண்டு வருடப் பேச்சிலும் எந்தப்பயனும் இல்லை என்றால், இனி அடுத்த எலெக்சன் வரும் வரையும் எந்தத் தீர்வும் ஏற்படப்போவதில்லை. இதற்கு மேலும் இருந்தால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போல் இருக்கின்றது. கனவு கண்டதில் இருந்து அந்தக் காட்சி அடிக்கடி ஞாபகம் வந்து என்னைப் பயம் ஊட்டுகின்றது. ஏதோ வாழவேண்டிய விதி இருந்தால் திரும்பி வருவேன். அங்கே அழிய வேண்டி இருந்தால் அழிந்து போகிறேன்.''

''பிரண்ட் அப்படி எல்லாம் பேசக் கூடாது நல்லபடியாகப் போய் வாங்க. கடவுள் நம்மைக் காப்பாற்றுவார்'' என்றார் நாயர்.

''அந்த நம்பிக்கையில்தான் நாயர்போக முயற்சிக்கின்றேன். ஆனால், அதன் பிறகு எது வந்தாலும் பரவாயில்லை என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிவிட்டேன். ஆனால் இறக்க முன்னர் எனது இராசாத்தியை இரண்டு கண்களாலும் பார்த்துவிட்டால் எனக்கு அதுவே போதும் நாயர்..."

''டோன் பி சில்லி. இற் வில் பி ஓல் றைற்'' என்றார் நாயர்.

அன்று மாலை பி.பி.சி செய்தியைக் கேட்ட போது மகிழ்ந்த தமிழர்களில் மகேந்திரனும் ஒருவன்.

இலங்கைச் செய்தியை விடத் தெளிவாக அதனை கேட்க முடிந்தது. அதிலே இப்பிரச்சனை பற்றிய செய்திகள் மிகவும் விளக்கமாகக் கூறப்பட்டன. அன்று இரவு செய்தியில் விரைவில் ஒரு யுத்த நிறுத்த உடன்படிக்கை வரலாம் என்று கூறியது.

இதைக் கேட்ட அனைவருக்கும் யுத்த நிறுத்தமே ஏற்பட்டு விட்டது போன்ற மகிழ்ச்சி ஏறபட்டது. அடுத்தநாள் வேலைக்குப் போன மகேந்திரன் விடுதலைக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தான். அவனைப்போல் இது வரை தடைப்பட்டிருந்த பல தமிழர்களும் விண்ணப்பததைக் கொடுத்தனர்.

''ஏன் நிலைமை சரிவந்துவிட்டதா இப்போது போக லாமா?'' என்று ஆங்கிலத்தில் கேட்டார் நிருவாக அதிகாரி.

''நடைமுறைகள் முடிந்து வருவதற்கிடையில் நிலைமை சரிவரலாம் என்று நம்புகிறோம். நாலு வருடங்கள் இருந்து விட்டோம். இனியும் இருக்க முடியாது'' என்கின்றனர்.

செய்திகளை மிகவும் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந் தனர். அன்று அந்தச் செய்தி காதில் தேன் பாய்ச்சியது போல் காற்றலைகள் ஊடே புகுந்தது. ஆமாம் மூன்று மாதத்திற்கு யுத்த நிறுத்த உடன்பாட்டுக்கு இரு பகுதியும் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த காலகட்டத்தில் இருபகுதியிலும் கெடுபிடிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்து விடும் அதனிடையில் தாங்கள் லீவில் சென்று வந்து விடலாம் என்று மகிழ்ந்தனர். அடுத்த நாள் காரியாலயத்தில் தமிழர்களின் பெருங்கூட்டமே கூடி இருந்தது. ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் இன்னும் ஒரு கிழமையில் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கு இனிமேல் தான் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் அவர்கள் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

இவர்கள் எல்லோரும் ஒன்றாகக் கூச்சலிட்டனர். ஒருவர் பேசும்படி கேட்கப்பட்டார். அவர் தங்கள் நிலைமையை விளக்கி, ''இந்த யுத்த நிறுத்த மூன்று மாதம் இடைவெளியில் நாங்கள் சென்று வர வேண்டும். ஆகவே, தயவு செய்து கூடிய கெதியில் எங்களுக்கு ரிக்கற் புக் பண்ணித்தர வேண்டும்'' என்று கேட்டார்.

''ஓ.கே. வி வில் ட்ரை...'' என்றார் அந்த அதிகாரி.

''தாங்யூ'' என்று என்று கூறிவிட்டு வெளியேறினர்.

மகேந்திரனுக்கு ஆனந்தத்துக்கு அளவே இல்லை. அந்தரத்தில் மிதந்து கொண்டிருந்தான். 'வரப்போகிறேன்' என்று வீட்டுக்கு அறிவிக்க வேண்டும் என்ற எண்ணமே எழவில்லை.

அன்று வீட்டிலிருந்து பத்து நாள்களுக்கு முன்னர் அனுப்பிய கடிதம் வந்திருந்தது. அதிலும் நிலமை சீரடையவில்லை என்றே இருந்தது. படித்து விட்டு கிழித்தெறிந்தான் மகேந்திரன்.

அவனுடைய எண்ணம் எல்லாவற்றையும் இராசாத்தியே நிறைத்துக் கொண்டிருந்தாள். போனதும் என்ன செய்ய வேண்டும். எப்போது இராசாத்தியின் வீட்டுக்குச் செல்ல வேண்டும். என்னென்ன அவளுக்கு கொடுக்க வேண்டும். என்னைக் கண்டதும் எப்படி அதிர்ந்து போயிருப்பாள். அப்படியே கட்டியணைத்து...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இனி என்ன தடை? யார் தடுத்தாலும் பரவாயில்லை. அப்பா என்ன, அம்மா என்ன இனி வெளிப்படையாகவே நடந்து கொண்டு உடனே பதிவு அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று பதிவை முடித்துவிட்டு, திரும்பிவரும் வரை அவளுடனே குடும்பம் நடத்துவது...' இப்படி எல்லையில்லாமல் அவனது கற்பனை சிறகை விரித்து பறந்து கொண்டிருந்தது.

'கடவுளே! என்னுடைய இராசாத்திக்கு எதுவும் நடந் திருக்கக்கூடாது. நீதான் அவளைக் காப்பாற்றி என்னிடம் ஒப்படைக்க வேண்டும். நான் அவளுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். ஆண்டவா, அதற்கு நீதான் உதவ வேண்டும். இல்லையேல் நானும் உயிரை மாய்த்து விடுவேன். இது உறுதி' என்று எண்ணிக் கொண்டிருக்கும் போது நாயர் வந்தார்.

''இன்னும் என்ன யோசனை? நௌ யூ ஆர் கோயிங் வை வொறி'' என்றார்.

''இல்ல நாயர் நான் போறன். திரும்பி இரண்டு மாதத்தில் வாறது எண்டுதான் போறன். அதுக்கிடையில் இராசாத்தியை கல்யாணம் செய்து விட்டுத்தான் வருவன்...'' என்று கூறிக் கொண்டிருக்கும் போது இடை மறித்தார் நாயர்.

''மை அட்வானஸ் கங்ராஜுலேஷன்ஸ்'' என்றார்.

''தாங் யூ நாயர். நான் சொல்ல வாறது அது இல்ல. நான் போறன். ஆனால், அங்கே போனதும் எனக்கு ஏதும் நடக்க லாம். சில வேளை நான் வராமல் போகலாம். அப்படியில்லை என்று நான் போய்ச் சேர்ந்த பின்னர், இராசாத்திக்கு ஏதும் நடந்திருந்தாலும் நான் திரும்பிவரமாட்டன். நான் உயிரோடு இருப்பன் என்பது நிச்சயமில்லை...''

''வை யூ சே? ஸோ,''

''இல்ல நாயர் நான் சொல்றதைக் கேளுங்களேன். அப்படி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வராமல் போனால், என்னுடைய கணக்கில் ரிக்கற் பண்ட், போனஸ், கிறற்றியுற்றி எல்லாம் இருக்கின்றன. எப்படி எடுக்கிறது?.

''நீங்க ரிக்கற்றை அனுப்பி நிலைமையயை விளக்கினா கம்பனி எல்லாவற்றையும் அனுப்பி வைக்கும்படியும் எனக்கு அறிவிச்சால் சீக்கிரம் அனுப்பி வைப்பேன். தே வில் சென்ட்யுவர் விலோங்கிஸ்'' என்றார் நாயர்.

''அப்படி ஏதும் என்றால் அறிவிப்பேன். உங்களால் முடிந்த உதவியைச் செய்யவேண்டும். நாயர் நீங்க எனக்கு எவ்வளவோ செய்திருக்கிறீங்க. உங்களுக்கு என்னால் நன்றி என்று ஒரு வார்த்தையில் சொல்ல முடியாது ஏதோ பூர்வ ஜென்ம பந்தம் என்றே என்னால் அறிய முடிகிறது.''

''இவ்வளவு பெரிசா எடுக்க வேண்டாம் பிரண்ட். மனுஷனுக்கு மனிசன் செய்யிறது தான். நான் ஒன்றும் பெரிசாகச் செய்யவில்லை. யூ ஆர் ஏ கிறேட் மேன்.''

''நீங்க எவ்வளவு லேசாகச் சொல்லிப் போட்டீங்க நாயர். ஆனால், நான் உங்கட ஒவ்வொரு செய்கையாக எடுத்துப் பார்த்து நினைத்து பூரித்துப் போகிறேன். இந்த நாள்களில் கூடப்பிறந்த சகோதரன் கூடத் தம்பியைக் கவனிக்காமல் இருக்கும் போது, நீங்க செய்தது பிறந்த உயர்ந்த குடிப் பிறப்பையே காட்டுகின்றது. யூ ஆர் ஏ கிரேட் மேன்'' என்றான்.

''நீங்க என்னை ரொம்ப புகழுறீங்க''

''இல்ல நாயர் உண்மையைச் சொல்லுறன். இதுதான் எனக்குக் கிடைக்கும் கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம். திரும்பி வர முடியாமல் போனால் இதெல்லாம் உங்களிடம் எப்படிப் பேசப்போகிறேன். ஆகவேதான் இப்போது பேசுகிறேன். என்னப் பொறுத்தளவில் றிற்றன் ரிக்கற்றில போனாலும் திரும்பி வருவேன் என்று எனது மனம் சொல்லலல்ல...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதைவிட்டுப் போட்டு போற ஒழுங்கைப் பாருங்க..''

''எல்லாம் சரி மிஸ்டர் நாயர். ரிக்கற் வரும் வரைதான் வேலை செய்யிறன். ரிக்கற் வந்ததும் கணக்கை முடிப்பார்கள் புறப்பட்டுவிடுவேன்''

''நல்லதொரு லீவில சந்தோஷமா இருந்து வர வேண்டும். பிரண்ட். டோன்ட் கெற் இன்வோல்வ் இன் எனிதிங்''

''முடிந்தால் வருவேன் நாயர். உங்களையெல்லாம் விட்டுப் பிரிவதும் கஸ்டமாகத்தான் இருக்கிறது.''

''நீங்க எங்களுடன் மீண்டும் வந்து வேலை செய்வீங்க டோன்ட் வொறி?'' என்றார் நாயர்.

இரண்டு நாள்களில் ரிக்கற் வந்தது. இன்னும் இரண்டு நாள்களில் பிளைட் புக் பண்ணி இருந்தது அவனுடன் இலங்கைக்கு அன்று செல்வதாக லிஸ்ட் நோட்டீஸ் போர்ட்டில் ஒட்டப்பட்டிருந்தது.

நாலு வருடங்களைக் கழித்தவனுக்கு நாலு நாள்களைக் கழிப்பது பெரும் பொறுப்பா? அது கூடச் சொல்லாமலே சென்றுவிட்டது.

எல்லாரிடமும் முதல் நாள் இரவே விடை பெற்று விட்டான். காரணம் சில பேர் அதிகாலை ஆறு மணிக்கு வேலைக்கு சென்று விடுவார்கள். நாயரும் அதிகாலையிலே செல்பவர்தான். ஆனால், வழியனுப்ப வருவேன் என்றார். புறப்பட்டுவிட்டு அவருக்காகவும் கம்பனி வாகனத்துக்காவும் காத்துக் கொண்டிருந்தான்.

நாயருடைய வாகனமும் கம்பனி வாகனமும் ஒன்றாக வந்து சேர்ந்தன. எல்லாரும் ஏறிவிட்டனர். இவனது பெட்டிகள் றேடியோ எல்லாம் ஏற்றப்பட்டு விட்டன.

நாயருடன் கதைத்துக் கொண்டிருந்த மகேந்திரன் கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்கினான் அவனைத் தன் தோளுடன் அணைத்துக் கொண்ட நாயர்,

''பயப்படாமல் சென்று சந்தோஷமாக லீவைக் கழித்து விட்டு வந்து சேரவும். ஐ விஷ் யூ குட் லக் அன்ட் குட் கோப்'' என்று கை கொடுத்து விடைபெற்றார் நாயர். எதுவும் பேச முடியாமல் கையசைத்து விடை கூறிக் கொண்டு மினி பஸ்ஸில் ஏறினான் மகேந்திரன். அது விமான நிலையம் நோக்கிச் சென்றது.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

உள்ளூர் விமான சேவை மூலம் 'டகரான்' விமான நிலையம் வந்து சேர்ந்த மகேந்திரன் பொறுமை இழந்தவனாக இருந்தான். சர்வதேச விமான நிலையத்துள் வந்து அமர்ந்த அவர்கள் விமானத்துக்காகக் காத்து இருந்தார்கள். ஆனால் மகேந்திரனுக்கு மட்டும் பொறுமையாக இருக்க முடியவில்லை. எப்படியோ அந்த நேரமும் வந்தது. விமனத்தில் ஏறிப் புறப்பட்டு விட்டனர். விமானம் இரவு பதினொரு மணியளவில் இலங்கையைத் தரை தட்டியது. கஸ்டம்ஸ் வேலையை முடித்துக் கொண்டு முன்னுக்கு வர பன்னிரண்டு மணிக்கு மேலாகி விட்டது.

அதிகாலை ஆறு மணிக்கு மட்டக்களப்பு ரெயில் இருக்கிறது. அதற்கு முன்னர் ரெயில்வே நிலையத்தை அடைய வேண்டும் என்று ஐந்து மணிக்கே விமான நிலைய டாக்ஸியைப் பிடித்துக் கொண்டு புறப்பட்டனர். மட்டக்களப்பு செல்லும் நால்வரும் ஒரு டாக்ஸியிலும் யாழ்ப்பாணம் செல்ல இருந்த மூவரும் ஒரு டாக்ஸியிலுமாக ரெயில்வே நிலையம் வந்து சேர்ந்தனர். முதலில் யாழ்ப்பாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெயில் வந்து சேர்ந்தது. யாழ்ப்பாண நண்பர்கள் ஏறிச் சென்றனர். அது சென்ற சற்று நேரத்தில் மட்டக்களப்பு ரெயில் வந்து சேர்ந்தது. அதற்கு அவ்வளவாகக் கூட்டம் இல்லை. அது ஆறுமணி ஐந்து நிமிடத்துக்கு ரயில் நிலையத்தை விட்டுப் புறப்பட்டது.

காலையில் புறப்படும் ரயில் பின்னேரம் இரண்டு மணிக்குப் பிறகே மட்டக்களப்பை வந்தடையும். காலைச் சாப்பாடு மதியச் சாப்பாடு எல்லாம் ரயிலில் எடுத்துக் கொள்ளலாம் என்று வந்தார்கள். ஆனால் அங்கு டீ யைத் தவிர வேறெதுவும் இருக்கவில்லை. ரயில் ஓடிக்கொண்டிருந்தது. சிங்களப் பகுதி களில் உள்ள ரயில் நிலையங்களில் நின்றது. அங்கிருக்கும் கன்டீனில் இறங்கி ஏதும் வாங்கப் பயத்தில் இவர்கள் இறங் கவே இல்லை.

இறங்குவதென்ன வாய்திறந்து கதைக்கவே பயந்து இருந் தனர். நால்வரதும் வெளிநாட்டுப் பெட்டிகளும் பொருட்களும் பக்கம் பக்கமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதையே எல்லோரும் பார்த்துக் கொண்டு சென்றனர்.

புனானை, வெலிக்கந்தை இவை கடக்கும் மட்டும் எல்லோரது முகத்திலும் வாட்டமே குடி கொண்டிருந்தது. இந்த நிலையங்களைக் கடந்ததும் ரயில் பெட்டிகளில் ஏற்பட்ட சிரிப்பையும் பேச்சையும் கலகலப்பையும் கேட்டதும் தான் இவர்கள் முகமும் மலர்ந்தது. இனி நாங்கள் பயமில்லாமல் செல்லலாம் என்று இவர்களும் பேசிக் கொண்டிருந்தனர்.

வாழைச்சேனை வந்ததும்தான் அவர்கள் வடை வாங்கிச் சாப்பிட்டார்கள். அடிக்கடி தேநீர் பருகியதால் பசி ஏற்பட வில்லை என்றாலும் தொடர்ந்து நீராகாரத்துடன் வந்தவர்கள் வடையைக் கண்டதும் வாங்கிச் சாப்பிட்டார்கள் ரெயில் ஒருவாறு மூன்று மணிக்கு மட்டக்களப்பு நிலையத்தில் வந்து நின்று பெருமூச்சு விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயாணிகள் ஆரவாரத்துடன் இறங்கி பஸ்ஸுக்கும் மினிபஸ்ஸுக்குமாக ஓட்டமெடுத்தனர். வெளியே பிரயாணிகளை ஏற்றிச்செல்ல வாகனங்கள் நிறைய நின்றிருந் தன. இதை விட பத்திரிகைகளைச் சேகரித்து விநியோகிக்கும் வாகனங்களும், தபால் எடுத்துச் செல்லும் அரச பஸ்களும் காத்து நின்றன. இவர்கள் தங்கள் பொருட்களை எடுத்துக் கொண்டு வெளியே வரும் போது பிந்தி விட்டது. மற்றவர்கள் அருகாமையில் இருப்பதால் வாடகைக் கார்களைப் பிடித்துக் கொண்டு சென்று விட்டனர்.

மகேந்திரன் மட்டும் நின்றான். பேப்பர் வேன்காரன் அழைத்தான். ஏற்கனவே நேரமாகிவிட்டது. இது வழி எங்கிலும் பேப்பர் விநியோகம் செய்து செல்ல நேரம் போய்விடும் என்பதனால் தானும் ஒரு வாடகைக் காரை எடுத்துச் செல்வது நல்லது என்று எண்ணினான். நேரத்துக்குச் சென்றால் இராசாத்தியின் வீட்டுக்கும் செல்லலாம் என்பதே முக்கிய காரணம். காரைப்பேசி அமர்ந்து கொண்டவன் விரைவாகச் செல்ல வேண்டும் என்று கூறினான்.

''ஓம் ஐயா, விரைவாகப் போனாத்தானே நானும் இரவு ஆறுமணிக்குள்ள திரும்பி வரலாம். இல்லாட்டி வாறதும் கஷ்டம்'' என்றான் அவன்.

''ஏன்?'' என்றான் மகேந்திரன்.

''இப்ப கொஞ்சம் குறைவு இந்த யுத்த நிறுத்தத்தால. இல்லாட்டி போறதற்கிடையில் எத்தின இடத்தில் செக் பண்ணுவாங்க தெரியுமா? சந்தேகம் என்றால் பிடிச்சுத்துப் போயிருவாங்க. இரவையில இருட்டில் எந்தப் பற்றைக்குள் நின்று துவக்கை நீட்டிக்கொண்டு நிற்கிறார்கள் என்று தெரியாது. இப்ப எல்லாம் கெடுபிடி கொஞ்சம் குறைவு எண்டு சொல்ல வேணும்.''

''அப்ப இப்பவும் நிம்மதி இல்லண்டு சொல்லுங்க.''

''அது இந்தப் பிரச்சினை தீர்ந்தால்தான் நடக்கும் மற்றப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது தீரும் என்று சொல்ல முடியாது. அது எப்ப தீரும்.. நாம எப்ப நிம்மதியா வாழ்றது... அது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். வாறதைக் கண்டு கொள்ள வேண்டியதுதான்.''

''இந்த றோட்டால திரும்புங்க'' என்று சொன்ன போது, அவன் வந்து சேர வேண்டிய இடம் வந்துவிட்டது என்று தெரிந்தது.

திரும்பியதும் எதிர்கொண்டது சுந்தரத்தைத்தான். கண்டதும் காரை நிறுத்தி அவனை ஏற்றிக்கொண்டவன், ''என்ன மச்சான் எங்க போயிருந்தா? நீ இவ்வளவு நாளாக ஒரு கடிதம் கூட உன்னிடம் இருந்து இல்லையே!'' என்றான்.

''நீ போட்ட கடிதம் எல்லாம் இப்பதான் வந்து சிலநாளில் படிச்சன். அதிருக்கட்டும் நீ வாறது எண்டு வீட்டிலயும் சொல்லவில்லையே!''

''ஒருத்தருக்கும் அறிவிக்கவில்லை. திடீரென்று வெளிக்கிட்டு வந்த நான். வாற கடிதம் எல்லாம் வரவேணாம்... வரவேணாம்... என்றுதான் வருகிறது. எனக்குப் பைத்தியமே பிடிக்கும் போலிருக்கிறது. அதுதான் யுத்த நிறுத்த ஏற்பாட்டைக் கேட்டதும் புறப்பட்டு வந்து விட்டேன்.''

''அதோ தெரியிற மதில் வீட்டுக் கேற்றடியில நிற்பாட்டுங்க'' என்றான் கார்க்காரரிடம். கார் நின்றதும் வீட்டில் இருந்தவர்கள் எட்டிப் பார்த்தார்கள். அவர்களுக்கு முதலில் விளங்கவில்லை. சுந்தரம் இறங்கினான். பின்னர் மகேந்திரன் இறங்கினான். சாரதி பொருட்களை இறக்கிக் கொண்டிருந்தான்.

''அம்மா அண்ணா வந்திட்டார்'' என்று கூவிய கயல்விழி இன்னும் சின்னப்பிள்ளை போல கேற்றடிக்கே ஓடிவந்தாள். கார் சாரதியிடம் காசைக் கொடுத்த மகேந்திரன் தங்கையை பக்கவாட்டில் அணைத்தவாறு முத்தமிட்டபோது, அவளது கண்கள் கலங்கின. பொருட்களை ஆளுக்கொன்றாகத் தூக்கிக் கொண்டு வீட்டிற்கு சென்றனர். அம்மாவும் அப்பாவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறைத்துப் போய்நின்றனர். இன்னுமொரு புதியவரும் கூட நின்றார். அதுதான் கயல்வழியின் கணவன் என்று போட்டோக்களில் கண்டிருக்கிறானே.

''என்ன மகன் சொல்லாமல் கொள்ளாமல் வந்து விட்டியே?'' என்றார் அம்மா.

''எப்ப மகன் புறப்பட்ட நீ? எப்ப வந்து சேர்ந்தாய்? எப்படிப் பிரயாணம் எல்லாம்?'' என்றார் அப்பா.

''நேற்று புறப்பட்ட பயணம். நேற்றிரவே ஏயர்போட் வந்து விட்டோம். விடியும் வரை அங்கிருந்து விடிந்த பின்னர் கார் பிடித்து வந்த நாங்க.''

''ஊரே கூடிவிட்டது. எல்லோரும் இருங்க தம்பியோட ஆறுதலாக் கதைக்கலாம். நீ எழும்பு மகன் எழும்பி உடுப்பை மாற்றி விட்டு மேலக் கழுவு. ஏதும் சாப்பிடலாம்'' என்றார் அப்பா.

அதற்கிடையில் சுந்தரத்துக்கும் மகேந்திரனுக்கும் தேநீர் கொண்டு வந்தாள் கயல்விழி.

''உங்களுக்குத் தெரியும் தானே! நான் ஊர்ல இருந்தால் தானே. இப்ப வந்த பிறகும் சரியான வேலை'' என்றான் சுந் தரம்.

''மச்சான் போகாமல் கதைச்சுக் கொண்டு இரு மேல் பிசுபிசுக்கிறது. குளிச்சிட்டு வாறன். கொஞ்சம் கதைக்க வேணும், போயிராத'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

உடுப்பு மாற்றிய பின் வெளியே வந்தான்.

''கயல்விழி அந்த ஜேம்ஸ் பொண்டுக்குள்ள சுவிங்கம், செக்லேற், சுவீற்ஸ் எல்லாம் இருக்கு. எடுத்துகொடு வந்திருக்கிறவர்களுக் கெல்லாம்'' என்று கூறிவிட்டுச் சென்று குளித்தான்.

உடம்பில் தண்ணீர் பட ஒரு ஆறுதல் பிறந்தது. 'இவ்வளவு சனம் கூடிவிட்டதே இவர்களைப் பிரித்துவிட்டு இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிவிட்டு எப்படி இராசாத்தியைச் சந்திக்கப் போறன்' என்ற சிந்தனையுடன் தான் குளித்துக் கொண்டிருந்தான் மகேந்திரன்.

இங்கு கூடியிருந்தவர்களிடம் வேலுப்பிள்ளை மாஸ்டர் கூறினார், ''எல்லாரும் வந்து இருக்கிறது சரி, ஒருவரும் தங்க வேலின் மகள் பற்றி ஒரு மூச்சும் விடக்கூடாது. அவன் அறியிற நேரத்தில அறியட்டும். வந்ததும் சொல்ல வேண்டாம்'' என்று எச்சரிக்கை பண்ணி வைத்தார்.

அப்போதுதான் சுந்தரத்திற்கு விளங்கியது தன்னை அவன் போகாமல் கட்டாயம் இருக்கும்படி சொன்னது இதற்காகத் தான் என்று எப்படி இதிலிருந்து தப்புவது? கேட்டால் சொல்லாமல் இருக்க முடியாது. மெல்ல நழுவி விடுவோமா? 'பிறகு வருகிறோம்' என்று கூறி விட்டு என்று எண்ணித் தயங்கிய படி இருந்தான் சுந்தரம்.

அதற்கிடையில் குளித்துவிட்டு முன்னாலே வந்த மகேந் திரன், ''இரு மச்சான் வருகிறேன்'' என்று கூறிவிட்டு உடையை மாற்றிவிட்டு நல்ல ஒரு ரீ சேட் அணிந்து கொண்டு வெளியே வந்தான்.

மேசையில் சாப்பாடு தயார் பண்ணியிருந்தாள் கயல்விழி. அம்மாவும் அங்கே காத்திருந்தா. ''வா மகன் முதல்ல சாப்பிட்டுத்துப் போ.. அவங்கெல்லாம் இருப்பாங்க காலை யில இருந்து ஒண்டும் இல்லாம இருக்கிறாய்'' என்றாள் தாய்.

''தேத்தண்ணி குடிச்சுக் குடிச்சு வயிறு நிரம்பிற்றம்மா. இப்ப பசியில்லை. இப்ப சாப்பிட்டா இரவைக்குச் சாப்பிட ஏலாது. இப்ப நேரம் நாலு மணிக்கு மேலே!'' என்றான்.

''இரவுக்குச் சாப்பிடாட்டியும் பரவாயில்லை... இப்ப கொஞ்சம் சாப்பிடு மகன். இரவுக்கு ஏதும் லைட்டா சாப்பிடலாம்'' என்றார் அப்பாவும். மறுக்க முடியாமல் மேசை யில் இருந்தவன்.

''சுந்தரம் இஞ்ச வாவன். நீயும் சாப்பிடன்'' என்றான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இப்பதானே தேத்தண்ணி குடிச்ச நான், நீ சாப்பிடு வேணுமெண்டால் நானும் கூட இருக்கிறன்'' என்று சாப்பாடு மேசையில் அமர்ந்தான் அவனும்.

அம்மாவும் அப்பாவும் உள்ளே போய் என்னவோ 'கிசு கிசு'த்தார்கள். சுந்தரம் குட்டையை உடைத்து விடுவான் போல என்பதுதான் அது.

கயல்விழி மெல்ல நழுவும் சந்தர்ப்பம் பார்த்து மகேந்திரன் ''மச்சான் இந்த கிறவுட்டை முதல்ல வெட்டிவிட்டு முதல்ல இராசாத்தியிட்ட போயிட்டு வரவேணும்'' என்றான்.

''அதொல்லாம் பிறகு ஆறுதலாக போகலாம். இவ்வளவு சனம் உன்னப் பார்க்கப் பேச வந்திருக்கக்குள்ள விட்டிட்டுப் போறது நாகரிகமில்லை. காசைக் கண்டதும் மனிசரை மதிக்கிறான் இல்லை எண்டு பேசுவாங்க...''

''அதை பற்றி எல்லாம் எனக்கு கவலையில்லை என்னுடைய உலகமே அவள்தான்...'' என்று கையைக் கழுவினான்.

''மச்சான் நான் சொல்லுறதைக் கேள்'' என்று கூறும் போது அம்மாவும் அப்பாவும் வெளியே வந்தனர்.

''வெளியே நாளைக்குப் போகலாம் என்று சொன்ன நான்...'' என்றான் சுந்தரம்.

''ஏன் மச்சான் மறைக்கிறாய்? இராசாத்தி வீட்ட நான் முதல்ல போகவேணும். அவளைச் சந்திக்க வேணும் எண்டு சொல்லன்'' என்றான் துணிந்தவனாக.

எல்லார் முகங்களும் பேயறைந்தது போலாகிவிட்டது. கயல்விழி அழுதாள். அதைப் பார்த்து பல பெண்கள் அழுதனர்.

'ஏன்? ஏன்?'' என்று கத்தினான் மகேந்திரன் அந்த வீடே அதிர்ந்தது.

******


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

''ஏன்? ஏன்??'' என்று அவன் கத்தியபடி விறைத்துப் போய் நிற்க, அழுதபடி நின்றிருந் தவர்கள் மெல்லக் கலைந்து கொண்டிருந்தனர்.

கயல்விழியிடம் சென்றவன், ''ஏன் கயல்விழி அழுகிறாய்?'' என்றான்.

பின்னர் அம்மா அப்பாவிடம் வந்து ''ஏன் பேசாமல் இருக்கறீர்கள்?'' என்று கேட்டான்.

சுந்தரத்திடம் வந்த போது அவனது வேகம் கூடியது. அவனது சேட்டை இரு கைகளாலும் பிடித்து உலுக்கி, ''ஏன் மச்சான் பேசாமல் இருக்கி றாய் என்று கத்தினான் அவன். கயல்வழியின் கணவர் உள்ளே சென்றதும் கயல்வழியும் அறைக்குள் சென்றாள். பிறகும் பிடித்து, ''சொல்லண்டா.. ஏண்டா பேசாமல் இருக்கின் றாய்'' என்று கத்தினான் அவன்.

''கொஞ்சம் ஆறுதலாக இரு சொல்லுறன். அது பெரிய கதை அப்படி லேசாக சொல்ல முடியாது'' என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எனக்கு இந்த கதையெல்லாம் தேவையில்லை. இராசாத்தி இப்ப எங்க? இருக்கிறாளா இல்லையா? என்றான்.

''இல்லை...'' என்று தலையை ஆட்டினான்.

''இராசாத்தி....!!'' என்று அவன் கத்தியவாறு வீட்டை விட்டு புறப்பட்ட போது சுந்தரமும் இன்னும் சிலரும் அவன் பின்னால் ஓடினர். அவன் முதலில் இராசாத்தியின் வீட்டுக்கு வேங்கை போல் போய் நின்றான். ஓடி வந்ததில் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. மற்றவர்கள் இன்னும் வந்து சேரவில்லை.

''மாமி என்ட இராசாத்தி எங்கே?'' என்று அங்கு சென்றும் கத்தினான். பின்னால் கூட்டம் வந்து சேர்ந்தது. கணவனையும் மகளையும் பறிகொடுத்த அந்தப் பெண்ணால் என்ன செய்ய முடியும் ஒப்பாரி வைத்து அழத்தான் முடிந்தது.

''மகளே!... மகளே!... என்ட தங்க மகளே!!!... உண்ட அத்தான் உன்னை கைவிட மாட்டார்... என்ன, எப்ப இருந்தும் வந்து வாழ வைப்பார் என்று வாய் ஓயாமல் சொல்லுவாயே மகளே! உன்ன வாழத்தான் வைக்க முடியல்ல... இப்ப நீ போன பிறகு உன்னை பார்க்க வந்திருக்கிறார் மகளே!! எப்படி உன்னைக் காட்டப்போறன். இரண்டு வருஷமாகக் கடிதம் போடாமல் இருக்கும் போது, நம்புறாயா என்று கேட்டேனே மகளே? எத்தின வருஷமானாலும் என்ட அத்தான் என்ட அத்தானாகத்தான் வருவார். அவருக்கு என்ட சவத்தை என்டாலும் படம் பிடிச்சுக் காட்டம்மா என்று கடைசியாகச் சொன்னாயே மகளே! சாகப்போகும் பொழுதும் அம்மாவைப் பத்தி நீ நினைக்கலியே மகளே. அத்தான் அனுப்பிய சேலையை உடுத்து என்ன அனுப்பி வையுங்க அப்படியே படமும் எடுத்துக் காட்டிப்போடுங்க... என்றுதானே மகளே சொன்னாய்'' என்று ஒப்பாரி வைத்து அந்தத் தாய் தலையிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு யாரோ ஒருவர் அவளது படத்தை எடுத்து வந்து காட்டினார். 'இரண்டு வருடமாக கடிதம் இல்லை' என்பதைக் கேட்டதும் ஆத்திரம் அடங்கி வியர்வை வழிந்தது, அவனுக்குப் பின்னர் படத்தைப் பார்த்ததும் வேகம் மீண்டும் வந்தது. ஒன்று உயிருடன் இருக்கும் போது எடுத்த படமும் மற்றயது இறந்த பின்னர் எடுத்த படமுமாக இரண்டும் பெருப்பித்து ''பிரேம் பண்ணப்பட்டு இருந்தது. அதை வாங்கி நெஞ்சுடன் அணைத்தவன் மீண்டும் ஓடியது சவக்காலைக்கு. அது கிட்டத்தட்ட அரைமைல் தூரம். கடற்கரை ஓரமாக அமைந்திருந்தது.

முன்னே ஓடிவந்தவனுக்கு எந்தப்புதைகுழி என்று தெரியவில்லை. சவக்காலையில் கிடந்து அழுதான் ''என்ட இராசாத்தி...!! நான் கண்ட கனவெல்லாம் உண்மையாகப் பேயிற்றே. நீ எப்படி இறந்தாய் இராசாத்தி? உன்ட கடைசி ஆசையைக்கூட என்னால் நிறைவேற்ற முடியவில்லையயே இராசாத்தி! உன்னை நான் இனி எங்க காணப்போறன்?'' என்று ஓலமிட்டுக் கொண்டிருந்தான்.

வந்தவர்கள் இராசாத்தியின் புதைகுழியையும் அதன் பக்கத்தில் அவளுடைய அப்பாவின் புதைகுழியையும் காட்டினார்கள்.

அதில் வந்து புரண்டு அழுதான். ''நான் உனக்கு என்ன குறைவைத்தேன் இராசாத்தி? உன்னை இராசாத்தி மாதிரி வைச்சிருப்பேன் என்று எழுதினேன். இரண்டு வருஷமா கடிதம் எழுதல்ல என்ட புதுக்கதை என்ன இராசாத்தி? நீ கடிதம் போடாட்டியும் கிழமைக்கு ஒன்று போட்டுக் கொண்டிருந் தனே! அப்படி சாகவேண்டி உனக்கு என்ன வந்தது இராசாத்தி?'' அழுதழுது புரண்டவனை எவராலும் பிடித்துத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

மாலையாகி விட்டது சுந்தரம் அவனைப்பிடித்து இழுத்தபடி தூக்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேந்திரன் மூர்ச்சை அடைந்து விட்டான். வீடு சோபை இழந்து ஆளை ஆள் பார்த்துக் கொண்டிருந்தனர். வந்தவர் களுடன் பேசுவதற்கு ஆட்கள் இருக்கவில்லை. வந்தவர்கள் எதையும் எவரிடமும் கேட்க முடியாமல், எதையோ அறிந்தவர் போல நடந்து விட்டனர்.

காட்டுத் தீ போல ஊரெங்கும் இப்படி வதந்தி பரவிட்டது. *''இராசாத்தியை காதலிச்சவனாம் அவள் செத்ததை அறிஞ்சு அவனுக்கு பைத்தியம்போல் வந்து விட்டதாம்''* என கதை பரவிக் கொண்டிருந்தது. சிலர், *'பைத்தியம் பிடித்து விட்டது'* என்றே கதைத்தனர். மறு நாள் அதிகாலையில் எழுந்து அவன் இராசாத்தியின் படத்தைத் தேடிய சத்தத்திலே வீட்டார் விழித்தனர். அப்பா எழுந்து வந்ததும், ''என்ட இராசாத்தியின் படம் எங்கே?'' என்றான்.

''அந்த அலுமாரிக்கு மேல் இருக்கிறது'' என்றார்.

''இதை நீங்கள் எவரும் தொடக்கூடாது. அவள் என்றும் பரிசுத்தமாக என் இதயத்துக்குள் இருக்கிறாள். அவளை மாசுபட்டவர்கள் தொடக்கூடாது'' என்றான்.

''என்னண்ணா'' என்று தங்கை கயல்விழி கேட்டாள்?

''போடி நீ எல்லாம் பாசமுள்ள தங்கச்சியா? உன்னை யெல்லாம் நம்பியிருந்தேனே. என்ட இராசாத்தியைப் பற்றி ஒரு வார்த்தை உன்னால எழுத முடியாமல் போயிட்டே'' என்று அவன் கூறியதும் அவள் வாயும் அடைத்துப் போய் விட்டது.

தாயார் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தார். ''எங்கே கேற் திறப்பு?'' அப்பா கேற்றைத் திறந்து விட்டார். பொழுது இன்னும் சரியாக விடியவில்லை. கடற்கரைக்கு மீன் வலை இழுப்பவர்களும் மீன் பிடிப்பவர்களும் போய்க்கொண்டிருந் தனர். மகேந்திரன் வந்து அவளது சவக்குழியை சுற்றித் துப்பரவு செய்துவிட்டு, அதன் முன்னால் உட்கார்ந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பவர்கள் இவன் யாரோ பைத்தியம் என்று தான் எண்ணிக் கொண்டுதான் செல்வர். ஆனால், இப்போது கதை ஊரெங்கும் பரவியதால் இதுவும் ஒரு பைத்தியம் என்றே எண்ணினர்.

அவன் புதைகுழிக்கு இருந்து அவள் பேசியது, செய்தது, நடந்தது, எழுதியது எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்தான். இப்படி எல்லாம் நடக்கும் என்று முன்னமே உணர்ந்தாளா? குங்குமம் வாங்கிவந்து பொட்டு வைக்கச் சொன்னாள். நான் இறந்தால், 'நீங்கள்தான் என் கணவர் நான் உங்கள் மனைவி' என்பதை என் பிணத்தின் மீதாவது மாலையிட்டு நிரூபியுங்கள் என்று கேட்டாளே அந்தக் கடைசி ஆசையைக்கூட என்னால் நிறைவேற்ற முடியவில்லை. அதை எப்படி நிறைவேற்றப் போகிறேன். அவள் எழுதிய, பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அவனது இதயத்தை ஊசிபோல் குத்தியது ஒவ்வொன்றாக எண்ணியபடி அதன் அருகே இருந்துகொண்டிருந்தான். வெயில் ஏறிக்கொண்டிருந்தது.

வீட்டுக்கு வந்த சுந்தரத்திடம், ''மகேந்திரன் விடியவுமே சவக்காலைக்கு போய்விட்டான்'' என்று கூற, அவன் சைக்கிளை எடுத்துக்கொண்டு உடனே அங்கு வந்தான். அவனருகில் அமர்ந்து தோளில் கைவைத்ததும் திரும்பிப் பார்த்தவன் அவனது தோள் இரண்டையும் இறுகப்பற்றிக் கொண்டான்.

''மச்சான் எப்படியடா என்ட இராசாத்தி செத்தவள்? அதை என்றாலும் எனக்குக்கூறன்'' என்று கெஞ்சினான் அவன். இங்கே வெயிலாக இருக்கிறது நிற்கவும் முடியவில்லை. வா வீட்டுக்கு போய்ச் சொல்கிறேன்'' என்று அவனை மெல்ல அழைத்துக் கொண்டு வீடு வந்தான். இருவரும் வெளிவிறாந்தையில் கிடந்த கதிரைகளில் அமர்ந்துகொண்டனர். இருவருக்கும் தேநீர் கொண்டு வைக்கப்பட்டது.

''குடி மகேந்திரன்... சொல்லுறன்.''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனும் எடுத்துக் குடித்து விட்டு ''சொல்லன்'' என்றான்.

''மச்சான் இது நடந்தபோது நானும் ஊரில் இல்லை. நான் அறிஞ்சதைச் சொல்லுறன். தியாகராசா என்று ஒருவன் வெளிநாடு சென்று வந்து வட்டிக்குப் பணம் கொடுத்து இருக்கிறான். இவர்களுடைய அப்பாவின் கொந்துராத்துப் பணத்தை யாரே விளையாடிவிட்டார்கள். இதனால் வீடு விற்பனைக்கு வர இவன் உதவி செய்யிறாப்போல போய் வளவை மீண்டும் இராசாத்தியின்ர பேரில எழுதி இருக்கிறான். இவன் அதற்குப் பிறகு அடிக்கடி அங்கு போய்வர நன்றியுடன் அவனைக் கவனிச்சிருக்கிறாங்க.

இதை இவன் தவறாகப் புரிஞ்சிட்டான். நீயும் கடிதம் போடுறதில்லையாம். இப்ப நீ அவளைக் கைவிட்டியாம் அவள் இப்ப தன்னை விரும்புறாள். கல்யாணம் முடிக்கப் போறாள் என்று போற போற இடத்தில குடிவெறியில் கதைச்சு இருக்கிறான். இவனை வெறியோட வரவேணாம் எண்டு சொல்லிப் பார்த்தாங்களாம் அவன் கேட்டபாடில்லை. இவன் வந்தா இராசாத்தி அறைக்குள் போய்க் கதவைப் பூட்டிக் கொள்வாளாம். கத்திப் போட்டுப் போவானாம். ஒரு நாள் இவன் வரக்குள்ள இராசாத்தி மட்டும்தான் வீட்டில இருந் திருக்கிறாள். அம்மா கடைக்குச் சாமானுக்கு போனவ. பக்கத்து வீட்டிலதான் இருக்கிறா. வெறியோடு வந்தவன், வெளிக் கதவை பூட்டிவிட்டு அவளைப் பலாத்காரம் செய்யப் போய் இருக்கிறான். அவனால் முடியல்ல அவன் குத்தியோ? தற்பாதுகாப்புக்காக அவள் குத்தியோ இறந்து போனாள். அவள் கத்திய சத்தம் கேட்டு அம்மாவும் அயலவரும் ஓடிவர அவள் இரத்த வெள்ளத்தில் கிடந்தாளாம். இவன் கதவைத் திறந்து கொண்டு ஓடி இருக்கிறான். இவன்தான் கொலை செய்து போட்டான் என்று ஊரெல்லாம் கதையாய்ப் போயிற்று அந்த நேரத்தில அவள் கதைச்ச போது ஒருவரும் அவளிடம் கேட்டு அறியல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் இறக்கும் போது, சொன்னதெல்லாம் உன்னைப் பற்றித் தானாம் 'எண்ட அத்தான் என்னைப் பார்க்க வருவார், அவர் வரும்போது காட்ட அவர் அனுப்பிய சேலை இருக்கிறது அதை உடுத்து வடிவாச் சோடித்து குங்குமப் பொட்டு வைச்சு என்னைச் சுடலைக்கு அனுப்பக்குள்ள படம் எடுத்து வைச்சிருந்து காட்டுங்க. அவருடைய கடிதம், படம் எல்லாம் பெட்டிக்குள்ள இருக்கு வந்ததும் கொடுத்திடுங்க. எண்ட அத்தான் எப்போதும் எண்ட அத்தானாகத்தன் வருவார். அம்மா அவரை ஏசாதீங்க. நான் அவருடைய மனைவி அவருடன் குடும்பமாக வாழ்ந்து விட்டன். இனி ஊர் உலகத்துக்குத்தான் வாழ்ந்து காட்ட வேணும். அதுக்கிடையில் நான் போறன். பரிசுத்தமாக போறன். எண்டு மட்டும் சொல்லுங்க...' என்று அவளுடைய அம்மாவுடைய மடியில தலைவைத்துத்தான் இறந்தாளாம்.

''இராசாத்தி எண்டைக்கும் என்னுடைய இராசாத்திதான்'' என்று கூறி அழுதான் மகேந்திரன்.

சற்று நேரத்தில், ''அவன் தியாகராசாவை நான் பழிவாங்க வேணும். அவன் எங்கே இருக்கிறான் என்று நீதான் காட்டவேணும். அவன் எங்கே இருக்கிறான் என்று நீதான் காட்டித்தர வேணும்'' என்றான்.

''சாப்பிட வாங்க மகன்... முகத்தைக் கையக் காலக் கழுவிற்று வா'' என்றாள் தாய்.

''எனக்கு ஒன்னும் வேண்டாம்'' என்றான் அவன்.

''இதுதானே கூடாது என்று சொல்கின்றது. நல்ல பிள்ளை மாதிரி சொல்லுறபடி நடந்தால், நான் எல்லாம் சொல்லுவன். இன்னும் விஷயமிருக்கு''

''சொல்லுவாயா? கட்டாயம் சொல்லுவாயா??'' என்று கேட்க அவன் தலையை ஆட்ட உடனே எழுந்து சென்று குளித்துவிட்டு உடையை மாற்றி விட்டு சாப்பிடச் சென்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேந்திரன். சுந்தரமும் வந்து உட்கார்ந்தான்.

ஏதோ பெயருக்குச் சாப்பிட்டான். சாப்பிட்டுவிட்டு எழுந்ததும் மீண்டும் வெளியே வந்த போது, அவன் கொண்டுவந்த பெட்டிகள் றேடியே எல்லாம் அப்படியே பிரிக்கப்படாமல் இருப்பதைக் கண்டான். பெரிய பெட்டியை எடுத்து எறிந்தான். அது உடைந்து பொருட்கள் எல்லாம் சிதறின. றேடியோவை எடுத்து உடைக்கப் போனான். சுந்தரமும் கயல்விழியும் பிடித்து விட்டனர்.

"ஆ... அது உனக்கு... என்ட கல்யாணப் பிரசன்ட்'' என்று கயல்விழியிடம் கொடுத்தான். மற்றப் பெட்டியைச் சுந்தரம் தூக்க "அதை நான் உடைக்க மாட்டேன். அது இராசாத்திக் குரியவை'' என்றதும் அதைக் கொடுத்தான்.

அதைப் பத்திரமாக எடுத்தவன், "இனி யாரிட்டக் கொடுக்கப் போறன்? இராசாத்தி...!'' என்று அழுதான். அவனைப் பிடித்து வெளியே இழுத்து வந்தான் சுந்தரம்.

"பொறு வாறன்'' என்று பெட்டியைத் திறந்து அவளுக்காக வாங்கிய ரேப்பையும் எடுத்து, அவள் அனுப்பிய கசற்றையும் அதிலே போட்டுக் கொண்டு வெளியே வந்து அமர்ந்து, அவள் பாடிய பாடலைப் போட்டான். அந்த வீட்டில் இராசாத்தியின் குரல் ஒலித்தது. அசையாது கேட்டுக்கொண்டிருந்தனர் எல்லோரும்.

'இவ்வளவு ஆளமான காதலைக் குழிதோண்டிப் புதைத்து விட்டேனே!' என்று உள்ளுக்குள் மனம் இரங்கிப் புழுங்கினார் வேலுப்பிள்ளை மாஸ்டர்.

பாட்டு முடிந்ததும் நிறுத்திவிட்டு, "நீ சொல்லு சுந்தரம்'' என்றான் அவன்.

"தியாகராசா அன்றோடு ஊரைவிட்டுப் போனவன்... பிறகு திரும்பவே இல்லை... தலைமறைவாகிட்டான் என்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்கிறார்கள். சிலர் செத்துப் பேய்விட்டான் என்றும் கதைக்கிறார்கள். அவனுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை'' என்றான்.

''அப்ப அவனை நான் பழிவாங்க முடியாது என்கிறாயா? அவன் எங்கிருந்தாலும் அவனைத் தீர்த்துக்கட்டுவதுதான் எனது முதல் வேலை'' என்றவன் தொடர்ந்து,

''பெரியதொரு மாலை வேணும். குங்குமம் வேணும். நாளைக்கு தயார் செய்து கொண்டுவா இந்தா பணம்'' என்று கொடுத்தான்.

''முதலில் அவளுடைய ஆசைகளை நிறைவேற்ற வேண்டும்'' என்றான்.

''இராசாத்திக்குக் கட்டிடம் கட்ட வேண்டும். அவளுடைய ஆசைகளை நிறைவேற்ற வேண்டும். அதுவரைக்கும் எனக்கு பைத்தியம் பிடிக்காது. இராசாத்தியைக் காணாத நெஞ்சுதான் வெடிக்கும் போல இருக்கிறது. அதுக்கு நீதான் எனக்கு உதவவேணும். நான் சொல்லுறதெல்லாம் செய். பணத்தை நான் செலவு செய்யிறன்'' என்றான் மகேந்திரன்.

நாட்கள் நகர்ந்தன.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

'கொஞ்ச நாட்களில் சரிவந்து விடும்' என்று அப்பா எல்லோரையும் சமாதானப்படுத்தினார். உண்மைதான், சில நாட்களின் பின்னர் அவன் ஓரளவு அமைதி பெற்றான்.

அவளுக்காக பெரியதொரு பூமாலை கட்டி எடுத்துக் கொண்டு, அவளது புதைகுழியின் மேல் வைத்தான். குங்குமம் கொண்டு வைத்தான். கற்பூரம் கொழுத்தினான். அவளை அவளது தூய அன்பை வணங்கி நின்றான்.

இந்த வழக்கமே நீடித்து. காலையில் கடவுள் வணக்கம் அவனுக்குச் சுடலையிலே இருந்தது. மாலையில் றேடியோ கசட்டுடன் சென்றான் என்றால், அவளுடைய கதை; அவளுடைய பாடல் இவற்றைப் போட்டுக் கேட்டுக்கொண்டு இருப் பான்.

அவனுக்கு விருப்பமான பாடல்களை எல்லாம் வேறாக அவனும் ஒரு டேப்பில் பதிந்து கொண்டான். அதில் 'ராசாத்தி உன்னைக் காணாத நெஞ்சு' என்னும் பாடல்தான் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நான் ராசியில்லாத ராசா', 'கனவு காணும் வாழ்கையாவும்', 'வாழ்வே மாயம் போன்ற பாடல்களும் டேப் பண்ணப்பட்டு இருந்தது.

இந்த டேப்பைக் கேட்டுக்கொண்டு இருக்கும் போது மட்டும் மனம் உருகிக் கொண்டிருப்பான். மற்ற நேரங்களில் அவனது மனதை அவள் வந்து ஆக்கிரமித்து கொள்ளும் போது அவளது செய்கைகளை, பேச்சுக்களை, நளினமான நடப்புக்களை, அவள் பேசிய ஒரு சில சொற்களை எண்ணும் போது அவனது நெஞ்சு வெடித்து விடும் போல் இருந்தது.

நண்பன் சுந்தரம் தினமும் வந்து அவனைச் சாந்தப் படுத்துவான்.

''நீ சொல்லும் எதையும் கேட்பேன். ஆனால் தியாகராசா வைப் பழி வாங்கும் எண்ணத்தை மட்டும் மாற்றிக் கொள்ள மாட்டேன்'' என்பான்.

''எல்லாம் சரி சுடலைக்குப் போறதை மட்டும் நிறுத்திறாய் இல்லையே!''

''அதைமட்டும் சொல்லாத மச்சான். நான் அவளுடைய கட்டிடம் கட்டுமட்டும் முடியுமட்டும் தினமும் அங்கு செல்வேன். அவளது எண்ணம் நெஞ்சில் இருக்கும் வரை அங்கு சென்றுதான் வருவேன்.''

''அது சரி. ஏன் மூன்று கட்டிடம் கட்டுகிறாய்?''

''அவளுடைய அப்பாவுக்கும் அவளுக்கும் இரண்டு. மற்றதும் பக்கத்திலே கட்டுறன் அவங்கட அம்மாவுக்கு. அவ செத்தால் யார் கட்டிடம் கட்டப்போறாங்க. அதுதான் இப்பவே கட்டி வைக்கிறன்'' என்றான்.

''அப்படியென்றாலும் அதை அவங்கட அப்பாவுக்கு பக்கத்தில அல்லவா கட்டி இருக்கு வேணும்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்படித்தான் நானும் சொன்னேன். நான் கவனிக்க வில்லை, மேசன் இப்படிக் கட்டிவிட்டான்'' என்றான்.

கட்டிட வேலைகள் எல்லாம் முடிந்தன. இராசாத்தியின் கட்டிடத்தில் 'திருமதி இராசலெட்சுமி மகேந்திரன்' என்று எழுதியிருந்தான். அதன் கீழே 'என் நெஞ்சு நிறைந்த இராசாத்தி' என்றும் இருந்தது. இதையெல்லாம் பார்ப்பவர்கள் அவனுடைய அப்பாவிடம் வந்து சொல்வார்கள்.

''அந்தப் பைத்தியம் என்னவென்றாலும் செய்து முடிக்கட்டும். அவனுடைய பைத்தியம் மட்டும் தெளிந்தால் சரிதான்'' என்பார். கட்டிடவேலை முடிந்ததும் ஒரு நாள் இராசாத்தியின் வீட்டுக்குச் சென்றான். மாமி அழுதுதான் வரவேற்றாள்.

''மாமி அழாதீங்க எண்ட உயிருக்குயிரான இராசாத்தியை இழந்த பின்னும் நானும் இன்னும் உயிரோடு இருக்கிறேனே நீங்கள் பார்க்கலையா? எல்லாம் விரைவில் தெரியவரும் இந் தாங்க.. இதைச் செலவுக்கு வைத்துக் கொள்ளுங்க...'' என்று கொடுத்தான்.

''வேண்டாம் தம்பி. நான் எண்ட பாட்டைப் பார்த்துக் கொள்ளுவேன்''

''மாமி நீங்க என்னை வேற்று மனிதனாகக் கணிக்கிறீங்க. நான் உங்கள் மகளின்ர கணவன். உங்களிட்ட இராசாத்தி என்ன சொன்னவள். அவள் சொன்னதை ஏற்றுக்கொண்டா இதையும் ஏற்றுக் கொள்வீங்க எண்டு நினைக்கிறேன். அவள் இருந்தால் அவளும் நானும் சேர்ந்து உங்களை எப்படிப் பார்ப்போமோ அப்படியே நானும் பார்ப்பன் மாமி...'' என்று கண் கலங்கினான் மகேந்திரன். அதற்கு மேலும் எதுவும் பேசத் தோன்றாமல் கை நீட்டி வாங்கிக் கொண்டாள் அவள்.

''மாமி நீங்கள் அவளைக் காப்பாற்றி வைச்சு இருந்தா அவள் இன்று என்னோட நல்லா வாழ்ந்துதான் இருப்பாள். நான் இரண்டு வருடமாகக் கடிதம் போடல்ல எண்டு சொன்னீங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனா நான் ஒவ்வொரு கிழமையும் கடிதம் போட்ட நான் அவளும் போட்டிருப்பாள் என்ற நம்பிக்கை இருக்கு...'' என்றான்.

''வேணுமெண்டா நீங்க அவளுடைய அறையைப் பார்க்கலாம்'' என்றதும் எழுந்து விட்டான் மகேந்திரன்.

அறையைத் திறந்து விட்ட தாய், ''அவள் இன்னும் இதில் வாழ்கிறாள் என்று நம்பி அப்படியே பூட்டி வைத்திருக் கிறேன்'' என்றாள்.

மேசையில் இருந்த அல்பத்தில் சவ அடக்கத்தின் போது எடுத்த படங்கள் பல இருந்தன. அவற்றை பார்த்ததும் அவன் கண்கள் அழுதன. மனமும் துடித்தது. அடுத்து அவளது புத்தகங் கள், பைல்களைப் புரட்டினான். புத்தகங்களின் ஒன்றும் அகப்படவில்லை. வங்கி சேமிப்புப் புத்தகம் இருந்தது. பலமாதமாக வைப்புச் செய்யவில்லை. இருந்ததே எடுபட்டு வந்து பத்து ரூபாயுடன் நின்றிருந்தது. அவளது பெட்டியைத் திறந்தான். சாறிகளுக்கு மேலே ஒரு பைல் இருந்தது. அதை எடுத்துப் பிரித்தும் கண் கலங்கிப் போனான். அவள் அனுப்பிய ஒவ்வொரு கடிதத்தினதும் பிரதி இருந்தது. மேலோட்டமாக புரட்டியவன் தான் அனுப்பிய ஒவ்வொரு கடிதமும் பைல் பண்ணப்பட்டு அதில் இன்ன திகதிக்குரிய கடிதத்திற்குரிய பதில் என்று சிவப்பு மையால் எழுதப்பட்ட காபன் பிரதி இருந் தது.

'அவள் ரிஸ்ஸு பேப்பரில் எழுதுவது அதிகமாக எழுதுவதற்குத்தான்' என்று எண்ணி இருந்தான். இப்போது தான் புரிந்தது பிரதி எடுப்பதற்காகவும் என்பது. காசுடன் அனுப்பிய கடிதமே கடைசிக் கடிதமாகவும் அதன் பின்னர் அனைத்தும் அவளது கடிதத்தின் பிரதியாகவுமே இருந்தன. அழுதழுது அவள் எழுதிய கடிதங்களை அவனால் படிக்க முடியவில்லை கண்ணீர்திரை போட்டு மறைத்தது. ஒன்றிரண்டை மேலாகப் படித்து விட்டு அழுதான். ஏதோ சதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்திருக்கிறது. என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது பெட்டியினுள் அவனனுப்பிய சாறி, மேக்கப்செற், மணிக்கூடு, குங்குமச் சிமிழ் என்பன பத்திரமாக இருந்தன. ஒரே ஒரு சறியை மட்டும் காணவில்லை.· இல்லை... அதுதான் சவத்தின் படத்தில் தெரிகிறதே! அதையுடுத்தி எனது கடைசி ஆசையை நிறைவேற்றிய உனக்கு, உனது கடைசி ஆசையை நிறைவேற்ற முடியவில்லையே என்று கண்கலங்கியவனாக வெளியேறினான்.

''மாமி இந்த பைலை மட்டும் எடுக்கிறன். இதில் இராசாத்தி எனக்கு எழுதின கடிதப் பிரதியெல்லாம் இருக்கின்றன. ஆனால் இவை ஒண்டும் எனக்கு கிடைக்கல்ல. இதை நான் ஒரு தரம் ஆறுதலாக படிக்க வேண்டும்'' என்றான்.

சரி என்பதற்கு அடையாளமாக தலையை ஆட்டினாள். அந்தப் பைலுடன் அறைக்குள் வந்து பூட்டிக் கொண்டவன் ஒரு கடிதத்தைப் படிப்பதும் பின்னர் அழுவதும் மறு கடிதத்தைப் படிப்பதும் பின்னர் அழுவதுமாகவே இருந்தான். முதலில் அவனது மதி நுட்பத்தை பாடல்கள் ஒலிப்பதிவு செய்து அனுப்பிய போது அறிந்தவன் இப்போது கடிதங்கள் பைல் பண்ணி வைத்திருக்கும் விதத்திலும் அழகிலும் கண்டு வியந்து நின்றான். ஆனால், அவற்றை இப்போது அவனால் இரசிக்க முடியவில்லை. பார்த்து அழவே முடிந்தது.

நீண்ட நேரமாகச் சாப்பாட்டுக்காகக் கதவைத் தட்டியபோது வேண்ட வெறுப்பாக, எல்லாக் கடிதங்களையும் படித்து முடித்த பின்னரே எழுந்து வந்தான்.

சில நாட்களில் அவனது நடையில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு மகிழ்ந்தனர் பெற்றோர். இப்போது மாலை வேளை மட்டும் சவக்காலைக்குச் சென்றுவிட்டுப் பொழுதுபட முன்னர் வந்து விடுவான். நண்பனை அழைத்துக் கொண்டு கடற்கரைக்குச் செல்வான். கடிதங்கள் எழுதினான். எல்லோருடனும் கதைத்தான் மறுக்காமல் சாப்பிட்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிடப் பெற்றோருக்கு வெறென்ன வேண்டும்.

''நான் சொன்னேன் கொஞ்ச நாளில் எல்லாம் சரி வந்துவிடும் என்று'' என்றார் தந்தை.

ஒரு நாள் கடற்கரையில் நண்பன் சுந்தரத்திடம் கூறினான். ''சுந்தரம் மச்சான், உன்னிடம் ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லுறன். ஒருவரிடமும் சொல்ல வேண்டாம் இன்னும் நான் கனகாலம் வாழுவேன் என்று சொல்ல முடியாது. என்னுடைய மனம் எனது நிலையைக் கூறுகின்றது. அதற்கிடையில் அந்தத் தியாகராசாவை நான் ஒரு முறை சந்திக்க வேண்டும். இதற்கு ஒரு வழி சொல்வாயா?'' என்றான்.

''அதற்கு நான் வழி செய்கிறேன். ஆனால் நீ என்ன செய்யப் போகிறாய்?''

''நான் ஒன்னும் செய்யல்ல மச்சான்... எண்ட மனம் அப்படிச் சொல்லுது அதுதான் சொல்லுறன்...''

''இனிநான் வாழ்ந்தும் ஒன்றுதான் இறந்தும் ஒன்றுதான். இப்போது நான் பட்டுப்போன முருங்கை மரம் போன்றவன். என்னால் எவரும் பயன் பெறப்போவதில்லை. அதைவிட நீ என்னவோ உண்மைகள் எல்லாம் சொல்லப் போகிறாய் என்றாய். சொல்ல வேண்டியதை வேளைக்கே சொல்லி விடு. பின்னால் நீயும் வருத்தப்படுவாய். சில பொறுப்புக்களை உன்னை நம்பி ஒப்படைக்க விரும்புகிறேன். அதுதான் கேட்கிறேன்'' என்றான்.

''நான் இன்னும் உன்னை சோதிக்க விரும்பவில்லை நாளைக்கே எல்லாவற்றையும் சொல்லுறன். நான் சொல்வதை ஒருவரிடமும் சொல்லமட்டேன் என்று சத்தியம் செய்ய வேணும் பழையபடி மாறமாட்டேன் என்று எனக்கு உறுதி தரவேணும்'' என்று கேட்டான்.

''என்ன மச்சான் இப்படிக் கேட்கிறாய் என்னிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறதெல்லாம் உன்னிட்டத்தான் சொல்லப் போறன். இதை போய் வேற யாரிட்டச் சொல்லப் போறன்'' என்றான்.

''உங்கள் அப்பா மீது எந்தச் சந்தர்ப்பத்திலும் கோபிக்க மாட்டேன் என்றும் ஏசிச் சண்டைகள் எதுவும் பிடிக்க மாட்டேன் என்றும் எனது தலையில் சத்தியம் செய்து கொடு. அப்பதான் நீ என்னிடம் சொல்வது எல்லாவற்றையும் நிறைவேற்றி வைப்பேன்'' என்றான் மீண்டும்.

''என்ன புதிர் எல்லாம் போடுகிறாய்? ஆ... சத்தியம்'' என்று தலையில் அடித்தான் அவன்.

''நாளைக்கு மாலையில நாம இஞ்ச சந்திக்கிறாப் போல சந்திப்பம். நீ டேப் றெக்கோடரையும் கொண்டு வா. தியாகராசாவையும் சந்திக்கலாம்'' என்றான். அடுத்தநாள் எங்கும் புறப்படாமல் தன்னைப் பற்றிய இராசாத்தியைப் பற்றிய குறிப்புகளை எழுத்திக் கொண்டிருந்தான் அவன். அன்று மாலைதான் தன் வழமையான கடமையைச் செய்ய சவக்காலைக்கு சென்றான். மாலையாகியதும் சுந்தரம் சவக்காலைக்கே வந்து சேர்ந்தான். அவனையும் அழைத்துக் கொண்டு கடற்கரைக்குச் சென்றான்.

''எங்க தியாகராசாவைக் காணல்ல?'' என்று கேட்டான்.

''முதல்ல நான் சொல்வதைக் கேள்'' என்று மணலில் அமர்ந் ததும் சொன்னான்.

''மச்சான் நீ இராசாத்தியை என்னைப் பார்கச் சொல்லி போட்டுப் போனதை நான் மறக்கல்ல. நான் ஊரில் இருக் கல்ல. அதனாலே என்னாலே எதுவும் செய்ய முடியல்ல கடைசியில் இதையாவது செய்ய முடிந்ததே என்று திருப்திப் படுகிறான். ஒரு நாள் இரவு தியாகராசா வீட்டுக்கு வந்து போனபோது பிடித்துக் கொண்டேன் செம்மையாக சாத்தி னேன். உண்மையைச் சொல்லும்படி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சொன்னான்,

''நான் ஒன்றும் செய்யல்ல. என்னைத் தூண்டிவிட்டவர் வேலுப்பிள்ளை மாஸ்டர்தான். வளவை மீளவும் ஐயாயிரம் காசும் தந்தவர். அந்தப் பிள்ளை என்னுடன்; பழகியதில் அவளும் என்னை விரும்புகிறாள் என்று தான் எண்ணி இருந் தேன். அதுதான் ஒரு நாள் வெறியில் போன நான் அவள் தனிமையில் இருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தலாம் என்று முயற்சித்தேன். ஆனால் என் கைக்கு அகப்படவே இல்லை. அதனிடையில் எங்கிருந்தோ பழம் வெட்டும் கத்தி ஒன்றை எடுத்துக் கொண்டாள். பயந்தவன் போல நடித்து அவளை ஏமாற்றப் பார்த்தேன். 'இராசாத்தி என்னைக் குத்திப் போடாதே. உன்னிலை விருப்பதிலதான் வந்திருந்தேன். நீ விரும்பவில்லை என்றால் போறன்' என்று கதைகொடுத்தன்.

'நான் உன்னைக் குத்தமாட்டன். நீ செய்த உதவிக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறன். நான் பரிசுத்தமானவள் என்பதை நீ ஊர் உலகத்துக்குச் சொல்ல வேண்டும். என்னுடைய கணவர் மகேந் திரன். ஊருக்குத் தெரியாது நீ இப்ப அறிந்து கொள். சந்தர்ப்பம் கிடைச்சா இதை அவரிட்டயும் சொல். அவர் உன்னை மன்னிப்பார்.'

ஆரிட்டடி கதையளக்கிறாய் என்று பாய்ந்தேன். அவள் விலகி விட்டாள். நான் அவளது காலடியில் விழுந்தேன். நான் எழுவதற்கிடையில் அவள் தன் நெஞ்சில் கத்தியைப் பாய்ச்சி விட்டாள். நான் பயந்து கத்தியபடி ஓடிவிட்டேன்'' என்று பேச்சை நிறுத்திய சுந்தரம்,

''மச்சான் உனக்கு இவ்வளவு போதும்'' என்றான். கண்களில் நீர் தானாகவே வழிய பெண்ணையும் விடக் கேவலமாக கேவிக்கேவி அழுதான் மகேந்திரன்.

''இப்ப எங்க அவன்?'' என்றான்.

''அவன் எங்கென்றே தெரியாது. அவனுடைய கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்து இருக்க வேணும் அந்தக் கவலையை விடு நீ... நீ இப்போது சிலவேளை மன்னிக்கலாம். ஆனால், அவளுடைய தற்கொலைக்கு காரணம் அவனேதான்''

ஒன்றும் பேசாமல் எழுந்து நடந்தான் மகேந்திரன். அவன் பின்னால் வந்தான் சுந்தரம். டேப் றெக்கோடரை கொடுத்துவிட்டு மணலில் கிடந்த சைக்கிளை தள்ளிகொண்டு வந்தான்.

''மச்சான் உன்னிட்ட நான் ஒப்படைக்க இருந்த ஒரு பொறுப்பு என்னுடைய வாழ்கையை கதையாய் எழுதத் தெரிந்த ஒருவரிடம் ஒப்படைப்பதுதான். இப்ப உனக்கு பல விஷயம் தெரிகின்ற படியால், நீயே இதற்கு உகந்தவன். வீட்டில் ஒரு பையில் மற்றக் கடிதங்கள் இருக்கின்றன'' என்று கூறிவிட்டு நடந்தான்.

அடுத்த நாள் காலை அவனுடைய பணமெல்லாம் கம்பனியில் இருந்து வந்திருந்தது. வங்கிக்குச் சென்றதும் இவ்வளவு பெரிய தொகையை மாற்ற முடியாது கணக்கில் தான் போட முடியும் என்றார் மனேஜர்.

செய்ய வேண்டிய ஏற்பாட்டை எல்லாம் ஏற்கனவே செய்து வைத்திருந்தான். அவற்றை செய்து எடுத்துக் கொண்டு நேரே மாமியிடம் சென்றான். ''மாமி உங்களுடைய எதிர்கால வாழ்வுக்கு இந்தாங்க இராசாத்தியின் சேமிப்பு'' என்று கொடுத்தவன் வணங்கிவிட்டு, நீங்கள் மாதாமாதம் வட்டியை எடுக்கலாம். இரண்டு வருடம் முடிய முதலை எடுக்கலாம். நான் ஏதும் பிழை செய்திருந்தா என்னை மன்னியுங்க'' என்று கூறிவிட்டு பதிலுக்கு காத்திராமல் புறப்பட்டு விட்டான்.

வீட்டுக்குச் சென்றவன் படுத்து எழுந்து விட்டு, மாலை சவக்காலைக்குச் சென்றான். மாலையாகியதும் அங்கே சென்ற சுந்தரம் அவனைப் பிணமாகவே கண்டான். பக்கத்தில் டேப் றெக்கோடர் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி பரவியதும் தகப்பனாருக்குச் 'ஹாட் அட்டாக்'; டாக்டர் மருமகனாலும் முடியவில்லை. பெரிய வைத்திய சாலைக்கே கொண்டு செல்ல வேண்டி ஏற்பட்டது.

கூட்டத்தில் டேப் றெக்கோடரை ஒன் பண்ணினான். 'ராசாத்தி உன்னைக் காணாத நெஞ்சு' பாடல் ஒலித்தது. முடிவில் சுந்தரத்துக்குப் பேசியிருந்தான்.

"கட்டிய கல்லறை எனக்காகத்தான். ஊர்வலம் ஏதுவும் வேண்டாம். இங்கேயே என்னை இராசாத்திக்குப் பக்கத்தில் புதைத்து விடு. 'கல்லறையில் இராசாத்தியின் அன்பு நெஞ்சு இங்கே உறங்குது' என்று எழுதிவிடு. வீட்டில் உனக்காக ஒரு பையும் பெட்டியும் இருக்கின்றன. அதில் பணமும் எனது கதையும் இருக்கின்றன. செய்ய வேண்டியதையும் எழுதி யிருக்கிறேன். அதன்படி செய்வாய் என்று எதிர்பார்த்து விடை பெறுகிறேன். கடைசி வரை எனக்கு நல்ல நண்பனாக இருந்த உனக்கு நன்றி!"

அவனுக்காக அழாத கண்கள் இல்லை. ஆண், பெண் அனைவருமே சவக்காலையில் கூடிக்கலைந்தனர்.

இராசாத்தி இல்லாத அவன் வாழ்வு இத்தோடு நிறைவு பெற்றது.

**முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எழுத்துலகில் 50 ஆண்டுகளுக்கு மேலான சாதனையுடன் வலம் வருவதென்பது சாமானியமானதொன்றல்ல. அப்படிப்பட்ட முகில்வண்ணன், 57 வருடங்களாக எழுதிவரும் ஒரு மும்மொழி வல்லுனர். 3 மொழிகளிலும் படைப்புகளைப் படைத்து விருதுகளும் பட்டங்களும் பெற்றுள்ளார். அவரது படைப்புகள் விருதுகளைப் பெற்றிருக்கின்றன. பரிசுகளைப் பெற்றிருக்கின்றன. பட்டங்களைப் பெறவைத்திருக்கின்றன.

'தான்அறிந்த நல்லவற்றை பிறருக்கும் தெரியப்படுத்த வேண்டும். இல்லையேல் முன் ஏழு பிறவிக்கும் பின் ஏழு பிறவிக்கும் பாவங்கள் சூழும்' என மகாபாரதம் கூறிநிற்கிறது. அதற்கு முன்னுதாரணம் இவர்.

இவரொரு பல்பரிமாண ஆளுமை பொருந்திய எழுத்தாளர். அதாவது, அவரொரு கவிஞராக, நாவலாசிரியனாக, சிறுகதை எழுத்தாளனாக, சிறுவர் இலக்கியப் படைப்பாளியாக, வரலாற்றாசிரியராக 1970களிலிருந்து எழுதிக்குவித்து வருகிறார். ஆனால் அமைதியாக, ஆழமாக, ஆளுமையாக.

கிழக்கிலங்கையில் நாவல் எழுதுபவர்கள் குறைவு. அமரர் அ.ஸ.அப்துல்சமது, அன்புமணி செ.குணரெத்தினம், இரா.கிருஸ்ணபிள்ளை வரிசையில் முகில்வண்ணனும் முதன்மை வகிப்பது புதுமையல்ல.

விபுலமாமணி தேசமான்ய
வி.ரி.சகாதேவராஜா *(M.Ed.) (ADE)*
செயலாளர் -
அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவை.

ISBN 978-955-38729-0-6
9 789553 872906 >

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org